க. பொ. த. (சா. த.) தமிழ்மொழி

புதிய 'அ', 'ஆ' பாடத்திட்டப் பாடநூல்

நாட்டார் பாடல்கள்

க. பொ. த. (சா. த.)

தமிழ்மொழி

(புதிய பாடத்திட்டப் பாடநூல்)

நாட்டார் பாடல்கள்

(தொகுப்பு)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதற்பதிப்பு 1976
இரண்டாம் பதிப்பு 1980
எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

இலவசக் கல்வியை முழுமையாக வழங்கவேண்டுமாயின் பாடநூல்களும் இலவசமாக வழங்கப்படவேண்டும் எனும் ஆலோசனை, முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், 1945 சனவரி 24ஆந் தேதி, அப்போது சட்டசபையிலே களனித் தொகுதி உறுப்பினராக விளங்கிய தற்போதைய சனாதிபதி மேன்மை தங்கிய ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. அவர்களுடைய ஆணைப்படி அவ்வாலோசனை 1980ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து செயலாக மலர்ந்தமை காரணமாகவே இன்று இந்நூல் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

**நல்லன கற்று
நலம் பெறுவீரென
நம்மரசளிக்கும்
நன்கொடை இந்நூல்**

**நன்கிதைப் பேணி
நலமே கற்று
நற்குணம் பெற்ற
நற்குடி யாவீர்!**

லயனல் ஜயதிலக
கல்விச் சேவைகள் அமைச்சர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

முன்னுரை

கல்வியமைச்சின் தமிழ்மொழிப் புதிய பாடத்திட்டத்திற்கு ('அ' பாடத்திட்டத்திற்கும் 'ஆ' பாடத்திட்டத்திற்கும் பொதுவாக) அமையுமாறு, "நாட்டார் பாடல்கள்" எனும் இந்நூல் தொகுத்தளிக்கப்படுகிறது. ஆதலின், இந்நூல் 9ஆம், 10ஆம் தரங்களிலே தமிழ்மொழி பயிலும் மாணுக்கருக்கு உரியதாகும்.

இத்தொகுப்புநூல், மாணுக்கர்களுக்கேற்ற விளக்கக் குறிப்புகளுடன் வெளியிடப்படுகிறது.

இந்நூல், சிறப்புற வெளிவருதற்கு ஆலோசனை வழங்கிய பாடநூல் ஆலோசனைக் குழுவினருக்கும் தொகுப்பாசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

கலாநிதி தி. காரியவசம்
ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு-10.
1981-03-01

நாட்டார் பாடல்கள்

(தொகுப்பு)

பதிப்பாசிரியர் குழு :

கலாநிதி க. கசிந்திரராசா

கலாநிதி அ. சண்முகதாஸ்

எம். ஏ. நுஃமான்

செ. வேலாயுதபிள்ளை

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
1.0	வாழ்த்துப் பாடல்	
	1.1 மருத்துவிச்சி வாழ்த்து	28
2.0	தாலாட்டுப் பாடல்கள்	
	2.1 அணில் கோதா மாம்பழமே	30
	2.2 முதிர விளைஞ்ச முத்து	30
	2.3 முத்தாக நீயொருத்தன்	31
	2.4 தம்பி குதிபாய்வான் தன்தாயார் மடிமேலே	31
	2.5 கோவலரே நித்திரை போ	32
	2.6 சீதேவி நித்திரைசெய்	32
	2.7 உபதேசப் பிள்ளை தாராட்டுச் சிந்து	34
3.0	விளையாட்டுப் பாடல்கள்	
	3.1 சாய்ந்தாடு பாவா	36
	3.2 கிட்டியடித்தல்	37
	3.3 கும்மி — 1	37
	3.4 கும்மி — 2	38
	3.5 கோலாட்டம்	39
	3.6 கொம்பு விளையாட்டு	39
	3.7 ஊஞ்சற் பாட்டு	41
4.0	வேடிக்கைப் பாடல்கள்	
	4.1 சந்த மாமா	42
	4.2 ஏண்டி குட்டி	42
	4.3 எலிப்பாட்டு	43
	4.4 சிங்கிலி நோனு	44
5.0	காதற் பாடல்கள்	
	5.1 காதலன் கூற்று	45
	5.2 காதலி கூற்று	45
	5.3 தோழி கூற்று	46
	5.4 காதலன் பிரிவுணர்த்தல்	47
	5.5 காதலர் சல்லாபம்	47

6.0 தொழிற் பாடல்கள்

6.1 ஏற்றப் பாடல் 49
6.2 ஏர்பூட்டும்போது பாடும் பாடல் 49
6.3 ஏர்ப் பாட்டு 49
6.4 அருவிவெட்டுப் பாடல் 51
6.5 அறுவடைப் பாடல் 51
6.6 மீன்பிடிகாரர் பாடல் 52
6.7 தோணிக்காரன் பாடல் 52
6.8 தேயிலைத்தோட்டத் தொழிலாளர் பாடல் 53
6.9 சாலை அமைப்போர் பாடல் 53

7.0 ஒப்பாரிப் பாடல்கள்

7.1 தாயாரின் ஒப்பாரி 54
7.2 மனைவியின் ஒப்பாரி 55
7.3 சீரழிவை யார் மதிப்பார் 56
7.4 மையத்துப் புலம்பல் 56

8.0 வசந்தன் பாடல்கள்

8.1 முயிற்று வசந்தன் 58
8.2 கிறுகு வசந்தன் 59
8.3 களரி வசந்தன் 60

9.0 நாடகப் பாடல்கள்

9.1 அனுவுருத்திர நாடகம் 62
9.2 அப்பாஸ் நாடகம் 63

10.0 கதைப் பாடல்கள்

10.1 கட்டபொம்மு கதை 67
10.2 சைத்தூரன் கிஸ்ஸா 73

விளக்கக் குறிப்புகள் 78

முன்னுரை

நாட்டார் பாடல்

1. பொதுக் குறிப்புகள்

I

ஏட்டுக் கல்வி பெரும்பாலும் இல்லாத நாட்டு மக்களிடையே, எழுதாக் கவிகளாகத் தொன்றுதொட்டு வழங்கிவரும் பாடல்கள் எல்லா மொழிகளிலும் உள்ளன. பாடல்கள் மட்டுமன்றிக் கதைகள், பழமொழிகள் போன்றனவும் உள்ளன. இவை எல்லாவற்றையும் ஒருசேரக் குறிப்பதற்கு ஆங்கிலத்தில் Folk Lore என்னும் பெயர் வழங்குகின்றது. தமிழ் மொழியிலே இத்தகைய இலக்கியத்தைக் குறிப்பதற்கு நாட்டுப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், கிராமியப் பாடல்கள், பாமரர் பாடல்கள், மக்கள் கவிதைகள், எழுதாக் கவிதைகள், வாய்மொழி இலக்கியம், பொதுமக்கள் இலக்கியம், நாட்டார் இலக்கியம், நாட்டிலக்கியம் என்பன போன்ற பல பெயர்கள் வழங்கிவருகின்றன. பொதுவாக நோக்குமிடத்து, இப்பாடல்கள் நாட்டுப் புறங்களில் வாழும் எழுத்தறிவில்லாத, பெயரறியாக் கவிஞர்களாற் பாடப்பெறுபவை என்னும் கருத்தே இப்பெயர்களில் இழையோடியிருப்பதைக் காணலாம். எழுத்தறிவு அதிகம் இல்லாத பாமர மக்களாற் பாடப்பெறுபவை யாயினும், இவை இசை கலந்த இனிய பாடல்களாயும் கேட்பார் செவிக்கும் இதயத்துக்கும் இன்பமளிக்க வல்லனவாயும் உள்ளன. இதனாலே, இப்பாடல்களைக் 'கவிதைகள்' என்றும் 'இலக்கியம்' என்றும் நாகரிக உலகம் ஏற்றுக் கொள்கின்றது.

இத்தகைய இலக்கியத்தைப் பொதுவாக இரு தரங்களாகக் கருதலாம். பழங்குடி மக்களிடம் வழங்கும் கவிதைகள், பாடல்கள், பழமொழிகள் முதலியன ஒரு தரத்தில் வைத்து எண்ணப்படுவன. நாகரிகம் வாய்ந்த மக்களிடையே வாய்மொழி மரபாக வழங்கும் பாடல்கள் மற்றொரு தரத்தில் வைத்து மதிக்கப்படுவன. பழங்குடி மக்களிடம் வழங்கும் இலக்கியம், தலைமுறை தலைமுறையாக வாய்மொழி மரபிலே கையளிக்கப்பட்டு வருவது; அது பெரும்பாலும் அதிக மாற்றத்துக்கு இலக்காகாமலே பேணிவரப்படுவது. ஆனல், நாகரிக மக்களிடையே வழங்கிவரும் நாட்டார் இலக்கியம் அடிக்கடி

மாற்றத்துக்குள்ளாகின்றது. பழங்குடி மக்கள் இக்கால நாகரிகத்தினின்றும் ஒதுங்கி வாழ்வதாற் பரம்பரையாக வழங்கி வரும் தமது வாய்மொழி இலக்கியத்தைப் பாதுகாப்பதிற் கண்ணும் கருத்துமாயிருப்பர். நாகரிகச் சூழலிலே வாழும் நாட்டுப்புற மக்கள் மெல்ல மெல்ல நாகரிகத் தாக்கத்துக்கு இலக்காகி வருவதால், அவர்களின் வாய்மொழி இலக்கியம் தொன்மை வடிவத்தைப் பெரும்பாலும் இழந்து விடுகிறது. இப்பாடல்களை எவரும் எழுதி வைக்காமையால், பல பாடல்களுக்கு நிலையான ஒரு வடிவம் இல்லை. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றவாறு இவை விரிந்தும் சுருங்கியும் திரிந்தும் நின்று வழங்குகின்றன. பழைய பாடல்கள் முற்றாக மறைந்து போக, அவற்றின் சாயலிலே புதிய பாடல்கள் அவ்வப்போது தோன்றுவதும் உண்டு.

நாட்டுப் பாடல்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. பாட்டுப் பாடுவது மனிதனது இயல்பாகவே தோன்றுகின்றது. பாரதியார் பாடியதுபோல இயற்கையிலே,

> ''கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்
> காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
> ஆற்று நீரோசை அருவி ஒலியினிலும்
> நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
> ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்''
>
> (குயிற்பாட்டு)

ஆதி மனிதன் நெஞ்சைப் பறிகொடுத்திருப்பான். இயற்கையில் உண்டாகும் ஒத்திசை பொருந்திய ஒலிகளினால் அவன் உள்ளம் தூண்டப்பெற்றுத் தானும் தன் குரலொலியை எழுப்பியிருப்பான். மொழி அவனுக்குத் துணையாக வந்தபோது, முதற் பாடல் தோன்றியிருக்கும். இப் பாட்டிலே இன்பங் கண்டவன் மேலும் மேலும் பாடி மகிழ்ந்திருப்பான். சமூகத்திலே கூட்டமாக வாழும் சூழ்நிலையில், ஒருவனைப் பின்பற்றிப் பலரும் பாடியிருப்பர். இந்த நிலையிலே பாடலோடு ஆடலையும் இணைத்திருப்பர். ஒருவர் ஓர் அடியைப் பாட, மற்றொருவர் அடுத்த அடியைப் பாடியும், ஒருவர் ஒரு வினாவைக் கேட்க, மற்றொருவர் அதற்கு விடையளித்தும் பாடி ஆடிவரும் சூழ்நிலையிலே பல்வகையான நாட்டுப் பாடல்களும் ஆடல்களும் தோன்றியிருத்தல்கூடும்.

நாட்டுப் பாடல்கள் அமைப்பிலும் கருத்துகளிலும் பல வகைப்படுவன. பல பாடல்கள் சிறு சிறு கவிதைகளாக உள்ளன. ஆயினும், சில பாடல்கள் தொடர்ந்து பலநாட் பாடத்தக்க

நீண்ட கதைப் பாடல்களாகவும் உள்ளன. மக்கள் ஓய்ந்திருக்கும் வேளைகளில் மட்டுமன்றிப் பல்வேறு வகையான தொழில்களைச் செய்யும்போதும் பாட்டுப்பாடி மகிழ்ந்தனர். முக்கியமாகப் பலர் கூடிக் கூட்டாகத் தொழில்புரியும்போது, ''ஆடிப் பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது'' என்ற உண்மையை உணர்ந் துள்ளனர். இதனால், பல்வேறு தொழில்கள் பற்றிய பாடல்கள் பல்கிப் பெருகியுள்ளன. இனி, ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து வேலை செய்யும்போது, தொழிலாளிகள் உற்சாகம் கொள்வது இயல்பே. இத்தகைய சூழ்நிலைகளில், காதற் சுவையுள்ள பாடல் களும் ஆண் பெண் ஏசல் போன்ற போட்டிப் பாடல்களும் தோன்றுகின்றன. பெண்களுக்கே சிறப்பாக உரிய பல பாடல் களும் உள்ளன. தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, ஊஞ்சல், கோலாட்டம் போன்றவை இவ்வகையின. வேடிக்கை விளை யாட்டிலும் பல பாடல்கள் பிறக்கின்றன. இவை தவிர, பண்டிகைகள், கொண்டாட்டங்கள், விழாக்கள், களியாட்டங் கள், கடவுள் வழிபாடுகள், சடங்குகள் போன்ற சந்தர்ப்பங் களில் நாட்டு மக்கள் பாடியாடும்போதும் நாட்டுப் பாடல்கள் தோன்றுகின்றன. நாட்டு மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த வீரதீரர்களின் வாழ்க்கை, கதைப் பாடல்களாக உருவெடுக் கின்றது. தேவர்களின் செயல்களையும் பழைய வீரர்களின் கதைகளையும் நாடகமாக்கி ஆடும்போது நாடகப் பாடல்கள் தோன்றுகின்றன. இவ்வாறு நாட்டார் இலக்கியம் பல்வேறு சந்தர்ப்பங்களிற் பாடத்தக்க, பல்வேறு வகையான, பல்வேறு அளவுடைய, பல்சுவைப் பாடல்களைக் கொண்டதாக விளங்கக் காணலாம்.

தமிழ் மொழியில் ஏட்டு மொழி இலக்கியம் போலவே நாட்டு மக்களிடை வழங்கும் எழுதாக் கவிதை இலக்கியமும் நல்ல வளமுடையது. தமிழருடைய வாழ்விலே பிறப்பு முதல் இறப்பு வரையும் பாடல்கள் பின்னிப் பிணைந்துள்ளன; குழந்தை பிறக்கும்போது மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுகின்றாள். பின்பு அன்னையானவள் தாலாட்டுப் பாடுகின்றாள்; அமுதூட்டும் போதும், பிள்ளைக்கு விளையாட்டுக் காட்டும்போதும், கதை சொல்லும்போதும் பாடுகின்றாள். பிள்ளை சிறுவனாக வளர்ந்து, தோழர்களோடு விளையாடும்போது விளையாட்டுப் பாடல்களை யும் வேடிக்கைப் பாடல்களையும் பாடி மகிழ்கின்றான். கட்டிளம் பருவத்திற் காதற் பாடல்களை இசைக்கின்றான். மற்றவர்க ளோடு கூடித் தொழில் புரியும்போது தொழிற் பாடல்களைப் பாடி அலுப்புப் போக்குகின்றான். கடவுள் வழிபாட்டிலும் சமூகக் கொண்டாட்டங்களிலும் கலந்துகொள்ளும்போதும்

பாடுகின்ருன்; பின்பு, இறக்கும்போது மகளிர் ஒப்பாரி பாடு கின்றனர்; இவ்வாறே இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடாத்தும் நாட்டு மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்த இப் பாடல்களை வாழ்க்கையை மையமாக வைத்து வகைப்படுத்தலாம்;

II

இனி, செம்மொழி இலக்கியம் எனப்படும் ஏட்டுப் பாடல்க ளுக்கும் பாமரர் இலக்கியம் எனப்படும் நாட்டுப் பாடல்களுக்கு முள்ள தொடர்பு நோக்கற்பாலது. இவ்விருவகை இலக்கியங்க ளுள்ளும் எது முந்தியது என்பதுபற்றி ஐயம் எழுவதற்கு இட மில்லை. எந்த மொழியிலும் நாட்டுப் பாடல்களே முதற்கண் தோன்றியுள்ளன. இவை மக்களின் பேச்சு மொழியிலே இயல் பாகத் தோன்றி, அவர்களின் இன்பம், துன்பம், ஆசை, நம் பிக்கை, கனவு, காதல், விருப்பு, வெறுப்பு ஆகிய எல்லா வற்றையும் வெளிப்படுத்துவன. பேச்சு மொழியிலிருந்து உரு வாக்கப்பட்ட எழுத்து மொழி ஆட்சி பெறத் தொடங்கியபின், இலக்கணகாரர் வகுத்துவிட்ட இலக்கண விதிகளுக்கு அமைய இலக்கியப் புலவர்கள் கவிதை இயற்றலாயினர். இவர்களுடைய கவிதைகளுக்கும் காவியங்களுக்கும் ஊற்ருய் இருந்தவை நாட்டுப் பாடல்களேயாம். பற்பல சந்தர்ப்பங்களில் நாட்டுப் பாடல்களின் பொருளையும் சந்தத்தையும் வடிவையும் இலக்கியப் புலவர்கள் ஏற்றுக்கொண்டு, செம்மை செய்து, புதிய புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கியுள்ளனர்.

உலக இலக்கியங்களிலே ஒப்பற்ற பெருங் காப்பியங்களா கப் பேசப்படும் இலியட், ஒடிசி, இராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்கள் எல்லாம் ஒரு காலத்தில் நாட்டு மக்க ளிடையே புகழ்பெற்று விளங்கிய கதைப் பாடல்களிலிருந்தே உருவாக்கப்பட்டவை என்பதை இலக்கிய ஆராய்ச்சியாளர் எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழில் முதன்முதல் எழுந்த காப் பியமாகிய சிலப்பதிகாரமும் நாட்டு மக்களின் நாவில் நட மாடிய ஒரு பழைய கதைப்பாடலை ஆதாரமாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது என்று கருத இடமுளது. சங்க இலக் கியத்திலும் பிற்கால இலக்கியத்திலும் நாட்டுப் பாடல்களின் செல்வாக்கை நாம் காண்கிருேம். இன்று நமக்குக் கிடைத் துள்ள மிகப் பழைய செய்யுள் இலக்கியமாகிய சங்கப் பாடல்க ளுக்கு—குறிப்பாக, ஐந்திணை தழுவிய அகப்பாடல்களுக்கு— நாட்டு மக்களிடை வழங்கிய காதற் பாட்டுக்களே முன்னேடி களாயிருந்தன என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை

நிலங்களிலும் வாழ்ந்த மக்களின் காதல் வாழ்க்கையில் முனைப்பான ஒழுக்கங்களை உரிப்பொருளாக வைத்தே ஐந்திணை அகப் பாடல்களைப் புலவர்கள் பாடினர். இவை எல்லாம் ''இல்லது, இனியது, நல்லது'' எனப் புலவர் நாட்டிய புலனெறி வழக்கைத் தழுவியே பாடப்பட்டவையாயினும், அவ்வந்நிலங்களில் வழங்கிய நாட்டுப் பாடல்களே இவற்றுக்கு முன்மாதிரியாய் அமைந்தனவென நம்பலாம்.

பழந்தமிழ் நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் எத்தனையோ வகையான நாட்டுப் பாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்னும் நூலிலே, முத்தமிழ் என்னும் கட்டுரையில், உ. வே. சாமிநாதையர் எடுத்துக் கூறிய அக்கச்சி, அச்சோ, அப்பூச்சி, அம்மானை, ஆற்றுவரி, இம்பில், உந்தியார், ஊசல், எம்பாவை, கப்பற் பாட்டு, கழல், கந்துகவரி, காக்கை, காளம், கானல்வரி, கிளிப்பாட்டு, குணலை, குதம்பை, குயில், குரவை, குறத்தி, கூடல், கொச்சகச் சார்த்து, கோத்தும்பி, கோழிப்பாட்டு, சங்கு, சாயல்வரி, சார்த்துவரி, சாழல், செம்போத்து, தச்சராண்டு, தச்சாண்டி, தாலாட்டு, திணைநிலைவரி, திருவங்கமாலை, திருவந்திக்காப்பு, தெள்ளேணம், தோணோக்கம், நிலைவரி, நையாண்டி, பகவதி, படைப்புவரி, பந்து, பல்லாண்டு, பல்லி, பள்ளியெழுச்சி, பாம்பாட்டி, பிடாரன், பொற்சுண்ணம், மயங்கு திணை நிலைவரி, முகச் சார்த்து, முகமில்வரி, முகவரி, முரிச் சார்த்து, வள்ளைப்பாட்டு என்பனவும் ஆநந்தக்களிப்பு, கண்ணி, கீர்த்தனம், கும்மி, கோலாட்டம், சிந்து, நொண்டிச் சிந்து முதலிய இசைப்பாட்டுகளும் நாட்டுப் பாடல் வகைகளேயாம். இன்னும், சிலப்பதிகார உரையிலே, பல்வகைக் கூத்து (அரங்கேற்று காதை, வரி 13) என்பதற்கு விளக்கங் கூறுமிடத்து அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டிய கலி வெண்பாட்டொன்று, தமிழ் நாட்டிலே முற்காலத்தில் வழங்கிய எத்தனையோ வகையான கூத்துப் பாடல்களைக் குறிப்பிடுகின்றது.

இவையெல்லாம் முன்பு தமிழில் வழங்கிய நாட்டுப் பாடல்களின் வளத்தை நமக்குக் காட்டுகின்றன. பொது மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கிய இந்த நாட்டுப் பாடல்களிற் சிலவற்றுக்கோ, பலவற்றுக்கோ இயற்றமிழ்ப் புலவர்கள் இலக்கிய வடிவங் கொடுத்துள்ளனர். இளங்கோவடிகள், மாணிக்கவாசகர், பெரியாழ்வார் போன்ற புலவர்களின் நூல்களிலே இவற்றுக்கு உதாரணங்கள் உள்ளன. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் பாடியுள்ள கானல்வரி,

வேட்டுவவரி, அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி போன்ற வரிப்பாடல்களும் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்ற குரவைப் பாட்டுகளும் நாட்டுப் பாடல்களை அடியொற்றி அமைந்தவை. மாணிக்கவாசகர் திருவாசகத்திலே பாடிய அம்மானை, உந்தியார், எம்பாவை, கோத்தும்பி, சாழல், தெள்ளேணம், தோணோக்கம், பள்ளியெழுச்சி, பூவல்லி, பொற்சுண்ணம், பொன்னூசல் என்னும் பதிகங்கள் பெண் பிள்ளைகளின் உலகியல் பற்றிய விளையாட்டுப் பாடல்களுக்கு இலக்கிய வடிவமும் பேரின்பப் பொருளும் கொடுக்கப் பெற்றவையே. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய தாலாட்டு, தமிழ்நாட்டுத் தாய்மாரிடை வழங்கிவந்த தாலாட்டுப் பாடல்களின் சாயலிலேயே உருவாக்கப்பட்டதாகும்; சித்தர்கள் பாடியுள்ள பலவகையான இசைப்பாடல்கள் எல்லாம் நாட்டுப் பாடல்களின் சந்தங்களிலே அமைந்திருப்பதும் நோக்கத்தக்கது. இனி, பிற்காலத்தில் எழுந்த குறவஞ்சி, பள்ளு, நொண்டிச்சிந்து, கும்மி முதலிய இலக்கிய வடிவங்களுக்கும் நாட்டுப் பாடல்களே தோற்றுவாயாக உள்ளன.

தமிழ் மொழியிலுள்ள ஏட்டிலக்கியத்தின் வரலாற்றை ஆராய்ந்தால், நாட்டுப் பாடல்களிலிருந்தே ஏட்டுப்பாடல்கள் காலத்துக்குக் காலம் ஊட்டம் பெற்றுள்ளன என்னும் உண்மையைக் காணலாம். ஏட்டிலக்கியமும் நாட்டிலக்கியமும் எப்பொழுதும் கொண்டும், கொடுத்தும் உறவாடி வந்துள்ளன. பொதுவாக ஏட்டிலக்கியமே நாட்டிலக்கியத்திலிருந்து கடன் எடுப்பதும் வழக்கம். ஆயினும், நாகரிக மக்களிடையே வழங்கிய நாட்டிலக்கியம், ஏட்டிலக்கியத்தின் தாக்கத்தைப் பெறுவதும் இயல்பே. நாட்டுப்புறக் கவிஞர்கள் பெரும்பாலும் எழுத்தறிவு இல்லாதவர்களாயினும் கேள்விச் செல்வம் ஓரளவேனும் உள்ளவர்களேயாவர். அவர்கள் பாரதம், இராமாயணம் போன்ற காவியக் கதைகளையும், கந்தபுராணம், பெரிய புராணம் போன்ற புராணக் கதைகளையும் கதாப்பிரசங்கங்கள் மூலமும், புராணபடனங்கள் மூலமும், தெருக்கூத்து நிகழ்ச்சிகள் மூலமும் கேட்டறிந்திருப்பார்கள். இவ்வாறு கேட்டறிந்த ஏட்டிலக்கியக் கதைகளை அவர்கள் நாட்டு மக்களுக்கேற்ற கதைப் பாடல்களாகப் பாடியதன் பயனாகவே அல்லியரசாணி மாலை, அபிமன்னன் சுந்தரிமாலை போன்ற கதைப் பாடல்களும், அனுவுருத்திர நாடகம் போன்ற நாடகப் பாடல்களும் தோன்றியுள்ளன எனலாம். இனி, இத்தகைய கதைப் பாடல்களையும் நாடகப் பாடல்களையும் பாடும் நாட்டுப்புறக் கவிஞர்கள் முற்றாகவே கல்வியறிவு இல்லாதவர்களும் அல்லர். அவர்களுக்கு

ஓரளவேனும் ஏட்டுக்கல்வி வாசனை உண்டென்பதற்கு அவர்கள் பாடிய இலக்கியங்களே சான்று பகர்கின்றன. இந்த நாட்டுப் பாடல்கள், மொழி நடையிலும் யாப்பிலும் ஏட்டிலக்கியத்தை மெல்ல அணுகிச் செல்வனவாயுள்ளன. வசந்தன் பாடல்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாம். அல்லியரசாணிமாலை போன்ற கதைப் பாடல்களைப் புகழேந்திப் புலவர் பாடினுர் என வழங்கும் மரபும், இக் கவிஞர்கள் ''ஏட்டுக் கல்விப் புலமை'' உடையவர்கள் என்பதைப் புலப்படுத்தும்.

இனி, மறுபுறமாக, ஏட்டுக் கவிபாடும் புலவர்கள் பொது மக்களிடம் செல்வாக்குப் பெறவேண்டும் என்னும் விருப்பினுல் நாட்டுப் பாடல்களை அணுகுவதையும் காண்கின்ருேம். உயிருள்ள இலக்கியம் நாட்டு மக்களிடையே இருப்பதால் நல்லிசைக் கவிஞர்கள் தொன்றுதொட்டே நாட்டுப் பாடல்களிலிருந்து தம் கவிதைக்கு ஊட்டம்பெற்று வந்ததை ஏலவே கண்டோம். நவயுகத்துக்குக் கவிதைகள் பாடிய பாரதியார் நாட்டுப் பாடலின் இனிமையிலே உள்ளம் பறிகொடுத்துப் பின்வருமாறு பாடுகின்ருர் :

''ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்ருெடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
.... நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்''

(குயிற் பாட்டு)

இவ்வாறு நாட்டுப் பாடலில் ஈடுபாடு காட்டிய பாரதியார், தமது பல்வேறு பாடல்களில் நாட்டுப் பாடலின் அமைப்பையும் சந்தத்தையும் பயன்படுத்தியிருக்கிருர். சிறப்பாகப் பாஞ்சாலி சபதத்தில் நாட்டுப் பாடலின் நடையைப் பின்பற்றிய புதிய காவிய மரபொன்றையே அவர் தோற்றுவித்துள்ளார். பாரதியாருக்கு முன்னரும் கோபால கிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் கும்மி போன்ற நாட்டுப்பாடல் வடிவங்களைப் பின்பற்றிப் பாடியுள்ளனர். அண்மைக் காலத்திலும், இக்காலத்திலும் தாலாட்டுப் பாடல்களைப் பின்பற்றிப் பற்பல பாடல்களைக் கவிஞர்கள் பாடியுள்ளனர். சீகாழிச் சிற்றம்பல நாடிகள் தாலாட்டு, தத்துவராயர் தாலாட்டு, நம்மாழ்வார் தாலாட்டு, நால்வர் தாலாட்டு, நீதிநெறித் தாலாட்டு முதலியன மரபுமுறையாக வந்த சமய, தத்துவ, அறநெறிக் கருத்துக்களைத் தாலாட்டுப் பாடல் வடிவிலே தருவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகளாகும். இவற்றைவிட,

பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, வாணிதாசன், முடியரசன் போன்ற கவிஞர்கள் தாய்மார்கள் பாடத்தக்க இனிய சில தாலாட்டுப் பாடல்களை இயற்றித் தந்துள்ளனர். மேலும், நாட்டார் பாடல்களுக்கே சிறப்பாகவுரிய கும்மி, குறவஞ்சி, நொண்டிச்சிந்து, தெம்மாங்கு போன்ற சந்தங்களை இக்காலக் கவிஞர்களும் திரையிசைப் பாடகர்களும் பெரிதும் பயன்படுத்துவதையும் காண்கின்றோம்.

ஒருபால் நாட்டிலக்கியம் ஏட்டிலக்கியத்தை அணுக, மறுபால் ஏட்டிலக்கியம் நாட்டிலக்கியத்தை அணுகும் போக்கை மேலே கண்டோம். இந்த நிலையிலே இருவகை இலக்கியங்களுக்கும் வரையறை வகுத்து எல்லைக்கோடு வரைவது எளிதன்று. எனினும், சில நியதிகளை அடிப்படையாகக்கொண்டு இவற்றை வேறுபடுத்திக் காட்டுவதும் அவசியமாகின்றது. நாட்டிலக்கியம் கல்வியறிவு அதிகம் இல்லாத நாட்டு மக்களாற் பாடப்பட்டு வாய்மொழி இலக்கியமாக வழங்கி வருவது என்றும் ஏட்டிலக்கியம் கற்றுவல்ல புலவராற் பாடப்பெற்று எழுத்து வழக்கில் வழங்கி வருவது என்றும் பொதுவாக இவற்றிடை வேற்றுமை கூறலாம். கல்வியறிவு இல்லாத மக்கள் தாம் இயல்பாக வழங்கும் பேச்சு மொழியிலேயே தமது உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடுவர். இதற்கு மாருக, கற்று வல்ல புலவர்கள் இலக்கண வரம்புடைய செம்மொழியிலே அவற்றை வெளியிடுவர். நாட்டுப் பாடற் கவிஞர்கள் திட்டமிட்டுச் சிந்தனைசெய்து தமது கருத்துக்களை ஒழுங்குபடுத்தி வெளியிடாமல், அவை தம் உள்ளத்தில் எழுமாறே பாடிவிடுவர். இதனால், கூறியதுகூறல், கருத்தொழுங்கின்மை போன்ற சில குற்றங்களும் இப்பாடல்களில் இருத்தல்கூடும். கட்டுக்கோப்பான யாப்பினையும் நாம் நாட்டவர் பாடல்களில் எதிர்பார்க்க முடியாது. யாப்பில் உள்ள குறைபாடுகளை இப்பாடல்களின் இசை ஈடுசெய்துவிடுகின்றது. இனி, நாகரிகம் என்ற போர்வையிலே, உணர்ச்சிகளை மூடி மறைத்து, வேறு வாய்பாட்டாற் கூறும் விரகுகளையும் நாட்டுக் கவிஞர்கள் அறியார். இதனால் உள்ளதை உள்ளவாறே வெளிப்படையாகக் கூறிவிடும் பண்பையும் நாம் நாட்டுப் பாடல்களிற் காண்கின்றோம். சிற்சில சந்தர்ப்பங்களில் இவ்வெளிப்படை நவிற்சி ''நாகரிக'' மக்களுக்கு விரசமாகவும் தோன்றக்கூடும். ஆயினும் இப் பாடல்களுக்குப் பொதுவாக எளிமை, நேர்மை, இனிமை, தூய்மை, வாய்மை என்னும் பண்புகள் இருப்பதனால், இவைகேட்போரின் இதயத்தை நேரே சென்று தொடக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்து விளங்குகின்றன. சுருங்கச் சொல்லின், நாட்டுப் பாடல்கள் தாமாகவே மலர்ந்து மணம் வீசும் காட்டு மலர்களுக்கு ஒப்பானவை எனலாம்.

இதற்கு மாருக ஏட்டிலக்கியம் செய்யும் புலவர்கள் தமது கல்வித் திறத்தாலும், கற்பனையாலும், புனைந்துரையாலும் கருத்துக்களை அணிபெறக் கூறுவதையே விரும்புவர். இவ்வாறு கூறுவதற்குச் செஞ்சொற்களைத் தெரிந்து இசைபடக் கோத்துக் கட்டுக்கோப்பான ஒரு வடிவத்திலே கருத்துக்களை வெளியிடுவர். கட்டுக்கோப்பான வடிவமே யாப்பு எனப்படுவது. உணர்ச்சி வெள்ளமாய்ப் பொங்கிவழியும்போது, வாயில் வந்த படி பாடினுல் அது கவிதையாகி விடாது. அது நம் உள்ளத்தை இயக்கவேண்டும். நீராவி வண்டியில் நீராவி பொங்கி வழிந்தால் வண்டி ஓடமாட்டாது. அந்த நீராவி ஓர் அறையில் அடைபட்டு வரும்போது, அது உரத்தோடு உந்தி வண்டியை ஓட்டுகிறது. இவ்வாறே கவிஞரின் உணர்ச்சியும் சிதறுண்டு போகாமல், யாப்பினுட் கட்டுப்பட்டு ஓர் ஒருப் பாட்டு வடிவம் பெறும்போதே, அது நம் உள்ளத்தை இயக்கும் கவிதை யாகின்றது. இந்த இலக்கணக் கட்டுக்கோப்புடைய யாப்பே ஏட்டுக் கவிதைக்குத் தனிச் சிறப்பாக அமைகின்றது எனலாம். ஆயின், வெறும் யாப்பு மட்டும் கவிதையாகி விடாது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. கவிதைக்கு உயிர் நிலையான பொருள் இல்லாதவிடத்து, அது உயிரில்லாத உடம் போடொக்கும். உணர்வின் வல்லோர் அணிபெறச் செய்யும் கவிதைகள், செயற்கையாய் அமைத்த கலைப்படைப்பாக என்றும் நின்று நிலவும். ஆனல், ஏட்டுக் கவிதை, அளவுக்கு விஞ்சிச் செயற்கை அலங்காரங்களை மேற்கொள்ளும்போதும் மக்கள் வாழ்க்கையிலிருந்து விலகிச் செல்லும்போதும் அது தன் உயிர்ப்பண்பை இழந்து வறண்டு போகின்றது. இவ்வாறு ஏட்டிலக்கியம் வறட்சியடையும் காலங்களிலே நல்லிசைப் புலவர்கள் நாட்டுப் பாடல்களிலிருந்து ஊட்டம் பெற்று ஏட்டிலக்கியத்துக்குப் புத்துயிர் அளிக்கின்றனர்.

III

நகரங்களில் வளரும் நாகரிகத்தினுல் நாட்டுப்புற வாழ்க்கை சீர்குலையாதிருந்த பழங்காலத்திலே நாட்டார் இலக்கியம் செழித்து வளர்வதற்கு வாய்ப்பிருந்தது. ஆனல், நாகரிகம் முதிர முதிர, நகராக்கம் பெருகப் பெருக, இயந்திரங்கள் மலிய மலிய, நாட்டு மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலை விரைவாக மாறி வருகின்றது. இந்த நிலையில் நாட்டார் இலக்கியம் புதிதாக வளர்ச்சியடையாதது மட்டுமன்றி, மறைந்துகொண்டும் வருகின்றது. உட்பிரதேசங்களிலுள்ள சிற்றூர்களிலேயே இன்னும் நாட்டுப் பாடல்கள் உயிரோடு வாழ்கின்றன. காலப் போக்கில் அவைகளுமே மறைந்துபோதலும் கூடும். நாட்டார் இலக்கியம் செழித்து வளர்ந்த அக்காலத்திலும், கல்வி கற்ற

நாகரிக மக்கள், கல்வி யறிவில்லாத நாட்டு மக்களைப் பாமரர் என்று ஓரளவு தாழ்த்தி மதிக்கும் மனப்பான்மை உடையவ ராகவே இருந்திருக்கின்றனர். ''வழக்கெனப் படுவது உயர்ந் தோர் மேற்றே, நிகழ்ச்சி யவர்கட் டாக லான'' (தொல், பொருள். சூ. 647) என்னும் தொல்காப்பியச் சூத்திரம் உயர்ந்தோர் வழக்கையே ஒப்புக்கொள்கின்றது. மொழி வழக்குப்பற்றிய இக்கொள்கையே இலக்கியத்துக்கும் கடைப் பிடிக்கப்பட்டதெனலாம். இத்தகைய மனப்பான்மை கற்றவர்க ளிடையே நிலவியதால் முன்னர் நாட்டார் பாடல்கள் 'இலக் கியம்' என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனால் இப் பாடல்களை ஏட்டில் எழுதிப் பாதுகாக்க எவரும் முன்வரவு மில்லை. அவை எழுதாக் கவிதையாக—வாய்மொழி இலக்கிய மாக—நாட்டு மக்களிடையே தலைமுறை தலைமுறையாக வழங்கி வந்தன. காலப்போக்கில் எத்தனையோ பாடல்கள் முற்றாகவே மறைந்தும் போயின. இந்த மனப்பான்மை பொதுவாக இருந்த போதும், நல்லிசைப் புலவர்கள் நாட்டார் பாடல்களிலே உண்மையான—உயிர்த்துடிப்புள்ள கவிதை இருப்பதைக் காணத் தவறவில்லை. அவ்வாறு கண்டவர்கள் அப்பாடல்களை எடுத்து அவற்றுக்கு உயர்ந்தோர் வழக்கு மொழியிலே இலக்கிய வடிவ மும் வழங்கினர். இவ்வாறு செய்தமையால், பழங்காலத்தில் வழங்கிய சில பல நாட்டுப் பாடல்வகைகள் இன்று ஏட்டிலக் கியத்தில் வாழ்வு பெற்றுள்ளன. எனினும், அவை தமது உண்மை வடிவிலே இல்லாமற் போனது இழப்பேயாகும்.

அண்மைக் காலத்தில், கலைத்துறைகளில் ஏற்பட்டுவரும் மறுமலர்ச்சி காரணமாக, உலகடங்கலும் நாட்டார் இலக்கி யத்துக்கு நல்ல மதிப்பு உண்டாகியிருக்கின்றது. பண்டைய மக்களின் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் சமய நம்பிக்கைகளையும் பிறவற்றையும் ஆராயும் மானிட வியலாரும், சமகால மக்களின் சமூக வாழ்க்கையை ஆராயும் சமூகவியலாரும், இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராயும் இலக்கிய வரலாற்றியலாரும், மொழியின் வளர்ச்சி வரலாற்றை ஆராயும் மொழியியலாரும், ஆடல், பாடல், ஓவியம் முதலிய அழகியற் கலைகளை ஆராயும் கலையிய லாரும் நாட்டார் இலக்கியத்தில் நாட்டங் கொள்கின்றனர். மக்கள் யுகம் மலர்ந்துவரும் இக்காலத்தில் பொது மக்களின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வாழ்க்கையை அறிவதற்கு நாட்டார் பாடல்களே நல்ல சாதனங்களாய் அமைகின்றன. மேலும், நாட்டார் இலக்கியத்திலே இசையும் கவிதையும் மொழியும் உயிருடன் வாழ்வதால், இன்றைய சமூகத்திலே இக்கலைத் துறைகள் புதுவளர்ச்சி பெறுவதற்கும் நாட்டுப் பாடல்களில் நாம் அக்கறை கொள்ளவேண்டியவராயுள்ளோம்.

இன்று, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலே நாட்டுப் பாடல் இயக்கம் மிகவும் செழித்து வளர்ந்து வருகின்றது. கச்சேரிகளிலும் அரங்குகளிலும் வானொலியிலும் நாட்டுப் பாடல்கள் முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் இசைக்கப்படுகின்றன. நாட்டுப் பாடல்களின் மெட்டிலே புதிய புதிய பாடல்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய இயக்கம் தென்னிந்தியாவிலும் நமது நாட்டிலும் சில ஆண்டுக் காலமாகத் தோன்றி வளர்ந்து வருகின்றது. தென்னிந்தியாவிலே பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு, கவிஞர் கண்ணதாசன் முதலியோர் நாட்டுப் பாடல்களின் மெட்டிலே புதிய கவிதைகளையும் திரையிசைப் பாடல்களையும் பாடி வருகின்றனர். இலங்கை வானொலியிலும் நாட்டுப் பாடல் இசையை நாம் இப்போது அடிக்கடி கேட்கின்றோம். இன்று ''மெல்லிசை, துள்ளிசை ('பொப்' இசை) என்ற புதிய இசை வகைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஈழத்து நாட்டுப் பாடற் கருவும் இவற்றுக்குப் புதிய சுவையினையும் வீற்றினையும் வழங்கக்கூடியனவாயுள்ளன.

நாட்டுப் பாடல் இயக்கம் தலையெடுத்துள்ள இக்காலத்தில் நம் பாடசாலைகளிற் படிக்கும் சிறுவர் சிறுமியரையும் இத்துறையில் அக்கறை கொள்ளச் செய்வது விரும்பத்தக்கதே. இதனாலேயே புதிய தமிழ்மொழிப் பாடவிதானத்தில் நாட்டுப் பாடல்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் வாழ்க்கையோடு தொடர்புள்ள இலக்கியத்தையும் கலைகளையும் நயப்பதற்கும், அவ்வாற்றால் அம்மக்களின் உள்ளத்தோடு நெருங்கி உறவு கொள்வதற்கும் நாட்டுப் பாடல்களை மாணவர் கற்பது வேண்டற்பாலதே. மேலும், வாழும் மொழிக்கும் ஏட்டு மொழிக்கும் உள்ள இடைத்தொடர்புகளை அறிந்து மாணவர் தமது மொழித்திறனை வளர்த்தற்கும் நாட்டுப் பாடல்கள் உதவும்.

தமிழில் உள்ள நாட்டுப் பாடல்களைத் தேடித் தொகுத்து வகைப்படுத்தி நூல்களாக வெளியிடுவதில் அண்மைக்காலத்தில் அறிஞர் பலர் முயன்று வந்துள்ளனர். தென்னிந்தியாவில் கி. வா. ஜகந்நாதன், நா. வானமாமலை, செ. அன்னகாமு, ஆர். அய்யாசாமி, பெ. தூரன், தமிழண்ணல் முதலியோர் இத்துறையில் ஈடுபட்டு, ஏராளமான நாட்டுப் பாடல்களைத் தொகுத்துத் தந்துள்ளனர். ஈழத்திலே வட்டாரக் கல்விப் பரிசோதகராயிருந்த தி. சதாசிவஐயர், இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்கிய வசந்தன் கவிகள் என்னும் நாட்டுப்பாடல்களைத் திரட்டி வெளியிட்டார். அவருக்குப்பின் வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், மட்டுநகர் எவ். எக்ஸ். சி. நடராசா, கலாநிதி சு. வித்தியா

னந்தன் போன்ற அறிஞர்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் முதலிய பிரதேசங்களில் வழங்கிய நாட்டுப்பாடல்கள் பலவற்றைத் தேடித் தொகுத்து வெளியிட்டுள்ளனர். இன்னும் தேடித் தொகுக்கவேண்டிய நாட்டுப் பாடல்கள் ஏராளமாக உண்டு. முக்கியமாக, மலையக மக்களிடையே வழங்கும் நாட்டுப் பாடல்களை இன்னும் முறையாகத் தொகுத்து வெளியிட முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. இத்துறையில் சி. வி. வேலுப்பிள்ளை, ஏ. பி. வி. கோமஸ், சாரல்நாடன், க. நவசோதி போன்ற சிலர் அக்கறை கொண்டு உழைத்து, மலையக நாட்டுப் பாடல்கள் சிலவற்றை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிட்டும் வருகின்றனர்.

இலங்கை முஸ்லிம் மக்களிடையே வழங்கும் நாட்டுப் பாடல்களும் தொகுக்கப்பட வேண்டியுள்ளன. ''மட்டக்களப்பு வசந்தன் கவித் திரட்டு'' (1940) என்னும் நூலுக்கு அதன் பதிப்பாசிரியர் எழுதிய ஆங்கில முன்னுரையிலே, முஸ்லிம் மக்களிடையே வழங்கிவரும் நாட்டுப்பாடல்கள் இன்னும் வளர்ச்சியடைந்து வருகின்றன என்றும், இவ்வளர்ச்சிக்கு முக்கியமாக முஸ்லிம் பெண்களே உதவுகின்றனர் என்றும், இப் பாடல்கள் பெரும்பாலும் காதல் பற்றியவையாயும் சிறுபான்மை உள்ளூர் நிகழ்ச்சிகள் பற்றியவையாயும் உள்ளன என்றும், மட்டக்களப்புப் பிரதேசத்தின் தென்பகுதியிலே, குறிப்பாகக் கரவாகுப் பற்று, அக்கரைப்பற்று என்னும் கிராமங்களிலுள்ள முஸ்லிம் பெண்கள் இத்தகைய கவிகளை இயற்றுவதிற் சிறந்து விளங்குகின்றனர் என்றும், முஸ்லிம் வண்டிக்காரர் தமது வண்டிகளை ஓட்டும்போதும், முஸ்லிம் பெண்கள் விறகு பொறுக்கும்போதும், தண்ணீர் எடுத்து வரும்போதும், வயலிலிருந்து வீடு திரும்பும் போதும் இன்றும் இத்தகைய கவிகளை இயல்பாகவே பாடுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பில் வழங்குபவை போன்றே மன்னார்ப் பிரதேசத்திலும் இத்தகைய காதற் பாட்டுக்கள் முஸ்லிம் மக்களிடையே வழங்குகின்றன. இலங்கை முஸ்லிம் மக்களிடை வழங்கும் இக் காதற் பாடல்கள் சிலவற்றைக் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களும், திரு. எவ். எக்ஸ். சி. நடராசா அவர்களும் தத்தம் நாட்டுப்பாடற் றொகுதிகளுள் சேர்த்திருக்கின்றனர். தென்னிலங்கையிலும் ஏனைய பிரதேசங்களிலும் வேறு பல்வகையான நாட்டுப் பாடல்கள் முஸ்லிம் மக்களிடையே வழங்கிவருகின்றன. இவைகளை எல்லாம் தேடித் தொகுத்து வகைப்படுத்தி வெளியிட்டால், இலங்கை முஸ்லிம் மக்களின் நாட்டுப்பாடல் வளத்தை நாம் நன்கு அறியலாம். முஸ்லிம் மக்களிடை வழங்கும் நாட்டுப் பாடல்களில் இஸ்லாமிய கலாசாரத்தோடு தொடர்புடைய அரபுச் சொற்கள் வெவ்வேறு அளவுகளிலே கலந்திருக்கக் காண்கிறோம்;

2. அழகியல் அமிசங்கள்

அழகு என்றால் என்ன? இந்த ஆராய்ச்சியில் நாம் இறங்குவோமாயின், அது தத்துவ விசாரணையாகிவிடும். ''அழகு என்பது புறத்தே பொருள்களிடத்துள்ள பண்பு அன்று; பொருளை நோக்குவோனது அகத்தில் உள்ள பண்பே அது'' என்று தத்துவ அறிஞர் ஒருவர் கூறுகின்றார். இந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டியதில்லை. எது நம் உள்ளத்தை ஈர்க்கின்றதோ, எது நம் உள்ளத்தில் இன்பக் கிளர்ச்சியை உண்டாக்குகின்றதோ, எது நம் உள்ளத்துக்கு நிறைவு தருகின்றதோ, அதுவே அழகு என்று நாம் பொதுவகையிற் கூறிவிடலாம். இந்த அழகை நாம் இயற்கைப் பொருள்களிலும் காணலாம்; செயற்கைப் பொருள்களிலும் காணலாம். இயற்கை அழகைக் ''கை புனைந்தியற்றாக் கவின்'' என்று வியக்கின்றோம். செயற்கை அழகைப் படைத்த மனிதன் திறமையை நயக்கின்றோம். நமது அழகுணர்ச்சியைத் தூண்டும் சாதனங்கள் இயல் (இலக்கியம்), இசை, நாடகம் (ஆடல்) என்பன முதன்மையானவை. இவற்றை நாம் அழகியற் கலைகளெனப் போற்றுகின்றோம். இந்த முத்திறக் கலைகளையும் அடிப்படையாகக் கொண்டே முத்தமிழ்ப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டார் பாடல்கள் இந்த முத்துறைக் கலைகளின் அமிசங்களையும் கொண்டவை. அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்னும் மூன்றையும் வளமுறச் செய்தவை; செய்தும் வருபவை. இவற்றைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

(அ) *இயல்:* இயல் என்னும்போது இலக்கியத்தையே நாம் முக்கியமாகக் கருதுகின்றோம். ஏட்டில் எழுதப்பட்டவையே இலக்கியம் என்ற குறுகிய கருத்து ஒரு காலத்தில் நிலவியது. ஆயினும், ஏட்டில் எழுதப்படாது, மக்களிடையே வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்களும் இன்று இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இலக்கியம் வாழ்க்கையோடு தொடர்புடையது; வாழ்க்கையிலிருந்து மலர்வது; வாழ்க்கைக்கு விளக்கந்தருவது; வாழ்க்கையை வளமாக்குவது - என்ற அடிப்படைக் கருத்தை நாம் ஒப்புக்கொள்ளின், நாட்டார் பாடல்கள் 'இலக்கியம்' என்று சொல்வதற்குச் சாலவும் தகுதியுடையனவேயாகும். நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப்பிணைந்துள்ளன; மக்களின் எல்லாவகையான மனவுணர்ச்சிகளையும் அவை வெளியிடுகின்றன. கேட்போரிடம் நகை, அழுகை, இளிவரல், மருட்கை,

அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடுநிலை என்னும் ஒன்பான் சுவைகளையும் உண்டாக்கவல்லன. தாலாட்டு முதல் ஒப்பாரி வரை எல்லாவகையான அநுபவங்களையும் அவை பொருளாகக் கொண்டுள்ளன. உண்மையிலே, நாட்டிலக்கியம் ஈன்ற குழவியே ஏட்டிலக்கியமாகும். நாட்டிலக்கியத்தில் நாம் இயற்கை அழகைக் காண்கின்றோம்; ஏட்டிலக்கியத்திற் செயற்கை அழகைக் காண்கின்றோம்.

குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுகின்றாள். குழந்தை பிறந்ததாற் பெற்றோருக்கு மட்டும் மகிழ்ச்சி உண்டாகிவிடவில்லை. முழுச் சமூகத்துக்குமே அது மகிழ்ச்சி தரும் ஒரு நிகழ்ச்சியாகும். குழந்தை முழுச் சமூகத்துக்குமே வாழ்வளிக்க வேண்டும் என்று மருத்துவிச்சி பாடுகிறாள் :

> ''அயலும் புடையும் வாழ(வும்) வேண்டும்
> அன்னமும் சுற்றமும் வாழ(வும்) வேண்டும்
> ஆச்சியும் அப்புவும் வாழ(வும்) வேண்டும்
> அம்மானும் மாமியும் வாழ(வும்) வேண்டும்.

(தமிழண்ணல் 1966, பக்கம் 87)

குழந்தைக்கு வாழ்த்துக் கூறு முன்பு–குழந்தையின் பெற்றோருக்கு வாழ்த்துக் கூறு முன்பு – அயலும் புடையுமாகிய சமூகத்துக்கு வாழ்த்துக் கூறும் இந்தப் பெயரறியாத மருத்துவிச்சியின் உள்ளத்தின் அழகை நாம் இப்பாடலிற் காண்கின்றோம். இது போலவே வயலில் வேலை செய்யும் தொழிலாளி, முதல் உழவு செய்யத் தொடங்கும்போது இறைவனுக்கு வணக்கம் செலுத்தும் பாடலும் எம் இதயத்துக்கு இனிக்கின்றது.

பட்டி பெருகவேணும் தம்பிரானே–பாற்பானை பொங்கவேணும் தம்பிரானே
மேழி பெருகவேணும் தம்பிரானே–வேளாண்மை விளையவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே–நல்லமழை பெய்யவேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே–எல்லாரும் வாழவேணும் தம்பிரானே.

(இராமலிங்கம் 1961, பக்கம் 37)

பட்டி பெருகுவதாலும் பாற்பானை பொங்குவதாலும் வேளாண்மை விளைவதாலும் உழவனும் அவனது குடும்பமும் மட்டும் உண்டு மகிழப்போவதில்லை. அவன் செய்யும் தொழிலால் நாட்டிலுள்ள எல்லோரும் நல்வாழ்வு பெறுகின்றனர். எல்லோரும் வாழவேண்டும் என்று இறைவனிடம் இரந்து வேண்டும் இந்த ஏழைத் தொழிலாளியிடம்,

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.''

(தேவாரம், 3 ஆம் திருமுறை)

என்று பாடிய திருஞானசம்பந்தரின் மனப்பான்மை இருப்பதைக் கண்டு நாம் வியக்கின்றோம். அன்றியும்,

''எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே''

(பராபரக்கண்ணி, 221)

என்று பாடிய தாயுமானவரின் உள்ளத்தையும் நாம் இந்த உழவுத் தொழிலாளியிடம் காண்கின்றோம்.

இனி, தன் இன்பக் குழவியின் இனிய முகத்தைக் கண்டு உள்ளம் உருகிப் பாடும் தாயின் தாலாட்டுப் பாடல்களிலே ஓசையும் பொருளும் ஒத்து இனிக்கும் அருமையான கவிதைகளைக் காண்கின்றோம். தன் குழந்தை கிடைத்தற்கரிய செல்வம் என்று உணரும் தாயொருத்தி,

''ஆண் பனையில் நுங்கே அணில் கோதா மாம்பழமே''

(தமிழண்ணல் 1966, பக்கம் 74)

என்று இயல்பாகவே பாடிவிடுகிறாள். நுங்கும் மாம்பழமும் நாட்டுச் சூழலிலே அவள் கண்டும் உண்டும் அநுபவித்த பொருள்கள். ஆனால், பெண்பனைதான் காய்ப்பது; ஆண்பனை காய்ப்பதில்லை. இது அந்தத் தாய்க்குத் தெரியாததன்று. ஆண்பனை காய்த்தால், அது ஓர் அற்புதமேயாகும். தன் குழந்தையும் ஓர் அற்புதப் பொருள் என்ற கருத்தை அவள் எவ்வளவு சுவையாக—எவ்வளவு இயல்பாக— எடுத்துக் கூறிவிடுகிறாள்! ஏட்டுக் கவிதையிற் காணமுடியாத புதுமைவாய்ந்த கற்பனைகளை நாம் நாட்டுக் கவிதையிற் காண்கிறோம்.

கொவ்வை இதழ் மகனே—என்
குவிந்தநல ரத்தினமே
கட்டிப் பசும் பொன்னே—என்
கண்மணியே நீயுறங்காய்.

(தமிழண்ணல் 1966, பக்கம் 76)

ஒரு தாயின் உள்ளத்திற் பொங்கும் உணர்ச்சிகளை நாம் இப் பாட்டிலே காண்கின்றோம். குழந்தையின் சிவந்த இதழ் அவளுக்குக் கொவ்வைக் கனியை நினைவூட்டுகின்றது. அது அவள் இயற்கைச் சூழலிற் கண்டறிந்த ஒரு பொருளேயாகும். பெண்ணின் இயல்பால் நவரத்தினங்களிலும் பசும் பொன்னிலும் அவளுக்கு அளவுகடந்த ஆசை இருக்கின்றது. ஆயினும், அவள் தன் ஆசைப் பொருள்களாகிய நவரத்தினக் குவியலையும் கட்டிப் பொன்னையும் தன் இன்பக் குழந்தையிடமே கண்டு பூரிப் படைகின்றாள். இத்தகைய தாலாட்டை நாம் ஏட்டிலக்கியத் திலும் காண்கின்றோம். இங்கே ஓர் உதாரணத்தைப் பார்ப் போம்.

மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிற்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ!

(பெருமாள் திருமொழி 8 : 1)

நாட்டுத் தாயின் பாடலோ, குலசேகரப் பெருமாளின் பாடலோ, எது கவிதைத் தரத்தில் விஞ்சியது என்று சொல்வது எளிதன்று. எனினும், நாட்டுத் தாயின் பாட்டில் உண்மையான உணர்ச்சி பெருகிவருவதை, நம் இதயம் உணருகின்றது.

இனி, நாட்டார் பாடலில் வரும் நீதியுணர்ச்சிக்கு ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்.

ஓதிப்படிச்சி
ஊர்புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய்த தீங்கை—அல்லா
எள்ளளவும் ஏற்கமாட்டான்.

(வித்தியானந்தன் 1967, பக்கம் 27)

ஒருவர் குர்ஆனை ஓதலாம்; வேறு பல நூல்களையும் படிக்கலாம்; ஊர் புகழப் பேரோடும் மதிப்போடும் வாழலாம்; அவர் ஏழை ஒருவனுக்கு ஒரு தீங்கைச் செய்துவிட்டு அதை மூடி மறைக்கப் பார்க்கலாம். அவருடைய செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் கட்டுப்பட்டவர்கள் அவரது செயலை ஏற்றுக் கொள்ளவும் கூடும். ஆனால், எல்லாம் அறியும் அல்லாஹ் அதனை எள்ளளவுமே ஏற்றுக்கொள்ளமாட்டான். இது நமது நாட்டுப்புறத்தில் வாழும் முஸ்லிம் ஒருவரின் நம்பிக்கை. இந்தப் பாட்டின் எளிய சந்தமும் மொழி நடையும் மட்டுமல்லாமல், இதன் பொருளும் எம்மைக் கவர்கின்றது. இவ்வாறே நாட்டுப் பாடல்களில் இலக்கியப் பண்பு மிகுந்திருப்பதைக் காணலாம்.

உவமை: நாட்டார் பாடல்களிற் சிக்கலான அணிகள் இரா; ஆனால், உவமை உருவகங்கள் மிகப் பொருத்தமாகவும் அழகாகவும் இயல்பாகவும் கையாளப்படும். இந்த உவமைகள் ஏட்டுக் கவிதைகளிற் புலவர்கள் பொதுவாகக் கையாளும் உவமைகளிலும் பார்க்கச் சுவை யுடையனவாயும் இருக்கும். இங்கே சில உதாரணங்களைப் பார்ப்போம்.

ஒரு பெண்ணுக்கு மணப் பேச்சு நடைபெறுகின்றது. அந்த ஆண் எப்படியானவன் என்று அவள் தோழியிடம் விசாரிக்கிறாள். தோழி அந்த மாப்பிள்ளையை நையாண்டிபண்ணும் போக்கிலே வருணிக்கின்றாள். நகைச்சுவையோடு பொருந்திய, இயற்கையான, புதுமையான உவமையைக் கையாளுகிறாள்.

கச்சான் அடித்தபின்பு காட்டில்மரம் நின்றதுபோல்
உச்சியில் நாலுமயிர் ஓரமெல்லாம் தான்வழுக்கை;

(வித்தியானந்தன் 1962, பக்கம் 59)

கச்சான் காற்றின் உக்கிரம் நாட்டுப்புற மக்களுக்கு நன்கு தெரிந்ததே. அக்காற்றுச் சுழற்றியடித்து ஓய்ந்தபின் காட்டு மரம் எப்படி இருக்கும் என்பதை நாம் அகக்கண்ணாற் பார்க்கலாம். மரத்தின் இலைகள், பூக்கள், காய்கள் எல்லாம் உதிர்ந்து போக, இரண்டொரு கிளைகள் மட்டும் எஞ்சியிருக்கின்றன. ஓரமெல்லாம் வழுக்கை விழுந்து உச்சியிலே நாலுமயிர் (சிறிதளவு மயிர்) மாத்திரம் உள்ள மாப்பிள்ளைக்குக் கச்சான் காற்றினால் அலைக்கப்பட்ட காட்டு மரத்தை உவமித்திருப்பது எத்துணைச் சுவையுடையது!

காதல் கைகூடாமையால் ஒருவர் வாடியிருக்கிறார். அவருடைய வாட்டத்தைப் பார்த்து மற்றொருவர் வினவுகிறார். கவிதையிலே இயற்கையான உவமைகள் மிகவும் பொருத்தமாக வருகின்றன;

மாவிலங்கம் பட்டைபோல் மாவிறைச்சித் துண்டுபோல்
எச்சம் குருத்துப்போல இருந்துமுகம் வாடலாமா?

(வித்தியானந்தன் 1964, பக்கம் 80)

மாவிலங்க மரத்தின் பட்டையையும் மாவிறைச்சியையும் எச்சம் குருத்தையும் நாட்டு மக்கள் வெயிலிலே காயவைத்து வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம்; இந்த இயற்கையான நிகழ்ச்சிகளையே நாட்டுப்புறக் கவிஞன் உவமையாகக் காட்டுகிறான்;

நரைத்த கிழவன் ஒருவனுக்கு இளம் பெண்ணொருத்தியை மணஞ் செய்து கொடுக்கப் பெற்றோர் எண்ணுகின்றனர். அந்த இளம் பெண்ணுக்காக அவளது தோழி இரங்குகின்றாள்; அவள் தனது வெறுப்பை வெளிப்படுத்த இயற்கையான உவமைகளைக் கையாளுகின்றாள்;

நாணற் பூப்போல நரைத்த கிழவனுக்கு
கும்மாளம் பூப்போல —இந்தக் குமர்தானோ வாழுறது!

(வித்தியானந்தன் 1962, பக்கம் 60)

கிழவனின் நரையை விளக்குவதற்கு நாணற் பூவையும், பெண்ணின் இளமையழகை விளக்குவதற்குக் கும்மாளம் பூவையும் உவமை கூறியிருப்பது மிகவும் பொருத்தமானது; இயற்கையிலே இப்பூக்களைக் கண்டு பழகியவர்களுக்கு இவற்றின் பொருத்தம் இனிது விளங்கும்;

தன் காதலியின் பொன்போன்ற மேனி அழகிலும் பூரித்த மார்பின் அழகிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த ஒருவன் தனது உணர்ச்சியை இயற்கையான உவமைகள் மூலம் தன் காதலிக்கே சொல்லிக் காட்டுகிறான்:

தேசிப் பழத்தழகி தேங்காய் முலையழகி
பாசிப் பழத்தழகி பக்கத்தில்நான் வந்திடுவேன்;

(வித்தியானந்தன் 1964, பக்கம் 28)

இவ்வாறே நாட்டார் பாடல்களில் வரும் உவமைகள் இயற்கைப் பண்பும் புதுமையும் பொருத்தமும் உடையனவா யிருக்கக் காணலாம்; எட்டுக் கவிதைகளில் மரபுமுறையாகப் புலவர்கள் கையாளும் உவமைகள் பொதுவாகக் கவர்ச்சியும் சுவையும் இழந்துவிடுகின்றன; ஆனால், இத்தகைய வறட்சி,

நாட்டார் பாடல்களில் இல்லாதிருப்பதால், அவை இனிய கவிதைகளாக எமது உள்ளத்தை ஈர்க்கின்றன.

(ஆ) இசை: நாட்டார் பாடல்களுக்குத் தனிச் சிறப்பைத் தருவது அவற்றின் இசையின்பமே எனலாம். இசை என்னும் சிறகு இருப்பதாலே இப்பாடல்கள் அவைதோறும் வட்டார எல்லைகளைக் கடந்து விரைவிலே நாடெங்கும் பரவிவிடுகின்றன. இலட்சக் கணக்கான நாட்டு மக்கள் இந்த இசையையே நயந்து இன்புறுகின்றனர். இப்பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருப்பதோடு சொற்சுவையும் பொருளழகும் பொருந்தியிருப்பதால், நாட்டின் கலாசாரப் பாரம்பரியச் செல்வமாகத் திகழ்கின்றன. நாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பொழுது போக்குக்காகவும் உழைப்பாளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகவும் பாடப்படுவன. மக்கள் கூட்டாகச் சேர்ந்து தொழில்புரியும் போது பாடும் பாடல்களின் இசை, அவர்களின் உடற் சோர்வையும் உளச்சோர்வையும் போக்கி, தொழிலைத் திறமையாகச் செய்வதற்கு உதவிபுரிகின்றது. தொழிலாளர்கள் பாடலின் ஒத்திசைக்கு ஏற்பத் தம் உடலை இயக்கி ஒருங்கிசைந்து வேலை செய்வதால், வினைத்திறமை மிகுகின்றது. ஓடம் செலுத்துவோர் பாடல், வலையிழுப்போர் பாடல், நெல்லுக்குத்தும் பெண்களின் பாடல், ஏற்றம் இசைப்போர் பாடல் என்பவற்றிலே இதற்கு உதாரணம் காணலாம். இத்தகைய பாடல்களில், பொருளற்ற ''ஏலேலோ ஐலசா'' என்பது போன்ற சொற்கள் ஒத்திசைச் சத்தத்தை எழுப்புவதற்காக உபயோகிக்கப்படுகின்றன. இவ்வாறே தாலாட்டுப் பாடும் தாய்மார் ''ஆராரோ ஆரிவரோ'' என்று சந்தம் அமைத்துப் பாடுகின்றனர். முன்னைய சந்தம் உடலில் முறுக்கேற்றித் தொழில் செய்வதில் உற்சாகத்தைத் தூண்ட, பின்னைய சந்தம் குழந்தையின் உடல் முயற்சிகளை ஒடுக்கி உறங்கச் செய்து விடுகின்றது.

நாட்டுப் பாடல்களின் நயமான இசை, எமது ஏட்டிலக்கியத்தின் இயற்றமிழ்ச் செய்யுள்களைப் படிப்படியாக இழைவும் குழைவும் உடையனவாக்கியுள்ளன. இயற்றமிழ்ச் செய்யுள் வரலாற்றை நோக்கினால், சங்ககால முதல் இன்றுவரையும் இச்செய்யுள்கள் இசையை மேன்மேலும் கூடுதலாக ஏற்று இனிமை பெற்றுள்ளதைக் காணலாம். பரிபாடல்கள், பத்திப் பாடல்கள், பெருங் காப்பியப் பாடல்கள், சித்தர் பாடல்கள், பள்ளு, குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியப் பாடல்கள், பாரதியார் பாடல்கள், இக்காலக் கவிஞர்களின் பாடல்கள் ஆகியவற்றில் இசை எவ்வளவு கலந்துள்ளது என்பதை நோக்கினால் இவ்வுண்மை இனிது புலனாகும். இயற்றமிழ்க் கவிதைகள் படிப்படியாக இசைதழுவிய பாடல்களாக மாறியமைக்கு நாட்டுப் பாடல்களின் நெஞ்சையள்ளும் இசையே காரணமாகும்.

இனி, நாட்டுப் பாடல்களின் இசை, நமது சாஸ்திரீய சங்கித அமைப்பாளர்களேயும் கவர்ந்திருக்கிறது; சங்கீத மேதைகளான தியாகராஜரும் கோபாலகிருஷ்ண பாரதியாரும் சில நாட்டுப் பாடல்களிலே தங்கள் சாகித்தியங்களைச் சேர்த்து அவற்றுக்கு அழியா வாழ்வு அளித்துள்ளனர்;

(இ) நாடகம் (ஆடல்); முத்தமிழில் ஒன்றாகிய நாடகத் தமிழ் முக்கியமாக ஆடற்கலையையே பொருளாகக் கொண்டது. இக்கலைக்கும் நாட்டுமக்களின் ஆடல் பாடல்களே தோற்றுவா யாக அமைந்திருக்கவேண்டும்; நாட்டுப் பாடல்களிற் பல, கூட்டாகப் பாடுவதற்கென்றே அமைந்தவை; கும்மி, கோலாட் டம் போன்ற விளையாட்டுப் பாடல்களும் வசந்தன் போன்ற கொண்டாட்டப் பாடல்களும் ஆடலை முக்கிய அமிசமாகக் கொண்டவை; உதாரணமாகக் கும்மிப்பாடல்களில் வரும்,

தன்னனே நாதினம் தன்னனே - தன
தன்னன நாதினம் தன்னனே

என்பது போன்ற தருக்களும் கோலாட்டப் பாடலிலே வரும்,

தினதந்தின தினதந்தின
தினதந்தின தினன
தினதந்தின தினன
தின்னதி னதந்தின
தினதந்தின தினன

என்பது போன்ற தருக்களும், வசந்தன் பாடல்களில் வரும்,

தாந்தி மிக்க திமிக்க திமிக்கதி
தந்திமி தொங்கத் தாவென்ன

(சதாசிவ ஐயர் 1940, பக்கம் 22)

என்பது போன்ற தருக்களும் நாட்டுப் பாடல்களில் உள்ள ஆடற்கலை அமிசங்களை எடுத்துக் காட்டும்; நாட்டு மக்களிடம் எத்தனையோ வகையான ஆடல்கள் (Folk Dances) உள்ளன. அவற்றோடு தொடர்புடைய பாடல்களும் உள்ளன; இத் தகைய நாட்டுக்கூத்துகளும் நமது கலாசாரத்தின் ஒரு பகுதி யாகவே மதிக்கப்படுகின்றன; இன்று பாடசாலை நடன நிகழ்ச்சிகளிலும் பரதநாட்டியக் கச்சேரிகளிலும் திரைப்படங் களிலும் சிலபல நாட்டுக் கூத்துகள் இடம்பெற்று வருவதைக் காண்கின்றோம்; இயல், இசைத் துறைகளிற் போலவே நாடகத் துறையிலும் நாட்டார் இலக்கியம் புத்துயிரும் புது வளமும் ஊட்டி, நமது கலைச் செல்வத்தைச் செழிப்புறச் செய்கிறது;

3. மொழி

நாட்டார் பாடல்கள் வாய்மொழி இலக்கியமாக வழங்கி வந்தவை; இன்றும் கிராமப்புறங்களில் அருகி வழங்கி வருபவை; பாடல்கள் தோன்றிய காலத்துப் பேச்சு மொழியிலே அமைந்தவை. பேச்சுமொழி இடத்திற்கிடமும் காலத்திற்குக் காலமும் வேறுபட்டுள்ளதைப் போன்று பேச்சு மொழியி லமைந்த நாட்டுப் பாடல்களின் மொழியும் இடத்திற்கிடமும் காலத்திற்குக் காலமும் வேறுபட்டிருக்கக் காண்கின்றோம். இன்று நமக்குக் கிடைத்துள்ள நாட்டார் பாடல்கள் பலவற்றிற் காணப்பெறும் பாடவேறுபாடுகளே இதற்கு நல்ல சான்றாகும்.

இன்று நாம் நாட்டார் பாடல்களின் மொழியை ஆராய விரும்பினால் நாடெங்கும் சென்று இப்பாடல்கள் நாட்டுப்புறத்துப் பாமர மக்களிடம் வழங்குமாற்றைச் சரிவரக் கேட்டறிய வேண்டும். காரணம், நாட்டுப் பாடல்களின் உண்மையான மொழிவடிவத்தை இப்பாமர மக்களிடமிருந்துதான் அறிந்துகொள்ள முடியும். இவர்களே இப்பாடல்களைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வருபவர்கள். பாடல்களிலே பாமரமக்களிடம் பாடவேறுபாடுகள் காண்பின் அவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். மக்களின் உச்சரிப்பு முதற்கொண்டு சொல், சொற்றொடர், இலக்கணக்கூறு, பாடற்பொருள் ஆகியவற்றிற் காணப்படும் பாடவேறுபாடுகளைக் குறித்துக்கொள்ளல் வேண்டும். பாடவேறுபாடுகளுள் எவையெல்லாம் பழையன என்ற சிக்கல் தோன்றக்கூடும். பாடவேறுபாடின்றி நாடெங்கும் ஒரு பாடல் வழங்கிவருமாயின், அப்பாடலில் மொழிச்சிக்கல் இல்லையெனலாம். பாடவேறுபாடுகள் இருப்பின் பெரும்பான்மையோரிடம் காணப்படும் பாடமே குறிப்பிட்ட ஒரு பாடலின் பழைய பாடம் என்று ஓரளவு துணியலாம். பெரும்பான்மை என்னும் அடிப்படையைக் கொள்ளினும் ஏற்பதற்கோ விடுவதற்கோ பிற சான்றுகள் இருப்பின், அவற்றையும் துணையாகக் கொண்டு பாடவேறுபாடுகளைச் சீர்தூக்கி ஆராய்தல் நன்று. ஏறத்தாழ இம்முறையையே மொழியியலாரும் மானிடவியலாரும் பழைய வடிவங்களைக் (Proto forms) காண்பதற்குக் கடைப்பிடிக்கின்றனர். இங்குக் கூறிய இந்த ஆய்வுமுறைக்கு நீண்டநாள் முயற்சி வேண்டும்.

அறிஞர் பெருமக்கள் பலர் அண்மைக்காலத்தில் நாட்டார் பாடல்களைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றின் அடிப்படையில் நாம் நாட்டார் பாடல் மொழிபற்றிச் சில கருத்துக்களைக் கூற முற்படலாம். ஆயின், நாட்டார் பாடல்களை அச்சேற்றும்போது அவற்றின் பதிப்பாசிரியர்கள் வாய்மொழி இலக்கியமாக வழங்கிய அப்பாடல்களின் பேச்சு மொழியை எந்த அளவிற்கு அச்சிலேயும் பேணிப் பாதுகாத்துள்ளனர் என்று நாம் அறிந்தாலன்றி, நாட்டார் பாடல் மொழிபற்றி அறிவியலடிப்படையில், தெளிவான கருத்துச் சொல்லக்கூடிய நிலை தோன்றாது. பதிப்பாசிரியர்களின் மூலாதாரங்கள் நமக்கும் கிடைக்குமாயின்—நாடெங்கும் சென்று அலைந்து தேடி ஆராயின் கிடைக்கக்கூடும் — அவற்றை நாம் மீண்டும் பரிசோதனை செய்து எந்த அளவிற்குப் பதிப்பாசிரியர்கள், மக்கள் வாய்மொழியைத் திரிக்காது நேர்மையாக அச்சிலேயும் பாதுகாத்துள்ளனர் என்று அறியலாம். ஆனால், மூலாதாரங்களுக்குச் செல்லாது இதுகாறும் வெளிவந்துள்ள பாடல்களைப் படிக்கும்போது அவற்றின் பதிப்பாசிரியர்கள் தமது பதிப்புக்களில் மொழிவழக்கை மாற்றாது மக்களிடம் கேட்டறிந்தவாறே அச்சேற்றியுள்ளார்கள் என்று நம்ப நம் உள்ளந் தயங்குகின்றது. பதிப்பாசிரியர்களிற் சிலர் நாட்டார் பாடல்களில் வழங்கும் பேச்சு மொழியைப் பொறுப்புணர்ச்சியின்றித் தாம் மொழிபற்றிக் கொண்டுள்ள சொந்த விருப்பு வெறுப்பினால் ஏட்டிலக்கிய மொழியாக்க முயன்றுள்ளனர் என்பதற்கு அவர் தாம் பதிப்பித்துள்ள பாடல்களில் இருந்தே தக்கசான்றுகள் காட்டமுடியும். இன்னும், பதிப்பாசிரியர்களிற் சிலர், பாடல்களிலே வருஞ் சொற்கள் சிலவற்றைமட்டும் ஏட்டிலக்கிய மொழிச் சொற்களாக மாற்றிவிட்டு ஏனையவற்றைப் பேச்சுமொழிச் சொற்களாகவே கொண்டுள்ளார்கள். இவர்கள் இவ்வாறு சிலவற்றை மாற்றியமைக்கும் ஏனையவற்றை மாற்றாது விட்டமைக்கும் அடிப்படையோ, காரணமோ என்ன என்று தெரியவில்லை. இனி, இங்குச் சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

1. பாசிப் பயற்றழகா, பயத்தங்காய் நெற்றழகா
ஈச்சங்காய்ப் பல்லழகா, இருகாதும் பொன்னழகா
முத்து முடியழகா, முருக்கங்காய்ப் பூச்சழகா

(இராமலிங்கம் 1961, பக்கம் 29)

இப்பாடலில் பயறு என்ற சொல் அடையாகப் பயற்று— எனவும் பயத்தம்— எனவும் வரக் காண்கின்றோம். பயத்தம்— என்ற அடை பயின்று வருவதால், சொல்லில் ஈருயிர்க்கிடையே வரும்—ற்ற் > த்த்—எனப் பேச்சு மொழியில் மாறிய காலத்துக்குப் பிந்திய பாடல் இது எனக் கொள்ளலாம். இவ்வொலி மாற்றத்துக்கு கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுச்

சான்றுகள் கிடைக்கின்றனா; இப்பாடல் பறற்றங்காய்>பறத் தங்காய் என மாறிய காலத்துக்குப் பிந்திய பாடலாமெனின், பறற்றழகா என்பதும் மக்களாற் பயத்தழகா என்றே மொழியப்பட்டிருக்க வேண்டும் என்று துணியலாமல்லவா? ஆனால், பதிப்பாசிரியர் அதனைப் பயற்றழகா என ஏட்டிலக்கிய மொழியாக மாற்றிவிட்டார் போலும்!

8: முப்பதுநாள் உழைத் துழைத்து
திறையப் பணம் வாங்கி—அதை
மூன்று நாளிற் தின்டுவிட்டுக் கடனையும் வாங்கி
பாக்கி நாளிற் பெரும் பகுதியை...........

(நடராசா 1962, பக்கம் 115)

இப்பாடலில் "மூன்று நாளிற் திண்டுவிட்டு..........."என்ற அடியை மட்டும் கருதுவோம்: சொல்லிடையே வரும்—ன்ற்—ஈழத்துத் தமிழ்க் கிளைமொழிகள் பலவற்றில்—ண்ட்—எனக் குறிப்பிடக்கூடிய ஒருகாலத்தில் மாறியது. இந்தியத் தமிழில்—ன்ற்—> —ண்ட்—என மாறியது: இதற்கு கி. பி: 16ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுகளிற் சான்று உளது: மேலே தந்துள்ள பாடலில் தின்று > திண்டு என்னும் ஈழத்து ஒலிமாற்றத்தையே காண்கின்றேம்: ஆனால், ஒரே அடியில் "மூன்று", "திண்டு" என்ற இருவழக்கும் வருவது வியப்பே: மூன்று> மூண்டு என மாறவில்லையா? பதிப்பாசிரியர் மூண்டு என்பதை மூன்று என மாற்றித் திண்டு என்பதைத் தின்று என மாற்றுது விட்டாரா?

9: முத்திலே முத்து முதிரவிளைஞ்ச முத்து
தொட்டிலிலே ஆணி முத்து துவண்டு விளைஞ்ச முத்து
கொட்டி வைத்த முத்தே குவித்து வைத்த ரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே—என் கண்மணியே
நித்திரைபோ

(அன்னகாமு 1966, பக்கம் 78)

இப்பாடலில் "விளைஞ்ச", "வைத்த" ஆகிய இரண்டு சொற்களையும் நோக்குக: தமிழில் சில ஒலிச்சூழலில்—ந்த்—>—ஞ்ச்—என மாறிய காலத்துக்குப் பிற்பட்ட பாடல் இது: ஆயின், இது—த்த்—>—ச்ச்— எனச் சில ஒலிச்சூழலில் வந்த மாற்றத்திற்கு முந்திய பாடலா? இம்மாற்றம் கி. பி: 7ஆம் நூற்றுண்டு இலக்கியங்கள் சிலவற்றிலே இடம் பெற்றுள்ளமை நினைவுகூரத் தரும். அப்பர் சுவாமிகளின் தேவாரங்களிலே வைத்த என்ற சொல் வச்ச எனப் பயின்று வருகின்றது: இப்பாடலில் வைத்த என வருவது பதிப்பாசிரியர்தம் விருப்பா? அன்றி வைச்ச எனவோ, வச்ச எனவோ வாராதது அவர்தம் வெறுப்பா?

இதுகாறும் சொற்களையும் ஒலி மாற்றங்களையும் காட்டினேம். இனி, இலக்கணக் கூற்றை (விகுதி) எடுத்துக் காட்டுவோம் :

4. ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய்?
அம்மியடியில் கும்மியடித்தேன் சும்மாவா இருந்தன்.

(நடராசா 1962, பக்கம் 117)

"கும்மியடித்தேன்", "இருந்தன்" என்ற இரண்டையும் நோக்குக. இப்பாடலில் "ஆட்டுக் குஞ்சுக்கு ஆறுதல் பண்ணினேன்" எனவும் ஓரடி பின்னே வருகின்றது. "கோழி முட்டையில் மயிர் பிடுங்கினன்" எனவும் "பாம்புக் குட்டிக்குப் பல்லு விளக்கினன்" எனவும் ஈரடிகள் வருகின்றன. எனவே பாட்டுக்குள்ளேயே முன்னுக்குப் பின் முரண்! "கும்மியடித் தேன்", "பண்ணினேன்" என்பன "பிடுங்கினன்", "விளக்கி னன்" என்பவை போலக் "கும்மியடித்தன்", "பண்ணினன்" என ஈற்றிலே ஏகார நெட்டுயிரின்றி அகரக்குற்றுயிராக மொழியப்பட்டிருக்குமா? இங்கெல்லாம் மொழியைப் பொறுத்த வரையில், பதிப்பாசிரியர்களின் மனம்போன போக்கையே காண்கின்றோம்.

நாம் நாட்டுப் பாடல்களிற் பயின்றுவரும் மொழிவழக் கடிப்படையில், அவை தோன்றிய காலத்தையும் வட்டாரத் தையும் ஓரளவு ஊகித்து அறிய முற்படலாம். இம்முயற்சி மக்கள் மொழியுமாறே பாடல்களை அச்சேற்றியிருப்பின் பயன் தரும். இன்று பதிப்பாசிரியர்கள் தந்துள்ள பாட (Text) அடிப் படையிலே நாம் பாடல்களின் காலத்தைக் கணிக்கத் துணிய லாம். ஆனல், அவர்களுடைய பாடல் மொழி ஈடாட்ட முடையதெனின், அதன்மேல் நாம் கட்டியெழுப்பும் கருத் துரைகளும் ஈடாட்டம் உடையனவே.

பதிப்பாசிரியர்கள் நாட்டுப் பாடல்களின் மொழிநுட்பம் பற்றி அக்கறை கொள்ளாததனுல், நாம் இன்றைய பேச்சு மொழியையே பழையநாட்டுப் பாடல்களிலும் காண முயல்வது அறிவுடைமை யாகுமா? இல்லை. பழைய பாடல்களின் மொழி அந்நாளைய பேச்சு மொழியையே பிரதிபலித்து நிற்பதாகக் கொள்வது சாலப் பொருத்தமாகும். காலப்போக்கில் மொழி மாறிக்கொண்டு வரினும் பண்டைய மொழி நிலையொன்றைப் பாடல்களிலே இன்றுவரை மக்கள் பாதுகாத்து வந்திருக்கலாம். இவ்வாறு பண்டைய மொழி நிலையைப் பாடல்களிலே பாது காப்பதும் எளிதாம்.

நாட்டுப் பாடல்களின் மொழிபற்றி ஆராயும்போது மொழியிலே பொதுவாக ஏற்பட்ட ஒலிமாற்றங்களுக்கு விதி விலக்கும் உண்டு என்பதை நாம் மறத்தலாகாது. எடுத்துக் காட்டாக,

தட்டந் தனிவொளணே—நான்
தங்கி விட்டேன் ஒற்றை மரம்
ஒற்றை மரமானேன்—நான்
ஒரு மரத்தில் கொப்பானேன்:

(இராமலிங்கம் 1961, பக்கம் 85)

என்ற பாடலிலே 'ஒற்றை' என்ற சொல் வருகின்றது: —ற்ற—>—த்த—என்னும் மாற்றத்திற்கு கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுச் சான்றுகள் உள. ஆதலால் 'ஒற்றை' என்ற சொல்லின் ஒலிவரன் முறையைக் கொண்டு இப்பாடல் பழையது எனக் கொள்ளத் தோன்றும். ஆயின், இப்பாடலில் ஒற்றை என வருவதை விதிவிலக்காகவே கொள்ள வேண்டும். காரணம், யாழ்ப்பாணத்துத் தமிழ் வழக்கில் —ற்ற—>—த்த— என்ற மாற்றம் சில சொற்களிலே எதிர்ப்புப் பெற்றமைக்குச் சான்றுண்டு. ஒற்றை, வெற்றி, பற்று, மற்ற போன்ற சொற்களையும் காண்க.

ஒலிமாற்ற அடிப்படையிற் பாடல்களின் காலத்தைக் கணிப்பதைக் குறிப்பிட்டோம். அதே போன்று மொழியடிப் படையிற் சில பாடல்கள் தோன்றிய வட்டாரத்தையும் கூற முடியும். 'அயலும் புடையும் வாழ(வும்) வேண்டும்' (தமிழண்ணல் 1966, பக்கம் 87) என்ற பாடலிலே கோச்சி, கொப்பர், கொம்மான் என்ற சொற்கள் வருகின்றன. இச் சொற்களின் ஆட்சி ஈழத்தமிழ்க் கிளைமொழிகள் சிலவற்றிற்கே உரியன. ஆதலால் இப்பாடலும் ஈழத்துக்கே உரியது எனக் கொள்ளலாம். —ன்ற— > —ண்ட— (ஒன்று > ஒண்டு, தின்று > திண்டு, கன்று > கண்டு, நின்றது > நிண்டது) என மாற்றம் பெற்றுள்ள சொற்களையுடைய பாடல்களும் ஈழநாட்டிற்கே யுரியன. இனம் என்னும் விகுதியைப் பெற்று அமையும் உயர் திணைப் பலர்பால் (படர்க்கை) வினைமுற்றுகளையுடைய பாடல் கள் யாழ்ப்பாணத்துக்குரியன எனலாம். எடுத்துக்காட்டாக, "தோளிலே கைபோட்ட உன் தோழர்மார் தேடுகினம்" (இராமலிங்கம் 1961, பக்கம் 31).

இவ்வாறெல்லாம் நாட்டார் பாடல் மொழியை அறிவியல் அடிப்படையில் ஆராய்வதற்குத் தமிழ் மொழியில் — பேச்சு மொழி எழுத்துமொழி ஆகிய இரண்டினதும்—வரலாற்றறிவும் தமிழ்க் கிளை மொழிகளின் ஒப்பியல் அறிவும் தற்கால மொழி யியல் அறிவும் இன்றியமையாதனவாகின்றன.

உசாத்துணை நூல்கள்

(தமிழ்)

அப்துல் காதர் சாகிபு, சைத்தூன் கிஸ்ஸா, சென்னை, 1947,
அய்யாசாமி, ஆர்., நாடோடிப் பாடல்கள், சென்னை, 1959;

அன்னகாமு, செ., ஏட்டில் எழுதாக் கவிதைகள், சென்னை, 1966.

அருணன், எம்., மகாகவி பாரதியார் கவிதைகள், மதுரை, 1966.

இராமலிங்கம், மு., இலங்கை நாட்டுப்பாடல்கள், கொழும்பு 1951.

இராமலிங்கம், மு., கிராமக் கவிக்குயில்களின் ஒப்பாரிகள், கொழும்பு, 1960.

இராமலிங்கம், மு., வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள், யாழ்ப்பாணம், 1961.

கணபதிப்பிள்ளை, க., ஈழத்து வாழ்வும் வளமும்.

கணேசையர், சி., தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியம், சுன்னாகம், 1943.

கந்தையா, வி. சி., அநுவுருத்திர நாடகம், மட்டக்களப்பு, 1969.

கலைக்கல்விக் கழகம், சிந்தனை (காலாண்டுச் சஞ்சிகை), மலர் 1, இதழ் 1, பேராதனை, ஏப்பிரில், 1967.

காசி விசுவநாத செட்டியார், தாயுமான அடிகள் திருப்பாடல்கள், சென்னை, சருவதாரி.

கிருஷ்ணமாசாரியார், சே., முதலாயிரம் பெருமாள் திருமொழி, திருவல்லிக்கேணி, 1923.

கைலாசபதி, க., இலக்கியமும் திறனாய்வும், யாழ்ப்பாணம், 1972,

சதாசிவ ஐயர், தி., மட்டக்களப்பு வசந்தன் கவித் திரட்டு, யாழ்ப்பாணம், 1940.

சாம்பசிவசர்மா, இராஜ சிவ., திருவாசகம்- நவநீதகிருஷ்ண பாரதியார் ஆராய்ச்சிப்பேருரை, தெல்லிப்பழை, 1954.

சாமிநாதையர், உ. வே., சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், சென்னை, 1934.

சாமிநாதையர், உ. வே., சிலப்பதிகாரம்-அரும்பதவுரை - அடியார்க்குநல்லார் உரை, சென்னை, 1944.

தமிழண்ணல், தாலாட்டு, காரைக்குடி, 1966.

தமிழ்வளர்ச்சிக் கழகம், கலைக்களஞ்சியம், தொகுதிகள் 1–10, சென்னை, 1954—1968.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், 1950.

நடராசா, எவ். எக்ஸ். ஸி., ஈழத்து நாடோடிப் பாடல்கள், யாழ்ப்பாணம், 1965.

மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., பிறந்தது எப்படியோ, சென்னை, 1951.

வானமாமலை, நா., தமிழர் நாட்டுப் பாடல்கள், சென்னை, 1964.

வானமாமலை, நா., ஆராய்ச்சி (காலாண்டுப் பத்திரிகை), மலர் 1, இதழ் 1, அக்டோபர், 1970.

வித்தியானந்தன், சு., மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், கண்டி, 1962.

வித்தியானந்தன், சு., மன்னார் நாட்டுப் பாடல்கள், கண்டி, 1964.

ஜகந்நாதன், கி. வா., கஞ்சியிலும் இன்பம், சென்னை, 1949.

ஜகந்நாதன், கி. வா., குழந்தை உலகம், சென்னை, 1952.

ஜகந்நாதன், கி. வா., நாடோடி இலக்கியம், சென்னை, 1944.

ஜகந்நாதன், கி. வா., மச்சுவீடு, சென்னை, 1952.

ஸ்ரீமகள் அச்சகம், கட்டபொம்மு கதை, சென்னை, ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

ஷாஹுல், ஹமீது ஹாஜி, எம்.ஏ., அப்பாஸ் நாடகம், 1953.

Hudson William Henry, **An Introduction to the Study of Literature.**

Hume, David, **Essays, Of Tragedy.**

Kailasapathy, K., **Tamil Heroic Poetry,** Oxford University Press, 1968.

Katre, S. M., **Introduction to Indian Textual Criticism,** Poona, 1954.

Macdonell Arthur A., **A History of Sanskrit Literature.**

Meenakshisundaram, T.P., **A History of Tamil Language** Poona, 1965.

Murray Gilbert, **Five Stages of Greek Religion.**

Rieu, E. V., **Homer The Iliad,** The Penguin Classics, 1950.

Shanmugam, S. V., **Epigraphy and Tamil Linguistics.** Paper presented at the Seminar on Inscriptions, Madras, 1966.

Srinivas Iyengar, P. T., **History of the Tamils,** From the earliest times to 600 A. D., Madras, 1966.

Vanamamalai, N., **Studies in Tamil Folk Literature.** New Century Book House Private Ltd., Madras, 1969.

1. வாழ்த்துப் பாடல்

1.1 மருத்துவிச்சி வாழ்த்து

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும். 1

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி? 2

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி? 3

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி,
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி? 4

மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி? 5

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி? 6

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி? 7

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி? 8

காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி? 9

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி,
வேந்தர் மணிமுடியும் கண்டீரோ தம்பி! 10

கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ
பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ
குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ
ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க. 11

2. தாலாட்டுப் பாடல்கள்

2.1 அணில்கோதா மாம்பழமே

ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ
ஆரடிச்சோ நீயழுறாய்? அரியகண்ணால் நீர்வழிய?
அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணிவைப்போம்! 1

மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே!
பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே? 2

ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங் கையாலே?
அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே? 3

ஆண்பனையில் நுங்கே! அணில்கோதா மாம்பழமே!
கூப்பிட்டு நான்கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்! 4

2.2 முதிர விளைஞ்ச முத்து

முத்தே பவளமே—என்
முக்கனியே சக்கரையே
கொத்து மரிக்கொழுந்தே—என்
கோமளமே கண்வளராய்; 1

கரும்பே கலகலங்க
கல்லாறு தண்ணிவர
கல்லாற்றுத் தண்ணியிலே
நெல்லா விளைஞ்ச முத்து! 2

முத்திலே முத்து
முதிர விளைஞ்ச முத்து!
தொட்டிலிலே ஆணிமுத்து
துவண்டு விளைஞ்ச முத்து! 3

தேடி எடுத்த முத்து
தேவாதி ஆண்ட முத்து
பாண்டி பதிச்ச முத்து
பஞ்சவர்கள் ஆண்ட முத்து! 4

கொட்டிவைத்த முத்தே
குவித்துவைத்த ரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே—என்
கண்மணியே நித்திரைபோ! 5

2.3 முத்தாக நீ யொருத்தன்

பாட்டனார் எல்லையிலே—என்னையா
பட்டுவந்து விற்குதென்று
பட்டு விலைமதிக்க—என்னையா
பத்துப்பேர் தாதியராம்
பத்துப்பேர் தாதியர்க்கு—என் கண்ணே
பாங்காக நீயொருத்தன்
பட்டெடுப்பார் உங்கள் ஐயன்—என் சாமி
பணங்கொடுப்பான் உன்மாமன்! 1

முப்பாட்டன் எல்லையிலே—என்னையா
முத்துவந்து விற்குதென்று
முத்து விலைமதிக்க — என்னையா
முப்பதுபேர் தாதியராம்
முப்பதுபேர் தாதியர்க்கு—என் கண்ணே
முத்தாக நீயொருத்தன்
முத்தெடுப்பார் உங்கள் ஐயன்—என் சாமி
முடிச்சவிழ்ப்பான் உன்மாமன்!

2.4 தம்பி குளிபாய்வான்—தன் தாயார் மடிமேலே

மலடி மலடியென்று மாநிலத்தோர் ஏசாமல்
மலடிக் கொருகுழந்தை மாயவனார் தந்தபிச்சை, 1

இருளி இருளியென்று இந்நிலத்தோர் ஏசாமல்
இருளிக் கொருகுழந்தை ஈஸ்வரனார் தந்தபிச்சை; 2

பிள்ளை இல்லையென்று பெருந்தவங்கள் செய்தேனே
மைந்தன் இல்லையென்று மாதவங்கள் செய்தேனே 3

வெந்தமாத் தின்றால் விரதம் அழியுமென்று
பச்சை மாத்தின்று பகவானைக் கைதொழுது 4

வெள்ளிக் கிழமை விரத மகத்துவத்தால்
பிள்ளைக் கலிதீர்க்கப் பிறந்த நவரசமோ! 5

பரமசிவன் வாசலிலே பலநாள் தவமிருந்து
பரமசிவனுர் தந்த பைங்கிளியே கண்வளராய்! 6

தூரத்துக் கோயிலுக்குத் தூண்டாவிளக் கேற்றுவிப்பார்
காதத்துக் கோயிலுக்குக் காணிக்கை போடுவிப்பார்; 7

குளிக்கக் குளம்வெட்டி கும்பிடக் கோயில்கட்டி
படுக்கமடங் கட்டுவிப்பார் பாக்கியவான் உங்களப்பா; 8

கொம்புக் கனியோ கோதுபடா மாங்கனியோ
வம்புக் கழுகிறீரோ வாயெல்லாம் தேனூற? 9

மந்தி குதிபாயும் மாப்பழுத்த சோலையிலே
தம்பி குதிபாய்வான் தன்தாயார் மடிமேலே; 10

2.5 கோவலரே நித்திரைபோ

ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ

கண்ணு மணிஉறங்கு கானகத்து வண்டுறங்கு
பொன்னு மணிஉறங்கு பூமரத்து வண்டுறங்கு. 1

வாசலிலே வன்னிமரம் வம்முசங்க ராசகுலம்
ராசகுலம் பெத்தெடுத்த ரத்தினமே கண்ணுறங்கு; 2

பச்சை இலுப்பைவெட்டி பால்வடியும் தொட்டிகட்டி
தொட்டிக்கு மேலே துணையிருப்பா மாரியம்மா; 3

முத்திடிச்சு மாகொளிச்சு முத்தமெல்லாம் கோலமிட்டு
கோலமிட்ட திண்ணையிலே கோவலரே நித்திரைபோ; 4

2.6 சீதேவி நித்திரைசெய்

மாமாமா மாமாமா ஜீஜீஜீ மாமாமா
கறுத்த மாமா சொஹத்த மாமா கக்கு கொண்டு வாமாமா
சிறுத்த வாயாலே தின்ன சீனிகொண்டு வாற மாமா
எங்க மாமா தோட்டத்திலே இருக்க நல்ல இடமுமுண்டு; 1

குளிக்க நல்ல குளமுமுண்டு கொக்கு குயில் தானுமுண்டு
வழிக்கு வழி சருவுமான் முசல் உறங்கிடுமாம்; 2

முத்துப்போல் நீர்வடிய மோதிர வாயும் நோவ
கத்திக் கதறுதே காலமே நாம் போய்ப் பார்ப்போம்: 3

வாப்பா இருந்தாக்கால் வாரி உன்னைத் தோளில்வைத்து
பூப்போல உலவிடுவார் பொறுதியுடன் கண்வளராய், 4

மத்தவர்கள் உன்தாயை மலடியெண்டு தள்ளாமல்
பெத்தெடுத்த கண்மணியே பேர்வழங்க நீவளராய். 5

மாமி அடித்தாளோ மருதோண்டிக் கொப்பாலே
தேமி அழுகாமல் சீதேவி நித்திரைசெய்; 6

சாச்சா அடித்தாரோ சாயப் பெரம்பாலே
பூச்சிகள் குத்தினபோல் புலம்பாதே நித்திரைசெய்; 7

ஆச்சி அழுதிடுவாள் அம்மாளும் கண்படுகாள்
சாச்சி கலங்கிடுவாள் சத்தமிட்டால் சந்தறிய. 8

மாமி மலைத்திடுவாள் மச்சிவியும் ஏங்கிடுவாள்
நாமத மில்லாமல் சுறுதியாய்க் கண்வளராய்; 9

கூவுதற்குச் சாவல்வரும் கொக்கரிக்கக் கோழிவரும்
ஞாவுசெல்லப் பூனைவரும் நல்மகனே நித்திரைசெய்; 10

பக்கீர் வருவானே பாம்பூச்சி தானேவரும்
பொக்கவாய்ச் சிங்களத்தி போடஒமல் கொண்டருவாள்; 11

மண்ணாலே சோறுக்க மரச்சட்டி பானைதனை
கொண்டாறன் என்றுகாக்கா கொழும்புக்குப் போனாராம்; 12

பச்சமுந்திரிக் குலையும் பப்பளிக்கா அப்பிளிஸும்
பிச்சிவரப் போனகாக்கா பின்னேரம் வந்திடுவார்; 13

கட்டமச்சான் நெட்டமச்சான் காய்கறி கொண்டாறமச்சான்
பொட்டிதனில் முட்டாயும் போட்டுவாடா சின்னமச்சான்; 14

பொன்னால் காமரங்கா போல விதுறுக்காயும்
முன்னால் தூக்கிவைக்க மூத்தமச்சான் கொண்டருவான், 15

பட்டைப் பாணிகளுடன் பால்பிலக்கும் தோல்முலையும்
பெரட்டிமாவும் வருமே பேரஜனிச்சக் கண்வளராய்; 16

பொட்டிவரும் போளேவரும் புயோருடனே பூவும்வரும்
கட்டிச் சவுக்காரமுடன் கண்ணூடி லெஸன்றும்வரும். 17

தோள்க்கை மணியும்தட்டி டொண்டொம்வரும் பின்னேரம்
தேள்ளவயெண்டால் கண்டுகொள்ள சீதேவி நித்திரைசெய்; 18

ஆட்டியே கையுளேவு ஆராட்டி வாயுளேவு
கோட்டிசொன்ன பாவமெல்லாம் கோமான் பெறுக்காமின், 19

2.7 உபதேசப்பிள்ளை தாராட்டுச் சிந்து

ஆரா ராரா ராராரோ ஆரிரி ராரா ராராரோ
ஆரா ரெவரும் எவ்வுலகும் அவனே அல்லால் வேருரோ. 1

சீரா உலகம் படைத்தோனின் சிறப்பாம் அல்லா(ஹ்)
எனு நாமம்
நேராய் கல்பில் வைத்தே நினைவாய் உறங்கு என்மகளே; 2

ஆரா ரெவரைப் புகழ்ந்தாலும் எல்லாம் அல்லா(ஹ்)
தனக்காகும்
தேராய் நீளே தந்தோளே நித்தம் புகழ்வாய் என்மகளே; 3

செல்வாய் நபிமேல் ஸலவாத்தை செல்வம் பெருகி முடதீரும்
எல்லாம் அவர்கள் ஒளிவாலே அல்லா(ஹ்) படைத்தான்
என்மகளே; 4

தூங்கும் தொட்டிலில் றஹ்மான் தன்னை நித்தம் மறவாமல்
பாங்காய் கவியைக் கேட்டறிந்து பலன்நீ பெறுவாய்
என்மகளே; 5

ஈமான் உடனே கலிமாவை ஓதித் தொழுது முதலீந்து
சீமான் தனக்காய் நோன்புவைத்து ஹஜ்ஜும் செய்வாய்
என்மகளே; 6

ஏவல் எடுத்து விலகலேவிழ்த்தி அஞ்சிப் பயந்து தொள
பாச்செய்
பாவம் நன்மையா றஹ்மான் பதலாக்குவான் என்மகளே; 7

பொய்யும் புறமும் கோள்ஹஸது பொருமை பெருமை
முகத்தாழ்ச்சி
கய்யூம் தமக்காய் நீதவிர்ந்து கல்பை கழுவு என்மகளே; 8

சிறப்பாம் பாவம் அடங்கலுக்கும் துன்யா தன்னை உகப்பதென
அரசர் முகம்மது றஸூல் மொழிந்தார் காரணம் என்மகளே. 9

ஊரில் பொருளும் பட்டணமும் எல்லாம் உனக்கே
கிடைத்தாலும்
நீரின் குமிழி போலழியும் நிலைக்கும் நல்ல அமல்மகளே. 10

துன்யா வாழ்க்கை கனவைப்போல் துன்ப முடனே அதுதானும்
மனதால் வெறுத்தால் அழியாத வாழ்வைப் பெறுவாய்
என்மகளே. 11

கொஞ்ச நாளில் துன்யாவில் கலப்பற அமலை நீசெய்தால்
பஞ்ச வர்ணத் தொட்டிலின்மேல் பவ்ஸாய் ஆடுவாய் மகளே. 12

இருமை நீக்கி தவ்ஹீதின் அருமை மஃரி பாகுடிப்பை
பெரியோன் புகட்டு வானுமீன் கவ்துல் அஃழம் பொருட்
டாலே. 13

3. விளையாட்டுப் பாடல்கள்

3.1 சாய்ந்தாடு பாவா

சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
அண்ணல் முஹம்மது முன்னாலே
சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
அழகு நிலாவே சாய்ந்தாடு; 1

சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
சாயற் கிளியே சாய்ந்தாடு
சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
மயிலே குயிலே சாய்ந்தாடு; 2

சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
வட்டிலுன் சோற்றுக்குச் சாய்ந்தாடு,
சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
வாழைப் பழத்துக்கும் சாய்ந்தாடு; 3

சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
கிளிப்பிள்ளை வார்த்தைக்குச் சாய்ந்தாடு
சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
கோர்த்த முத்தே சாய்ந்தாடு. 4

சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
ஆட்டுக்கும் சோற்றுக்கும் சாய்ந்தாடு
சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
அமுதக் குரலே சாய்ந்தாடு; 5

சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
அழகு மயிலே சாய்ந்தாடு;
சாய்ந்தாடு பாவா சாய்ந்தாடு
மாடப் புறவே சாய்ந்தாடு, 6

3.2 கிட்டியடித்தல்

கவடியடிக்கக் கவடியடிக்கக்
கைகால் முறியக் கைகால் முறியக்
காலுக்கு மருந்து தேடிக்கட்டு தேடிக்கட்டு; 1

மாம்பட்டை மருதம்பட்டை வெளவாலோடிய தென்னம்பட்டை
பூம்பட்டை புளியம்பட்டை பட்டணம் பட்டணம் பட்டணம்; 2

ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு
பாலாறு பாலாறு பாலாறு; 3

கிழாறேழை மேலாறேழை எண்ணிப்பார்த்தால் பதினாறேழை
கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு 4

ஆலஞ்சருகு மடமடவெனவே அங்கொருவண்டி உருண்டுவரக்
காலாடிவரப் பொழுதேறிவரத் தெந்தட்டத் தெருத்தட்ட
தெருவெங்கும் பொறித்தட்ட பூம்பட்டை புளியம்பட்டை
வெளவாலோடிய தென்னம்பட்டை கவடிக் கவடிக் கவடிக்; 5

3.3 கும்மி—1

தன்னானே நாதினம் தன்னானே — தன
தன்னன நாதினம் தன்னானே;

தன்னானே என்றுமே சொல்லுங்கடி — ஓங்க
நாவுக்குச் சக்கரை நான் தாரேன்
இல்லாலே என்றுமே சொல்லுங்கடி
திங்கச் சக்கரை நான் தாரேன்; 1

டடடன்னு மழை பேய
கம்பிலி தண்ணி அலைமோத
காரியகாரராம் நம்மய்யா கங்காணி
கடுக்கன் மின்னலைப் பாருங்கடி; 2

குதிர வாரதப் பாருங்கடி—ஐயா
குவிஞ்சு வாரதப் பாருங்கடி
குதிர மேலதான் நம்மய்யா கங்காணி
குவிஞ்சு சம்பளம் கேளுங்கடி. 3

நன்னய மாகவே கொண்டைகட்டி
நாகூரு லேஞ்சிய மேலேகட்டி
கண்ணிய மாகவே வாராரு— ஐயா
காசு பணமள்ளித் தருவாரு. 4

3.4 கும்மி—2

கும்மியடி பெண்ணே கும்மியடி
குபிரொடுங்கி யோடவே கும்மியடி
நம்மை யாளும் இறைவனை நிதமும்
நாடிக் கும்மி யடியுங்கடி—தினம்
தேடிக் கும்மி யடியுங்கடி. 1

ஆலம் படையுண்ணக் காரணமாய் நின்ற
அண்ணல் முஹம்மது நன்னபிமேல்
சாலவுமா ஸலவாத்தினை ஓதி
சந்திக்கக் கும்மி யடியுங்கடி—மனம்
ஒன்றிக்கக் கும்மி யடியுங்கடி. 2

காட்டினில் வாழும் மானுக்குப் பிணைநின்று
காரணம் ஆனந்தம் காட்டி மறை
ஏட்டி லடங்காத இறைவன் தூதரை
இசைந்து கும்மி யடிங்கடி—மெல்ல
அசைந்து கும்மி யடியுங்கடி. 3

வாக்கும் மனமும் பொருந்தச் சொல்லும் கலி
மாவின் பொருளை மனதில் வையா
மாக்களை ஏகன் வதைப்பானென் றெண்ணியே
வருந்திக் கும்மி யடியுங்கடி—உண
வருந்திக் கும்மி யடியுங்கடி. 4

நாளொன்றுக் கைந்து விசைவணங் காரந்த
நாளில் நரகந் தனிலிருந்தே
தேளொன்று கொட்டித் திகைப்பவ ரென்றே மனம்

தேம்பிக் கும்மி யடியுங்கடி—முகம்
கூம்பக் கும்மி யடியுங்கடி; 5

கள்ளு சாராயம் தனைக்குடித்து சடை
கஞ்சா அபினி மிகப்புசித்தே
துள்ளி விழுந்தலைந்தே நடக்கின்றவர்
சுருங்கக் கும்மி யடியுங்கடி—எரி
நெருங்கக் கும்மி யடியுங்கடி. 6

3.5 கோலாட்டம்

தினதந்தினா தினதந்தினா
தினதந்தினா தினனா—
தினதந்தினா தினனா
தின்னாதி னாதந்தினா
தினதந்தினா தினனா— 1

பன்னிரண்டு கயிர் போட்டு
பள்ளிப் பிள்ளை யாட
பள்ளிப் பிள்ளை யாட
பாங்கான பாடல்களும்
பக்கத்திலே பாட; 2

ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும்
அருகில் நின்று பார்க்க
அருகில் நின்று பார்க்க
ஆதிசிவன் என்று சொல்லி
அனைவருமே சொல்வார்; 3

பூமணக்கும் பெண்மணிகள்
போற்றி வந்து சூழ
போற்றி வந்து சூழ
பொன்னெழுக நன்னயத்தில்
நன்னயமா தாயே; 4

3.6 கொம்பு விளையாட்டு

கோலப் பணிச்சேலை கொய்துடுத்துக்
கொம்பு விளையாட்டுக்குப் போகையிலே
வேலப்பா வந்து மடிபிடித்த
மெத்தவும் சிக்கிக்கொண்டார் தோழீ; 1

காப்பணி மங்கையர் மன்மத வேள்
    கந்தன் குமரன் அருள்வேலன்
சிப்புடன் மல்லிகைப் பூமாலை தந்து
    சேர்வமென் றுரடி தோழியரே: 2

வேறு

மஞ்சள் குருவி போலவே
    மடிநிறைந்த தோர் மல்லிகைப்பூ
சிந்தித் தெருவில வாற
    சிறுக்கனல் லோடி தென்சேரியான்: 3

ஆற்றோரம் போறமயில்
    ஆண்மயிலோ அதுபெண்மயிலோ
பார்த்துவாடா வடசேரியான்
    பாவற்பழம்போல மாலைதாறேன்: 4

ஆற்றோரம் சிறும்பிகட்டி
    அங்குநின்று படைபொருது
வேர்த்துவாருன் வடசேரியான்
    வெள்ளி மடல்கொண்டு வீசுங்கடி: 5

ஆற்றோரம் சிறும்பிகட்டி
    அங்குநின்று படைபொருது
தோற்றுவாருன் வடசேரியான்
    துடைப்பங் கட்டால் அடியுங்கடி: 6

வடசேரியான் கொம்பு எங்கே எங்கே?
    மணமுள்ள தாழையின் மேலே மேலே;
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே?
    செம்பரப் பற்றைக்கு உள்ளே உள்ளே: 7

தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே?
    சித்திரத் தேருக்கு மேலே மேலே;
வடசேரியான் கொம்பு எங்கே எங்கே?
    வண்ணாவிட சாடிக்கு உள்ளே உள்ளே: 8

தவிட்டங் காயான் தென்சேரியான்
    தன்மானம் சற்றும் இல்லான்டி
அவிட்டுத் தலைப்பாவைக் கையிலெடுத்து
    அஞ்சி அதோ ஓடிப் போறான்டி: 9

வாழைக் காயரன் வடசேரியான்
    மாணசனம் கெட்டலண்டி
பெண்ணின்னைப் பேச்சுக்கு ஆற்றுமலே அவன்
    பேரழிந்தே வெட்கிப் போறான்டி: 10

3.7 ஊஞ்சற் பாட்டு

தந்தன தனதன தனதன தனனே
தானு தனதந்த னுதந்த னனே:

வாருமடி தோழியரே நாங்களிரு பேரும்
வந்தசிவ ராத்திரியை சிந்தையுடன் நோற்போம்: 1

கடற்கரையில் மணற்பரவி நடக்க முடியாது
கானலிலும் வெய்யிலிலும் ஓட முடியாது: 2

கச்சாயிற் புளியிலே ஊஞ்சாலுங் கட்டி
கனகனு தெருவிலே கூத்துமொன் ருடி 3

காலைாலே சரசரக்க வண்டென் றிருந்தேன்
காக்கொத்து மச்சானைப் பெண்டென் றிருந்தேன்; 4

ஓடோடு புளியம்பழம் உடைந்துடைந்து விழுவானேன்
ஒரு இன்னச் சந்தனம் ஒழுகொழுகப் பூசுவானேன்; 5

கண்டபிணி கொண்டவலி கால்மாறி ஓட
கண்டசிவ ராத்திரியை காதலுடன் நோற்பாய்: 6

ஏறுமயி லேறிவிளை யாடிமலை தோழி
இரணியனைக் கொன்றமலை தெரியுதடி தோழி; 7

விளையாட வெகுதுயரம் வருகுதடி தோழி
மெதுவாக ஊஞ்சலைத் தணியுமடி தோழி. 8

4. வேடிக்கைப் பாடல்கள்

4.1 சந்த மாமா

என் பொண்டாட்டி சண்டைக்காறி — சந்த மாமா
இண்டைக் கெல்லாம் ஏசக்கேப்பாள் — தோழமாமா
தஞ்சாவூர் சந்தைக்குப் போனேன் — சந்த மாமா
சாகிற கிழவியைப் போட்டடித்தேன் — தோழ மாமா
எட்டு நாளாய்ச் செத்துக்கிடந்த சாரைப் பாம்பை —
சந்த மாமா

எட்டி நிண்டு தொட்டுப் போட்டேன் — தோழ மாமா
ஓட்டைப் பானைக்கை ஓணான் பூந்தது — சந்த மாமா
அடிக்கப் போனேன் கடிக்க வந்தது — தோழ மாமா
கடைக்குப் போனேன் வெத்திலை வாங்கச் — சந்த மாமா
காசு கொடாமல் ஓடிவந்தேன் — தோழ மாமா
என்னைப் போலச் சமத்த னுண்டோ — சந்த மாமா
இத்தனை போலே ஒருவனைக் காட்டடா — தோழ மாமா
இரண்டாட்டுக்கு எட்டுக் காலடா — சந்த மாமா
என் பெண்டாட்டியைக் கேட்டுப் பாரடா — தோழ மாமா;

4.2 ஏண்டி குட்டி

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய்?
அம்மியடியில் கும்மி யடித்தேன் சும்மாவா இருந்தன்? 1

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய்?
ஆட்டுக் குஞ்சுக்கு ஆறுதல் பண்ணினேன் சும்மாவா
இருந்தன்? 2

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய்?
கோழி முட்டையிலே மயிர் பிடுங்கினேன் சும்மாவா
இருந்தன்? 3

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய்?
பாம்புக் குட்டிக்குப் பல்விளக்கினேன் சும்மாவா
இருந்தன்? 4

4.3 எலிப்பாட்டு

கோட்டிகள் பண்ணுதே எலியேநீ வீட்டிலே நில்லாதே
எலியே நீ வீட்டிலே நில்லாதே
நாட்டுப் பயிரை நஷ்டப் படுத்திறுய்
நல்ல இளனியை நறுக்கி வீழ்த்திறுய்
வீட்டில பண்கள் மிகவிசைக்கிறுய்
மேட்டி லோடியே ஓட்டைச் சரிக்கிறுய்.
(கோட்டிகள் பண்ணுதே...) 1

ஓலைக் கூரையில் ஒதுங்கி நிற்கிறுய்
ஒருமழை வந்தால் ஒழுகச் செய்கிறுய்
வாலைக் காட்டியே வழியில் ஓடுருய்
மற்ற விடமெல்லாம் சுத்தித் திரிகிறுய்.
(கோட்டிகள் பண்ணுதே...) 2

ஆனைக் குட்டிபோல் அங்கிங்கு ஓடுருய்
அடிக்கப் போனுல் அஞ்சிப் பதுங்கிறுய்
பூனையைக் கண்டு பொறி கலங்கிறுய்
பொல்லாத பூனைக்குப் பின்னர் இரையாகிறுய்;
(கோட்டிகள் பண்ணுதே...) 3

தேங்காய்ப் பாதியில் சித்திரம் கொத்துருப்
திண்டு முடினுல் திறந்து வைக்கிறுய்
வாங்கும் சாமானை வாரி இழுக்கிறுய்
மண்ணினை மானிடர் கண்ணிலே போடுருய்;
(கோட்டிகள் பண்ணுதே...) 4

படுக்கும் மெத்தையில் பஞ்சை இழுக்கிறுய்
பாத விரல்நகம் பல்லால் கடிக்கிறுய்
அடுக்கும் கறியை அலக் கழிக்கிறுய்
அல்லும் எல்லும் இந்தப் பொல்லாங்கு செய்கிறுய்,
(கோட்டிகள் பண்ணுதே...) 5

பீங்கான் கோப்பையைப் பிரட்டிப் போடுருய்
பெட்ட கத்துக்குள் பிரளி பண்ணுருய்

தாங்கு லாச்சியைத் தறித்துவி ளாகிறாய்
தட்டலு மாரிக்குள் குட்டுகுட் டென்கிறாய்;

(கோட்டிகள் பண்ணாதே...) 6

கூரை மீதிலே கூடிக் குலாவுறாய்
குட்டிப் பன்றிபோல் குஞ்சு பொரிக்கிறாய்
சாரை விரட்டில் தப்பிப் பிழைக்கிறாய்
சற்றே அகப்பட்டால் செத்துப் போகிறாய்;

(கோட்டிகள் பண்ணாதே...) 7

வெள்ளனைத் தின்ன வெள்ளாட்டி மூடுவாள்
விழித்துப் பார்க்கப் பின்னே வெட்கித்தழுவாள்
கள்ளி யெண்டவள் கன்னத்தடி கொள்வாள்
கன்ம மெலிக்கெண்டு தன்னைத் திட்டுவாள்.

(கோட்டிகள் பண்ணாதே...) 8

எச்சியைத் திண்டாக்கால் இல்லாத நோய்வரும்
எவர் திண்டாலும் ஈளைக் கசம்வரும்
நச்சு வீக்கம் நரம்புத் திமிர்வரும்
நாள்ச் செண்டால் உயிர்மீட்டாத சாவுவரும்;

(கோட்டிகள் பண்ணாதே...) 9

4.4 சிங்கிலி நோனா

சிங்கிலி நோனா சிங்கிலி நோனா
சிப்புக் கொண்டைக் காரி;
பார்த்த பேர்கள் ஆசைப்படும்
பந்துக் கொண்டைக் காரி. 1

காடை கௌதாரி மைனா
வாங்கலையோ, ஆயாளு!
கட்டிப் பொட்டுத் தீனைப்போட்டால்
முட்டை போடும் ஆயாளு! 2

சிறுக்கி லதக்கிற சின்னவளசி
வாங்கலையோ, ஆயாளு!
பிசகத் தைத்திட்டு மேலே போட்டால்
நல்லாயிருக்கும் ஆயாளு! 3

5. காதற் பாடல்கள்

5.1 காதலன் கூற்று

ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே
ஓசைக் குரலாலே – உங்க உம்மாவைக் கூப்பிடுகா; 1

கடலே இரையாதே காற்றேநீ வீசாதே
நிலவே எறியாதே – என்ர நீலவண்டுபோய்ச் சேருமட்டும்: 2

மாமி மகளே என்ர மருதங்கிளி வங்கிசமே
ஏலங் கிராம்பே உன்னை என்னசொல்லிக் கூப்பிடட்டும்? 3

கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப் படாதே கண்ணூர்
அல்லாமேல் ஆணை – உன்னை அடையாட்டி காட்டுப் பள்ளி. 4

சினத்துச் செப்பே – என்ர சிங்காரப் பூநிலவே
வானத்தைப் பார்த்து – மச்சி வாடுவது என்னத்திற்கோ? 5

ஓதிப் படிச்சி ஊர்புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய்ததீங்கை – அல்லா என்னளவும் ஏற்க
மாட்டான்; 6

காவற் பரணிற் கண்ணுறங்கும் வேளையிலே
கண்ணுறை மச்சி வந்தென் காலூன்றக் கண்டேனே; 7

காசி தரட்டோமச்சி கதைத்திருக்க நான்வரட்டோ
தூதுவரக் காட்டிடட்டோ – இப்போ சொல்கிளியே
உன்சம்மதத்தை. 8

5.2 காதலி கூற்று

ஓடையிலே போறதண்ணி தும்பிவிழும் தூசிவிழும்
கிட்டுச்சு வாரிகமச்சான் குளுந்ததண்ணி நான்தாறேன்; 1

ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரக்கண்டாற் சொல்லிடுங்க
பூவரசங் கன்னியொன்று பூமலர்ந்து வாடுதென்று; 2

ஓதக்குர் ஆனிருக்க 'ஒழு'வெடுக்கச் செம்பிருக்க
வேதமும் இங்கிருக்க வேறு 'ஹறும்' தின்னலாமோ? 3

வாவென் றழைப்பேன் மச்சான் வாசலிலே பாய்தருவேன்
வாப்பா அறிஞ்சாரெண்டால் வாளெடுத்து வீசிடுவார்; 4

நித்திரைக் கண்ணிலேயும் நினைவிலேயும் தோணுறது
'கலிமா' விரலும் மச்சான் கல்பதித்த மோதிரமும்; 5

நெற்றிக்கு நேரே நிலாக்கிளம்பி வாறதுபோல்
வேலிக்கு மேலால – மச்சான்ர வெள்ளைமுகம் காண்ப
தெப்போ; 6

மச்சானே இன்பம் மணக்கின்ற சீருவே
உச்சால சாய – வாப்பா உறுகாமம் போகின்றார்; 7

மாலை விளக்கெரிய மணவாளன் சோறுதின்னப்
பாலன் விளையாட – ஒரு பாக்கியந்தா ஆண்டவனே; 8

5.3 தோழி கூற்று

அக்கரைப் பற்றோ அவருங் கரவாகூரோ
சாய்ந்த மருதூரில் சாதிசனம் உண்டாமோ? 1

காக்கொத் தரிசாம் கண்ணுழுந்த செத்தமீனும்
போக்கத்த மீரானுக்கு பொண்ணுமாகா வேணுமாம் 2

கச்சான் அடித்தபின்பு காட்டில்மரம் நின்றதுபோல்
உச்சியில் நாலுமயிர் ஓரமெல்லாம் தான்வழுக்கை; 3

கண்ணுமொரு பொட்டை காதுஞ் செவிடாகும்
குருத்தெடுத்த வாழைபோல – அவர் கூனி வளைந்திருப்பார்; 4

முப்பத்தி ரெண்டிலே மூணுபல்லுந் தான்மீதி
காகக் கறுப்புநிறம் – ஒரு காலுமல்லோ முடமவர்க்கு; 5

நாணற் பூப்போல நரைத்த கிழவனுக்கு
கும்மாளம் பூப்போல் – இந்தக் குமர்தானோ வாழுறது? 6

காலக் கொடுமையிது கலிபுரண்டு போச்சுதடி
நாலுதுட்டுக் காசு—இப்போ ஞாயமெல்லாம் பேசுதடி; 7

அத்தர் புனுகுகளாம் அழகான பவுடர் மணம்
இஞ்சிதின்ற குரங்குபோல இவருக்கேனோ இச்சொகுசு? 8

5.4 காதலன் பிரிவுணர்த்தல்

காதல்ன்

சாந்தாரிக்குச் சந்தனமே சாதிமரிக்கொழுந்தே—உன்னை
வெறுத்துட்டுப் போறமுனு வேலைவிட்டு வந்திடாதே; 1

காதலி

மதுரைச் சரவிளக்கே நான்படிக்கும் பொஸ்தகமே
பூனைக வாசகரே—நீங்க போகமனம் வந்ததென்ன? 2

காதலன்

வட்டுக் கருப்பட்டியே வாசமுள்ள சுண்ணும்பே
புட்டுக் கருப்பட்டியே—நான் போறேண்டி தோட்டம்விட்டு; 3

தோட்டம்விட்டு போறமுனு துயரங்களை வைக்காதே—நீ
மாதம்ஒரு பயணம் வந்துஒன்னைப் பார்த்திடுவேன்; 4

காதலி

ஓடும் தண்ணியிலே ஆடுர பம்பரமே
பம்பரத்தை நம்பிஅல்லோ தெம்பரப்பாப் போனேனே! 5

5.5 காதலர் சல்லாபம்

ஊரார் உறங்கையிலே உற்றாருந் தூங்கையிலே,
நல்லபாம்பு வேடங்கொண்டு நான்வருவேன் சாமத்திலே, 1

நல்லபாம்பு வேடங்கொண்டு நடுச்சாமம் வந்தாயானால்,
ஊர்க்குருவி வேடங்கொண்டு உயரப் பறந்திடுவேன்; 2

ஊர்க்குருவி வேடங்கொண்டு உயரப் பறந்தாயானால்,
செம்பருந்து வேடங்கொண்டு செந்தூக்காய்த் தூக்கிடுவேன்; 3

செம்பருந்து வேடங்கொண்டு செந்தூக்காய்த் தூக்கவந்தால்
பூமியைக் கிறியல்லோ புல்லாய் முளைத்திடுவேன்; 4

பூமியைக் கிறியல்லோ புல்லாய் முளைத்தாயானால்,
காராம்பசு வேடங்கொண்டு கடித்திடுவேன் அந்தப்புல்லை; 5

காராம்பசு நீயானால் கழுத்துமணி நானாவேன்,
ஆல மரத்தடியில் அரளிச்செடி தானாவேன்; 6

ஆல மரமுறங்க அடிமரத்தில் வண்டுறங்க
உன்மடியில் நானுறங்க என்னவரம் பெற்றேனடி; 7

அத்திமரம் நானாவேன் அத்தனையும் பிஞ்சாவேன்
நத்திவரும் மச்சானுக்கு முத்துச்சரம் நானாவேன்; 8

6. தொழிற்பாடல்கள்

6.1 ஏற்றப்பாடல்

மழை வடக்கே பேய வரும் கிழக்கே வெள்ளம்!
தெற்கே மழை பேய திரும்பி வரும் வெள்ளம்!
வெள்ளம் கண்ட நாரை வெளிச்சி கொண்டு போகும்
தண்ணி கண்ட நாரை தவளே கொண்டு போகும்!
ஆத்தைக் கண்ட நாரை அயிரை கொண்டு போகும்!
குளத்தைக் கண்ட நாரை கொரவை கொண்டு போகும்
ஆத்தைக் கண்ட சுப்பன் அதிலே முழுகு வானும்!
குளத்தைக் கண்ட குப்பன் குளிச்சு முழுகு வானும்!
ஓரடியா லிந்த உலகளந்த ராமா
ஒருபதியா லொண்ணு!

6.2 ஏர் பூட்டும்போது பாடும் பாடல்

பட்டி பெருகவேணும் தம்பிரானே
பாற்பானே பொங்கவேணும் தம்பிரானே
மேழி பெருகவேணும் தம்பிரானே
வேளாண்மை விளேயவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே
நல்லமழை பெய்யவேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே.

6.3 ஏர்ப்பாட்டு

ஓரம்போஹ...... ......சார்பார்
ஏளஎ..... ......ஹேஎஎ
சார் பார்த்த கள்ளனடா-செல்லன்
தாய் வார்த்தை கேளாண்டா. 1

பாரக் கலப்பையடா-செல்லனுக்கு
பாரமெத்தத் தோணுதடா, 2

வரம்போ தலைகாணி—செல்லனுக்கு
வாய்க்காலோ பஞ்சமெத்தை. 3

செல்லன் நடந்தநடை—இன்று
சொல்லவொண்ணா அன்னநடை. 4

இந்தநடை தானே—செல்லனுக்கு
இன்னுமுண்டோ அன்னநடை? 5

இந்தநடை நடந்து—செல்லா நாம்
எப்போகரை சேர்வமடா? 6

வெள்ளி மதியாணி—செல்லனுக்கு
வெண்கலத்தால் சுள்ளாணி. 7

வெள்ளியினால் சுள்ளாணி—என் தம்பி செல்லா
உந்தனுக்கு வெண்கலத்தால் மதியாணி. 8

சுள்ளாணிக் குள்ளே—செல்லா ஒரு
சூத்திரத்தை வைத்தாண்டா. 9

சாரை அறிவாண்டா—செல்லன்
சார்ப்பலகை தப்பாண்டா. 10

மூலை வரம்போரம்—செல்லாநீ
முடுகிவளை நல்லகண்டே; 11

ஓடிநட கண்டே—செல்லாநீ
உறுதியுள்ள காலாலே. 12

தள்ளாடித் தள்ளாடி—செல்லன்
சாய்ந்தாடிப் போறாண்டா. 13

தள்ளாதே கண்டே—நீ
சலியாதே நல்லகண்டே. 14

முன்னங்கால் வெள்ளையல்லோ—செல்லனுக்கு
முகம்நிறைந்த சீதேவி. 15

எட்டுக்காலோடே செல்லா-நமக்கு
இருகால் தலைமூன்று. 16

வானம் குடையாமோ—செல்லனுக்கு
மல்லிகைப்பூச் செண்டாமோ. 17

ஆழியிலே போய்முழுகி-செல்லாநீ
அண்டிவந்த தீரனடா. 18

கறுப்பாய் இருண்டமழை—தம்பிசெல்லா அங்கே
காலுழுந்து போகுதடா. 19

6.4 அரிவிவெட்டுப் பாடல்

ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருமாப்போல்
அதன்பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப்போல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருமாப்போல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப்போல்
சினந்தரிவி வெட்டும் இளந்தாரி மாரை
கண்ணான எங்களூர் இளந்தாரி மாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே. 1

மட்டுருக் காலை அருவாளு மடித்து
மாவிலங்கன் பிடி சீவி யிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளித் தகட்டினால் விரல்கூட்ட மிட்டு
வளர்ந்தரிவி வெட்டும் இளந்தாரி மாரை
நாலூறு வாராமற் காரும் ஐயனாரே. 2

6.5 அறுவடைப் பாடல்கள்

(ஆண்பெண் ஏசல்)

ஆம்பிள்ளைங்க கட்டும்வேட்டி ஏலேலக் குயிலே
அசடுபட்ட வெள்ளைவேட்டி ஏலேலக் குயிலே. 1

பொம்பிள்ளைங்க கட்டும்பட்டு ஏலேலக் குயிலே
அழகான மஞ்சப்பட்டு ஏலேலக் குயிலே. 2

ஆம்பிள்ளைங்க உண்ணும்சோறு ஏலேலக் குயிலே
அடிச்சட்டித் தீவச்சோறு ஏலேலக் குயிலே; 3

பொம்பிளைங்க உண்ணும்சோறு ஏலேலக் குயிலே
பொழுதோடெ பொங்கச்சோறு ஏலேலக் குயிலே 4

ஆம்பிளைங்க தேய்க்கும்எண்ணை ஏலேலக் குயிலே
அசடுபட்ட தேங்காய்எண்ணை ஏலேலக் குயிலே 5

பொம்பிளைங்க தேய்க்கும்எண்ணை ஏலேலக் குயிலே
அழகான சம்பங்கிஎண்ணை ஏலேலக் குயிலே. 6

ஆம்பிளைங்க வைக்கும்பொட்டு ஏலேலக் குயிலே
அசடுபட்ட கருவப்பொட்டு ஏலேலக் குயிலே. 7

பொம்பிளைங்க வைக்கும்பொட்டு ஏலேலக் குயிலே
அழகான சாந்துப்பொட்டு ஏலேலக் குயிலே. 8

6.6 மீன்பிடிகாரர் பாடல்

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே.

கடல்கடந்து செல்வதற்கு தோணியுமுண்டு;
கட்டைச்சுறு உழுவைமீன் கடலிலேயுண்டு;
கடவுள்தந்த கைகளே முழுப்படவுண்டு;
—மச்சான் முழுப்படவுண்டு.

கடல்கடந்து மீன்பிடிப்போமே—வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே;
முப்பதுநாள் உழைத்துழைத்து நிறையப்பணம் வாங்கி—
அதை மூன்றுநாளில் திண்டுவிட்டுக் கடனையும் வாங்கி,
பாக்கிநாளில் பெரும் பகுதியைப் பட்டினியாக்கி — மனப்
பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்;
—மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்.

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே.
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே.

6.7 தோணிக்காரன் பாடல்

மீரா மீரா நாகூர் மீரா
விண்ணப்பந் தருவீரா.
அப்பியல் மாதம் அடைமழை காலம்
அறியாமல் பாய்விரித்தேன்;

ஒருமுழத் தோணி ஒன்பது பலகை
கொண்டோடச் செய்மீரா.
(மீரா மீரா ... .) 1

பாய் கிழிந்தது பாய்மர முடைந்தது
பதறுமே என்மனைவி;
குஞ்சி குழந்தை முகத்தில் முழிக்கக்
கொண்டோடச் செய்மீரா.
(மீரா மீரா... ...) 2

6.8 தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பாடல்

வாடை அடிக்குதடி வடகாத்து வீசுதடி
சென்னல் அடிக்குதடி—நாம் சேந்துவந்த கப்பலிலே. 1

எண்ணிக் குழிவெட்டி இடுப்பொடிஞ்சு நிக்கயிலே
வெட்டுவெட்டு எங்கிறுரே பொட்டுவச்ச கங்காணி. 2

ஆத்தோரம் கொந்தரப்பு அதுநெடுக வல்லாரை
வல்லாரை வெட்டியல்லோ-என் வல்லமை கொறஞ்சு தய்யா 3

ஊரான ஊர்இழந்தேன் ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பாரான கண்டியிலே பெத்ததாயும் வீடிழந்தேன். 4

6.9 சாலை அமைப்போர் பாடல்

ஒரு தட்டு— ஏலேலோ
மண்ணெடுத்து —ஐலசா
நான்போட்ட—ஏலேலோ
ரயிலு ரோட்டு—ஐலசா
நான் போட்ட—ஏலேலோ
ரோட்டுக்குள்ளே—ஐலசா
நம்மதுரை—ஏலேலோ
வருவாரிப்போ—ஐலசா
நம்மதுரை—ஏலேலோ
வந்தவுடன்—ஐலசா
நமக்குப் பணம்—ஏலேலோ
தருவாரிப்போ—ஐலசா
கொடுக்கிறது—ஏலேலோ
ராணித்துட்டு—ஐலசா
எடுக்கிறது—ஏலேலோ
மணிப்பிரம்பு—ஐலசா.

7. ஒப்பாரிப் பாடல்கள்

7.1 தாயாரின் ஒப்பாரி

பொன்னான மேனியிலே—ஒரு
பொல்லாதநோய் வந்ததென்ன !
தங்கத் திருமேனியிலே—ஒரு
தகாதநோய் வந்ததென்ன ! 1

ஊருப் பரிகாரி—ஒரு
உள்ளகதை சொல்லவில்லை ;
நாட்டுப் பரிகாரி—ஒரு
நல்லகதை சொல்லவில்லை ! 2

மலையில் மருந்தெடுத்து—நாங்கள்
மாமலையில் தேனெடுத்து,
இஞ்சி அரைத்துமல்லோ—நாங்கள்
ஏலாதி ஊட்டிநின்றோம். 3

குளிகை கரைக்கமுன்னம்—உன்
குணமோ திரும்பியது ;
மருந்து கரைக்கமுன்னம்—உன்
மனமோ திரும்பியது. 4

அரைத்த மருந்தோ—இங்கே
அம்மிபாழ் போகுதெணை ;
உரைத்த மருந்தோ—இங்கே
உருக்குலைந்து போகுதெணை. 5

பொன்னும் அழிவாச்சே—உன்
பொன்னுயிருந் தீங்காச்சே ;
காசும் அழிவாச்சே—உன்
கனத்தஉயிர் தீங்காச்சே. 6

7.2 மனைவியின் ஒப்பாரி

முத்துப் பதித்தமுகம்
முதலிமார் மதித்தமுகம்;
தங்கம் பதித்தமுகம்
தரணிமார் மதித்தமுகம். 1

கையுங் கணக்கெழுதும்—உமது
கறுத்தவிழி பார்த்தெழுதும்;
விரலும் கணக்கெழுதும்—உமது
வெள்ளைவிழி பார்த்தெழுதும். 2

கச்சேரி வாசலிலே—உமக்குக்
கைகொடுப்பார் ஆயிரம்பேர்;
முற்கதிரை போட்டு—உம்மை
முன்னிருத்தி வைப்பார்கள். 3

பொன்னான கட்டிலிலே—நீங்கள்
பொய்யுறக்கம் என்றிருந்தேன்;
பொய்யுறக்கம் கொள்ளாமல்—நீங்கள்
பொன்னுலகம் போனதென்ன! 4

ஐந்நூறு வேதியர்முன்—எனக்கு
அளித்திட்ட மங்கிலியம்,
ஐவர் சபையிலேயே—நீர்
அவிழ்த்தெறிந்தும் போனீரோ! 5

முந்நூறு வேதியர்முன்—எனக்கு
முகூர்த்தமிட்ட மங்கிலியம்,
மூவர் சபையிலேயே—நீர்
முறித்தெறிந்தும் போனீரோ! 6

தாலிச் சரடிழந்தேன்—நான்
தங்கப்பொன் மாற்றிழந்தேன்;
முத்துச் சரடிழந்தேன்—நான்
முருக்கம்பூப் பட்டிழந்தேன். 7

ஊரைக் குறித்துவையும்—எனக்கு
உற்றமனை தேடிவையும்;
நாட்டைக் குறித்துவையும்—எனக்கு
நல்லமனை தேடிவையும். 8

ஓடியல்லோ வந்திடுவேன்—உங்கள்
ஒழுங்கை தெரியாது;
பாய்ந்தெல்லோ வந்திடுவேன்—உங்கள்
படலை தெரியாது.

7.3 சீரழிவை யார் மதிப்பார்

மஞ்சள் பொடிஇடிச்சு மருகலயம் வேடுகட்டி
மருதயிலே வாக்கப்பட்ட மங்கைநான் வாய்திறந்தா
மருதை கிடுகிடுங்கும் மாமருதை ஓசையிடும். 1

சீமையிலே வாக்கப்பட்ட செல்வம்நான் வாய்திறந்தா
சீமை கிடுகிடுங்கும் செஞ்சீமை ஓசையிடும். 2

சீலை உடுத்தி – நான் தெருவழியே போனாலும்
சீலைவிலை மதிப்பார் – நான்படும் சீரழிவை யார்மதிப்பார்? 3

பட்டை உடுத்தி – நான் பாதை வழிபோனாலும்
பட்டை விலைமதிப்பார் – நான்படும் பாதரவை யார்மதிப்
பார்? 4

7.4 மையத்துப் புலம்பல்

மூச்சை விட்டு மூச்சிழுக்க முன்னமே
மவ்த்து மலக்கு பிடிக்கப்பட்டோ ரெத்தனே? 1

பேச்சுப் பேசி பேச்செடுக்க முன்னமே
பிடித்து மலக்குல் மவ்த்து செத்தோ ரெத்தனே? 2

படுத்துறங்கி எழுந்திடாமல் நேசனே
படுக்கை தனிலே மவ்த்தடைத்தோ ரெத்தனே? 3

அடியெடுத்து வைக்கு முன்னே நேசனே
அடுத்து மவ்த்து பிடிக்கப்பட்டோ ரெத்தனே? 4

சிமிட்டிக் கண்ணைச் சிமிட்டுமுன்னே நேசனே
செத்தவர்கள் இந்த உலகி லெத்தனே? 5

நேற்றிருந்து இன்றி றந்தோ ரெத்தனே?
நெருப்பிலெரிந்து கருகிச் செத்தோ ரெத்தனே? 6

கவிழ்ந்து கப்ப லிறந்தவர்க ளெத்தனை?
கயிற்றைக் கழுத்தில் மாட்டிச்செத்தோ ரெத்தனை? 7

ஒத்தஸஜ்தா செய்யுமாறு ஸஜ்தாமுன்னே
உற்றவுயிரை விட்டுச் செத்தோ ரெத்தனை? 8

நிலைறுக்கூஉ இருப்பி லிருந்தோ ரெத்தனை?
நஞ்சுதின்று வெறுத்துச் செத்தோ ரெத்தனை? 9

விஷவியாதி பேதியி லிறந்தோ ரெத்தனை?
விஷக்கடி தாஊனா லிறந்தோ ரெத்தனை? 10

ஆகையினாலிது நிலை யில்லாத வாழ்வுகாண்
ஆகிறம்தான் நிலைமக்காமென் னோதுகாண். 11

இந்த உலகம் யாருக்கும் சதமில்லையே
இங்கேயாரும் நிலைத்து வாழ்ந்தோ ரில்லையே. 12

இதுவை நம்பி யிருந்தவர்க்கு நாசமே
இதிலும்வழி கேடாய்ப் போனால் மோசமே. 13

ஆகிறத்தை நம்பினோர்க்கு வாசமே
அங்கே யுதவும் நன்மை இங்கே தேடுமே. 14

எந்த விதமு மிதிலுமாகா திறந்து நீ
இந்த வுலகை விட்டுப்பிரிந்து போறெநீ. 15

ஆகையாலே தேடுநல்ல செய்கை நீ
ஆகிறத்தில் மோக்ஷம் பெறவே கேளுநீ. 16

8. வசந்தன் பாடல்கள்

8.1 முயிற்று வசந்தன்

தரு

தனம் தனம் தன தாஞ — தன தானதஞதன தானின தாஞ

கனந் தருங்குழ லாரே—எங்கள்
காரிகை யேயொரு கதைசொலக் கேளும்
தனந்த ஞதன வெனவே—நல்ல
தந்தி முகன்தனை வந்தனை செய்வோம். 1

சதங்கை தண்டைகள் ஆர்ப்பச்—செய
சண்முக வேலர் தமைத்துதி கூறித்
ததிந் ததிந்திமி யெனவே—என்
தாழ்குழலே பணிந் தாடிட வாரும். 2

மதங்கி சுந்தரி தேவி—மக
மாரிப தந்தனை யேதொழு தேத்தி
விதம்வி தம்புகழ் பாடி—எங்கள்
மெல்லிய ரேபணிந் தாடிட வாரீர். 3

அத்திர வேல்விழி யாரே—எங்கள்
ஆரமு தேபசி யாகுது நாங்கள்
மெத்திய காவினில் ஏகி—அங்கு
மேவிய கனிவகை தான்கொய்யப் போவோம். 4

அண்டமு லாவிய மாவில்—ஏறி
அங்குறு கனிகளை ஆய்ந்திடப் போனேன்
சென்றெதிர் வருகுது முயிறு—என்
சிரசைத் துறையடி சேயிழை யாரே. 5

வம்பவிழ் சம்புவில் ஏறி—அங்கு
வயங்கிய கனிகளை ஆய்ந்திடப் போனேன்
கம்பிபோல வருகுது முயிறு—என்
கண்ணைத் துறையடி காரிகை யாரே. 6

முடுகிய எகினம தேறி—யானும்
கடுகியே கனிகளைக் கவர்ந்திடப் போனேன்
கடுகியே வருகுது முயிறு—என்
கழுத்தைத் துறையடி கார்க்குழ லாரே. 7

வண்டணை மாமலர் கொய்ய—நல்ல
தண்டலை மீதுத யங்கியே போனேன்
சென்றெதிர் வருகுது முயிறு—என்
செவியைத் துறையடி தேமொழி யாரே. 8

மந்தியெ னும்படி சென்றே—நல்ல
முந்திரி கைக்கனி யாய்ந்திடப் போனேன்
பந்தியாய் வருகுது முயிறு—என்
பழுவைத் துறையடி பைந்தொடி யாரே. 9

அந்தர மாகிய பசியால்—நானும்
அரம்பையின் கனிபறித் தருந்தவே போனேன்
வந்தெதிர் முடுகுது முயிறு—என்
வயிற்றைத் துறையடி மாதுநல் லாரே. 10

பற்றி யெழுந்திடு பசியால்—நானும்
பாகலில் ஏறிப் பழங்கொய்யப் போனேன்
தொற்றியே வருகுது முயிறு—என்
துடையைத் துறையடி தோகைநல் லாரே. 11

தந்திர மாகவே நடந்து—நானும்
கந்தியில் ஏறியே கனிகொய்யப் போனேன்
எந்தன்முன் வருகுது முயிறு—இரு
காலைத் துறையடி ஏந்திழை யாரே. 12

8.2 கிறுகு வசந்தன்

தரு

தெந்தின தினனத் தினதின தினன
தினதின தினனத் தினனா

சிந்துர வதனச் சுந்தரம் உலவு
தேவர்க் கொருமுதல் ஆனவனைப்
பந்தனை அகலச் சிந்தனை மகிழப்
பாடிந டந்திட வாருமடீ. 1

வாருமடீ மலை மாதுதன் மைந்தனை
வாசமு டன்துதி கூறிடவே
கூறுமடீ மன நேசம தாய்எங்கள்
தும்பிமுகன் சிவன் மைந்தன்தனை. 2

மைந்தனை ஆகெனும் வாகனம் ஏறிமுன்
மாபெல முள்ள கயமுகனைச்
சிந்தை குலைந்திட வேவதை செய்திடு
தேவுத னைப்புகழ்ந் தாடுமடீ. 3

வடவரை மீதிலொர் பாங்கரில் அன்றுமா
பாரத மாகிய வசனமதைத்
திடமுட னேவரைந் தெழுதிய தெய்வ
சிகாமணி யைப்புகழ்ந் தாடுமடி. 4

மத்தள தாளந் தத்திமித் தாவென
வலவைக் குரியம ஞுளனென்று
தித்தா தித்திமி திமிதா தித்திமி
திந்தோ மென்றிட வாருமடீ. 5

8.3 களரி வசந்தன்

தானதன் ஞதன தானதன் ஞதன
தானதன் ஞதன தானதன்ஞ

சீரணி காஞ்சிதில் லைப்பதி மாறன்
திகழும் மதுரைப் பதியமர்ந்த
காரணி கண்ணகை யம்மைதன் பேரில்
களரி வசந்தன் இசைபாட. 1

வாரணி கொங்கை வலவைக் குரிய
மதசலம் ஆறென வேயிழியும்
தாரணி தந்திமு கத்தவனும்
சரசோதியும் நாவில் தமிழ்புரிய. 2

அந்தர துந்துபி ஆர்ப்பரிக் கத்தே
வரம்பையர் ஆலாத்தி ஏந்திவர
இந்திர விமானத்து வந்திடும் மாதின்
இணைப்பதம் என்றும் துணையாமே. 3

அம்பிகை சூலி சவுந்தரி யாகி
அரனிடப் பாகம் அமர்ந்தருளும்
தும்பி முகனை அருள்புரி தேவிதன்
தூயம லர்ப்பதம் யான்மறவேன். 4

மாவின் கனியென வந்துதித் துமக
வாகிநற் பேழையில் வாரிதியில்
தேவின் பெருமையி னாலடை யச்சிவ
தெய்வீக மானாகர் கண்டெடுத்து. 5

தேசம் புகழ வளர்த்துமா சாத்தனார்
சிறுவற்கு நன்மண மேமுடிக்கப்
பாசம் பெருகிய மாறன்ப திமேய
பத்தினி பாதத்தை யான்மறவேன். 6

கோவலன் தன்னைக் கொலைவிளைத் திட்ட
கூடற்பதி மேவிய கைதவனை
யாவரும் காண அழித்து மதுரை
அனலிடும் கன்னியை யான்மறவேன். 7

பொன்செய் கொல்லனை யும்வதைத் தேசினம்
பொங்க இடைச்சியர் போந்துசென்று
வன்கண் தணிந்தனல் மாற்றிடு வாயென்று
மாது பதத்தை வணங்கினரே. 8

வெண்ணெய் இடைச்சியர் வேப்பிலை கொண்டு
மிகுநறுந் தீர்த்தமிட் டேதுதிக்க
கண்ணகை யம்மன் குளிர்ச்சி யடைந்த
கடாட்சம் எப்போதும் மறவேனே. 9

9. நாடகப் பாடல்கள்

9.1 அனுவுருத்திர நாடகம் (தென்மோடி)

(வாணன் என்னுமரசன் தன் சேனாதிபதியை அழைத்துப் பகையரசன்மீது படைஎடுக்கும்படி ஆணையிடுகின்றான். சேனாபதி, படை எடுப்புக்கான காரணம் கேட்க, அரசன் காரணத்தையும் கூறுகிறான்).

வாணனும் சேனாபதியும்

தரு

நன்னன்ன நானன்ன நானா—நனானன்ன
நானன்ன நானன்ன நானா.

சேனாபதி : *அசைவற்ற இசைபெற்ற தோன்றலே—என்னை*
அழைப்பித்த காரியம் தனைச்சொல்லும்

வாணன் : *வசையற்ற இசைபெற்ற வாணனே—படைத்*
தலைவனே போருக்குப் போகவே

சேனாபதி : *மறுநாட்டுக் கேகிட வேண்டுமோ ?—அன்றி*
மறுமன்னர் துரந்திங்கே வருவாரோ ?

வாணன் : *நிறைநாட்டில் என்னுடன் பொருதிடக்—கண்ணன்*
சேனையைக் கொண்டிங்கு மேவினன்.

சேனாபதி : *உமக்கும்அங் கவனுக்கும் பகைஎன்ன—நீங்கள்*
யுத்தத்துக் கெழுந்திட்ட வகைஎன்ன ?

வாணன் : *சமர்க்கவன் வரவந்த காரியம்—அவன்*
தனையனைச் சிறைவைத்த வினையதால்.

சேனாபதி : *ஏனவன் மகனைநீ சிறைவைத்தாய் ! — அதை*
இன்னதென் றெனக்கிப்போ இசைத்திடாய்.

வாணன் : மானமற்றிட எந்தன் மகளிடம் — அவன்
வருவானேன் வசைதன்னைத் தருவானேன் ?

சேனாபதி : இப்படி நடந்ததோ புதினமும் — உமது
எண்ணத்தை இனிச்சொல்லும் திண்ணமாய்.

வாணன் : செப்புவ தேனினி அவனுடன் — பொரச்
சேனையைக் கொண்டங்கே செல்லுவீர்.

வாணன் கவி : தூக்குறு மோர்தயிர் நோக்கி யருந்திய
துவரைநகர்க் கிறையாம்
போக்கிலி என்னுடன் தாக்கிட வெஞ்சமர்
புரியப் போருனும்
வீக்கி யவன்றனை யேக்க முறும்படி
வெஞ்சிறை செய்திடுவேன்
தாக்கி யருஞ்சமர் ஆக்கிட நீயுமுன்
தானையும் ஏகுவீரே.

வாணன் வசனம் : கேளும் சேனாபதியே கிருஷ்ண ராசனுடனே
சண்டை பண்ணப் போக நீயும் நமது சதுரங்க
சேனையுடனே வருவீராக.

சேனாபதி : அப்படியே வருகிறேன் ராசனே.

9.2 அப்பாஸ் நாடகம்

அஹ்மதுசா சொல் விருத்தம்

அரசருக் கரசாய் வந்த அஹ்மது பாத்து ஷாவும்
பெருமைய தாக நெஞ்சில் பெருக்கமாய் நினைந்த தாலே
மருந்ததை நினைக்கு முன்னே வயிற்றினில் நோவு கண்டு
கருத்தினில் வயிற்று நோயால் கலங்கியே புலம்பு வாரே ! 1

அஹ்மதுசா புலம்பல் தரு

ஆ — எந்தன் விதிவசமோ விதனமதை யாரறிவார் நிஜமோ.
ஏவலை மறந்தேனே — விலகலென்று இரும்பினில் உகந்தேனே
ஆவலுடன் எளியோர்கள் பொருள் தனக்கு
ஆசையாக்கின் இந்த மோசம் வரலாச்சுதே. (ஆ) 2

அஹ்மதுசா சொல் விருத்தம்

மந்திரி சொல்லக் கேளாய் வயிறுவலி தாளு தில்லை
சிந்தைதான் கலங்கி மெத்த தேகமும் தியங்கு திப்போ
அந்தமா வயிற்று நோவு அன்புடன் தீர வேதான்
பந்தமாய் வயித்தியர் தன்னைப் பாங்குடன் அழைக்கச்
செய்வாய். 3

மந்திரி கட்டியக்காரனுக்குச் சொல் விருத்தம்

அந்தமாய் வாயல் காக்கும் அன்புள்ள கட்டியக் காரா
சுந்தர அரசர் தானும் துன்பங்கொள் வயிற்று நோயால்
சிந்தையும் கலங்கி மெத்த தேகமும் மெலிந்து நொந்தார்
விந்தையாம் வயித்திய மாரை விரைவுடன் அழைத்து
வாராய். 4

பண்டிதன் வருகிற பொது விருத்தம்

வரிசையாய்ச் சோமன் கட்டி வாகுடன் தலைப்பா வைத்து
துரிதமாய் மருந்துப் பையும் தோளினிற் போட்டுக் கொண்டு
விரிசெறி அரசர் தானும் வீறுடன் அழைத்தா ரென்று
அரசர்க்கு வைத்தியஞ் செய்ய அன்புடன் வருகின் றுனே. 5

பண்டிதன் தரு

பண்டிதன் வந்தானே — பலிதமுள்ள
பண்டிதன் வந்தானே,

பண்டிதன் வந்தானே எண்டிசை போற்றிட
பாரான கண்டித நோயைத் தீர்த்திட......(பண்டிதன்) 6

பண்டிதனுக்கு அஹ்மதுசா சொல் விருத்தம்

விதியினுல் வந்த நோயை விலக்கவே வேணும் கண்டாய்
மதியிலாப் பிணித னக்கு மருந்துமே தரவே வேண்டும்
கதிர்பெற வந்த நோயைக் கருத்தினுல் அகற்றி வைக்க
மதியுள்ள வேத சாஸ்திர பண்டிதர் கையைப் பாரும். 7

பண்டிதன் சொல் விருத்தம்

கைதனைப் பார்க்கச் சொன்னீர் கருத்தைநான் சொல்லக் கேளும்
வையகம் தனிலே இந்த வியாதிநான் கண்ட தில்லை
ஐயனால் வந்த நோயை ஆராலும் அகற்ற வொண்ணு
மையலால் மதுவில் கோப்பை மகிழுடன் குடிக்கத் திரும்; 8

அஹ்மதுசா சொல் விருத்தம்

அருந் தவத்தால் உதித்த அரசுபதி மகன் அப்பாசே
திருந்துமே வயிற்று நோயால் சிந்தையும் கலங்கு திப்போ
பரந்துமே வயித்தியன் தன்னை பாங்குடன் அழைக்கச் சொன்னேன்
வருந்தியே மதுவை யுண்டால் வயிறுவலி திரு மென்றான்; 9

அப்பாஸ் தரு

கொள்ளலாம் மதுவென்றீர் கோவையாதி முன்மனம்
கோணுமல் நான்என்ன சொல்வேன் வேண்டாங்காண்; 10

அஹ்மதுசா

வேண்டாம் என்று சொன்ன மேவும் எந்தன் மகனே
மேவிடும் வயிற்று வலிக்கே என்ன செய்வேன்; 11

அப்பாஸ்

வயிற்று நோயினல் அரசே எழுதின வண்ணமே இப்ப
மரித்தாலும் சுவர்க்க முண்டு செகத்திலும் புகழு முண்டு; 12

அஹ்மதுசா

செகத்தில் புகழாய் வந்த செல்வன் எந்தன் மகனே என்
சிந்தை பொருந்த கள்ளை உகந்ததே விதி; 13

அப்பாஸ் சொல் விருத்தம்

விதியினை விலக்க லாமோ வேந்தனே மனதில் உள்ள
விதமெலாம் சொன்னேன் பாரில் விலக்கிடா தின்னம் சொன்னீர்

சதுமறை அறிவீர் உன்முன் தடுத்துநான் சொன்ன
தெல்லாம்
அதபல்ல தந்தை யாரே ஆகும் படியே செய்வீர்; 14

சபை விருத்தம்

கள்ளுடன் மருந்து தன்னைக் கலந்துடன் குடித்த தாலே
உள்ளமும் உருகி நெஞ்சில் உணர்வுகள் அனைத்தும் போக்கி
சொல்லொணு வெறிகள் மீறி தோன்றிடும் அறிவு புத்தி
எள்ளள வேனும் இல்லாமல் எதையும் புலம்ப லுற்ருர். 15

ஊரார் சபை விருத்தம்

புலம்பியே அஹ்மதுசா பூபதி இருக்கும் போது
நலம்பெறு மந்துமா நகரினேர் செய்தி கேட்டு
பலபல பேர்கள் ஒன்ருய்ப் பனுவலாய்க் கூடிப்பேசி
நலமுடன் ஊரார் எல்லாம் நல்கியே வருகின்ருரே! 16

அந்துமா நகராளும் அஹ்மது சாகிபு
அரசுதனிலே ஊரார் சிறப்புடன் வந்தார்
வந்தவர் அஹ்மது சாகிபைப் பார்க்கையில்
வகையில்லா மதுவுண்டு வெறிகளித் திருந்தார்; 17

ஊரார் சொல் விருத்தம்

ஆதியின் ஏவல் தப்பி அதிகமாய் நடந்து கொண்டு
மேதினி விலக்கும் கள்ளை விரும்பியே குடித்த தாலே
நீதமாய் எங்கட் கெல்லாம் நெறியர சல்ல நீதான்
வேதியர் மார்க்கச் சொல்லால் விடியுமுன் அகலு வீரே; 18

அஹ்மதுசா சொல் விருத்தம்

ஊரவர் சொன்ன போது உடம்பெலாம் கலங்கி வாடி
சீர்பெறுஞ் சுலைகா வென்னும் திருமுகம் நோக்கிச் சொல்வார்
கார்பெறுங் குழலாய் நானும் கள்ளதை உண்ட தாலே
நேர்பெறும் ஊரார் சொற்போல் நெறியர சிழந்து
விட்டேன்; 19

செல்வநல் மகன் அப்பாசை செழிப்புடன் பட்டங் கட்டி
நல்குவார் ஊரார் இப்பால் நளினமாய்க் கேளும் பெண்ணே
அல்லலில் லாது நாளும் அனுதினம் வாழ்வீர் ஆதி
வல்லவன் அருளால் நானும் வனந்தனில் ஏகு வேனே. 20

10. கதைப் பாடல்கள்

(கட்டபொம்மு கதை)

10.1 பாதர் வெள்ளை சண்டை

திரளைச்சோறு கொடுத்து வளர்த்திட்ட
    ஜெகவீர பாண்டியன் ஊமத்துரை
அப்பன் அழைக்கிறார் என்றுசொல்லி
    ஆங்காரக் கோபமாய் என்னசெய்தார்
சீவி நல்ல மயிர்முடித்தார்
    சிங்காரக் கொண்டையுந் தானுமிட்டார்
கோணைத் தலைப்பாவும் தானுங்கட்டிக்
    குச்சு உருமாலுஞ் சுங்குவிட்டார்
கச்சை நல்ல வரிந்துகட்டிக்
    கருங்கச்சையுஞ் சுங்கு விட்டார்;

கத்தி நல்ல இடையிலிட்டார்
    கண்டக் கோடாலி தோளிலிட்டார்
ஈட்டி நல்ல சமுதாடு
    இடது கையினில் வங்குசமும்
பட்டாக் கத்தியைத் தானெடுத்துப்
    பாங்குடன் வாறாராம் பாதர்வெள்ளை
கட்டு மெட்டாகப் பொட்டுமிட்டுக்
    கண்ணாடி பார்த்து உருமால்கட்டி
பேய்க் குதிரையின் மேலேறிப்
    பேராப் பட்டியாம் பாதைவழி

வையாளி போடுதாம் முத்துவர்ணம்
    வாரி எறியுதாம் பேய்க்குதிரை
சில்லரைக் காடு செடிக்காடு
    சிட்டாய்ப் பறக்குதாம் பேய்க்குதிரை
சின்னஞ்சிறு கற்க ளெல்லாம்
    செந்தூள் பறக்குதாம் முன்னாலே

முன்னாலே ரெண்டடி பாயுதுபார்
பின்னாலே ரெண்டடி தாவுதுபார்
காடு செடிமலை தான்கடந்து
கடுகிப் போறாராம் பாதர்வெள்ளை

கட்ட பொம்முதுரை பேருசொன்னால்
காகம் பறக்காதாம் பாஞ்சையிலே
ஊமத் துரையென்று பேருசொன்னால்
ஊக்கம் பிறக்குமாம் பூமியிலே
நித்திய கல்யாண மேடையிலே
ரத்தின நாற்காலி தானும்போட்டு
பாங்குடனே பட்டு திண்டுவைத்து
மூலையினு லொரு செண்டுவைத்து
இருந்து அரசாட்சி செய்கிறாராம்
எங்கள் கட்டபொம் மென்னுந்துரை.

இப்படி அரசாட்சி செய்தவர்க்கு
இடுக்கம் நேர்ந்ததைச் சொல்லுகிறேன்
ராணுவம பேசுறான் கட்டபொம்மு
ராணியம் மாளுள்ள நாளினிலே
காகம் பறக்காத தேசமெல்லாம்
கண்டு பிடித்தவன் காலனதுரை
சிட்டுப் பறககாத தேசமெல்லாம்
தேடிப் பிடித்தவன் காலன்துரை
ஊமத் துரையைப் பிடிக்கா விட்டால்
உயர்ந்த சம்பளம் வாங்குவேனே.

ஐநூறு தோட்டாவும் வாங்கிக்கொண்டு
ஆங்கார மாகவே காலன்துரை
துருப்புக் குதிரை தன்னுடனே
சோல்ஜர் பட்டாளம் ஐநூறுமே
சோல்ஜர் பட்டாளம் கொண்டுவாறார்
துருக்கிப் பட்டாளம் கொண்டுவாறார்
கூடார டேராக்கள் நூறுகளும்
குண்டு மருந்துகள வாங்கிக்கொண்டு
மரம் பிடுங்கி செடிபிடுங்கி
மன்மத னென்றொரு பீரங்கியாம்

அடுக்குப் பானை திடுக்கிடுமாம்
அங்கத னென்றொரு பீரங்கியாம்
வம்பனுடன் சண்டை செய்யவென்று
வாளுடன் பட்டாளம் கொண்டுவாறார்

ஆரக் குளத்திற்குப் பக்கத்திலே
ஐநூறு பட்டாளம் ஒன்றுகூடி
சண்டைக் கொடிதனை நாட்டலுற்றார்
சாமர்த்திய முள்ள காலன்துரை
படைக் குருவிபோல் கூடினாராம்
பார்த்திட்டோர் பயந் தோடும்படி.

கூடார டேரா வடித்துக்கொண்டு
கூடியிருக்கிறார் பட்டா ளங்கள்
காலன் துரையவர் பட்டாளத்தைக்
கண்ணாலே கண்டாராம் கட்டபொம்மு
பார மறத்தியாம் பெற்றெடுத்த
பாதர் வெள்ளையர் தன்னிடத்தில்
பட்டாளம் வந்து இருக்கிறதைப்
பார்த்து உரைத்தாராம் கட்டபொம்மு
காதினில் கேட்டாராம் பாதர்வெள்ளை
கண்கள் சிவக்குதாம் அந்தநேரம்.

கோபம் பிறக்குதாம் கண்களிலே
கொண்டையங் கோட்டை மறவருக்கு
நாமினி யோசனை செய்தோமானால்
ஞாயம் கிடைக்காது சண்டையிலே
ஐநூறு பட்டாளம் வந்திட்டாலும்
அறுப்பேன் தலையை பாதர்வெள்ளை
ஆனாலும் மாகுது போனாலும்போகுது
அடிக்கிறேன் பார் ஓர்தமாசு
மேல மலையாளம் தீப்போட்டெரிகிற
வீரன் பகடையைத் தானழைத்தார்.

மேல மலையாளம் பெட்டிப்பகடையை
மேன்மை யுடனே வரவழைத்தார்
காரிக் கவுண்டன் கரிக்கவுண்டன்
காவல்கட்டுஞ் சிவ சங்குநாடார்
கொளத்தூர் தனில் சுப்பாநாயக்கர்
கொள்ளையிலே மெத்த வல்லவராம்
நாகலாகபுரம் நாகப்ப நாயக்கர்
நானூறு பேருக்குக் கைகாரராம்
முள்ளுப் பட்டியிலே முத்தப்பநாயக்கர்
முந்நூறு பேருக்குக் கைகாரராம்,

நாட்டுத் தலைவரைத் தானழைத்தார்
    கோட்டைச் சூரரைத் தானழைத்தார்
ஆயிரம் கம்பளம் நூறுபரிவாரம்
    அடங்கலு மாகவே ஒன்றுசேர்ந்து
போருக்குப் போருராம் கம்பளங்கள்
    பொல்லாத ஏமனுங் காலன்துரை
பீரங்கி வாயினில் குண்டுவைத்துப்
    பெரிய பட்டாளந் தானிருத்தி
கும்பினிப் பட்டாளம் ஒன்றுசேர்ந்து
    கூசாமல் சண்டைகள் செய்கின்ருராம்;

கட்டபொம்மு துரை சேனைகளும்
    கனத்த சண்டைகள் செய்கிருராம்
கொற்றவன் சண்டைகள் செய்வதற்குக்
    கொம்பானைக் குட்டியாம் பாதர்வெள்ளை
ஓடி ஓடியே வெட்டினுராம்
    உத்தமனுர் அந்தப் பாதர்வெள்ளை
வீசி வீசியே வெட்டினுராம்
    வெள்ளைக் காரத்துரை பட்டாளத்தை
வலது கையினுல் வெட்டினுராம்
    இடது கையினுல் தாக்கிட்டாராம்;

கும்பினிப் பட்டாளம் வெட்டினுராம்
    கொண்டையங் கோட்டை மறத்திமகன்
ஊக்க முடனே விரட்டினுராம்
    ஓடி ஒளியுதாம் பட்டாளங்கள்
சோல்ஜர் பட்டாளம் வெட்டினுராம்
    துருக்கிப் பட்டாளம் வெட்டினுராம்
கட்டக் கருப்பணன் சுந்தரலிங்கம்
    கருமருந்திலே தீயை வைடா
பாதர் வெள்ளையுடன் சண்டைசெய்ய
    பாவலா செய்தாராம் காலன்துரை;

ஒண்டி யிருந்துமே காலன்துரை
    ஓங்கி அடித்தாரம் பீரங்கியை
கண்டு இருந்துமே பாதர்வெள்ளை
    கத்தியால் வெட்டினுர் அந்தநேரம்
கவர்மெண்டார் கைத் துப்பாக்கியால்
    கதறி விழுந்தாராம் பாதர்வெள்ளை

தட்டுத் தடுமாறிக் கீழ்விழுந்து
    தாயை நினைக்கிறார் சக்கம்மாளை
கும்பினி வெற்றி யடைந்ததினால்
    கோட்டைக் கபகேடு வந்ததம்மா!

பாரத தேவியே சக்கம்மாளே
    பல்லாரி தேசத்தை ஆண்டவளே!
கம்பளத் தார்குலம் காத்தவளே
    காரிகையே சக்க தேவியம்மா!
என்னம்மா என்னம்மா சக்கம்மாளே
    இப்படி ஆபத்து வந்ததென்ன?
என்ன குறைகள் செய்தோமம்மா
    ஏது குறைகள் செய்தோமம்மா?
ஒன்றுங் குறைகள் செய்யவில்லை
    உயிருக்கு ஆபத்து வந்ததென்ன?

இப்படித் தெய்வத்தைத் தானினைத்து
    ஏகியே போனாராம் பாதர்வெள்ளை
கோட்டை யடுத்துமே போகையிலே
    குளிர்ந்த மரத்தடித் தூரடியில்
செத்து மடிந்தாராம் பாதர்வெள்ளை
    சிவலோகம் சேர்ந்தாராம் அந்தநேரம்
பாதர் வெள்ளையின்மேல் ரெத்தங்களைப்
    பறந்து காகம் குடிக்கக்கண்டார்
கட்டுக் கடங்காத கட்டபொம்மு
    காரண மாகவே ஓடிவந்தார்;

செங்கல் பொடிபோலச் சிவந்தவராம்
    ஜெயவீர பாண்டியன் ஊமத்துரை
அண்ணனும் தம்பியும் ரெண்டுபேரும்
    அழுது புலம்பியே ஓடிவந்து
இவ்வித ஆபத்து வந்ததென்று
    ஏங்கி யழுகிறார் ரெண்டுபேரும்
கொடிப் பாம்புமே போனபோது
    கோட்டைக் கபகேடு வந்ததடா
என்னடா என்னடா என்பிறவி
    ஏது செய்குவோம் ஊமத்துரை;

ஆயிரம் சேனைகள் தந்திட்டாலும்
    அறுப்பான் தலையை பாதர்வெள்ளை
வீர மதயானை மாண்டவுடன்
    வந்துவிட்டோம் நாமல் கோட்டைகளை

ஆய னமைத்திட்ட கட்டளைக்கு
ஆவது நம்மாலே ஒன்றுமில்லை
இப்படி ஆபத்து வந்ததென்று
எடுத்து அடக்கமும் செய்யவென்றார்
பார மறத்தியாம் பெற்றெடுத்த
பட்டத் தரசியாம் வெள்ளையம்மாள்;

மன்னவர் மாண்டதைக் கேட்டவுடன்
மண்ணில் புரண்டுமே ஓடிவந்தாள்
அய்யய்யோ தெய்வமே என்றுசொல்லி
அழுது புலம்புறாள் வெள்ளையம்மாள்
மண்ணில் விழுந்து புரண்டழுதாள்
மன்னவன் தேவியாம் வெள்ளையம்மாள்
கண்ட சொர்ப்பனத்தைக் கேளாமலே
கயிலாயம் சேர்ந்தீரோ என்கணவா!
பார்த்த சொர்ப்பனத்தைக் கேளாமலே
படுகளத்தினில் மாண்டீர் களோ!

ஆரைச் சதமென்பேன் என்கணவா
ஐயோநான் என்னசெய்வேன் பூமியிலே!
ஆவி நடுங்குதே என்செய்வேன்
அங்க மொடுங்குதே என்கணவா!
தங்களை விட்டுமே நானிருந்தால்
தாங்குதல் கூடுமோ பூமியிலே!
மன்ன வரைவிட்டு நாவிருந்தால்
வாழ முடியாது பூமியிலே!
கொற்ற வரைவிட்டு நானிருந்தால்
கும்பினியில் சேர்ப்பாரே என்துரையே!

இந்த விதிக்கோ தவமிருந்து
எங்கள் ஜனங்கள்விட் டிங்குவந்தேன்
காலகெதிக்கு நாம்என்ன செய்வோம்
கடவுள் செய்ததோர் தீவினைக்கு
அழு தழுதுமே கத்தினாலும்
ஆகிற காரியம் ஒன்றுமில்லை
இந்த விதமாய் அழுதுகொண்டு
எப்படிக் கட்டை அடுக்குகிறாள்
சந்தனக் கட்டையைத் தானடுக்கி
சமர்த்தன் பாதரைத் தூக்கிவைத்து

மார்பில் அறைந்துமே வெள்ளையம்மாள்
மங்களம் சொல்லித்தீ மூட்டினளாம்
பற்றி எரிகின்ற வேளையிலே
பத்தினி உத்தமி வெள்ளையம்மாள்
கட்டழகன் கட்டை வேகையிலே
கன்னியுடை கட்டை தான்பெரிதோ
தெய்வங்கள் தன்னையும் தானினைந்து
சேர்ந்து எரிகிறாள் வெள்ளையம்மாள்
பத்தாவும் பத்தினி ரெண்டுபேரும்
பாரினில் கைலாயம் சேர்ந்தாரையா;

10.2 சைத்தூன் கிஸ்ஸா

முகம்மதனீபு வேட்டைக்குப் போதல்

ஆதி அனுப்பும் வேதமுறையின்படி அறிந்து சகலோரும்
அணுவள வாகிலும் பிசகிடாமல் அதபுடனே நடக்க
மானும் புலியும் ஒருதுறையில் தண்ணீர் மகிழ்வுடனே குடிக்க
பாம்பும் கீரியும் ஓரிடங்கூடிப் படுத்து நித்திரை செய்ய
அப்படி அரசாய் உமறுகத்தாப் இருந்தார் அரசாண்டு;

சகல தேசத்து ராசர்கள் எல்லாம் இவர்கைக் குள்ளாக
அடங்கி ஒடுங்கிட ஆண்டு வருகிற அந்த நாளையிலே
ஒருநாள் முகம்மது அனிபா காட்டுக்கு உற்றவேட்டை யாட
நாடித் தன்கூட நாலுபேர் தன்னை நடந்திடத் தானமைத்தார்
இரண்டு வீரர்கள் அபூபக்கர் சித்தீக்கு பெற்ற பிள்ளைகளாம்.

இரண்டு சூரர்கள் உமருகத்தாபின் உத்தம பிள்ளைகளாம்
இந்த அஞ்சுபேரும் ஒன்ருய்க்கூடி ஆலோசனை செய்து
காட்டுக்குப் போயினிய வேட்டைகள் ஆடிட கொண்டா
ரந்நேரம்
வேட்டையின் ஆயுதம் எடுத்தார் கைகளில் வேண்டுமான
தெல்லாம்
பூட்டியே கொண்டார் அஞ்சுபேர்களும் புலிபோல் பரியேறி.

விட்டார் குதிரையை அஞ்சு பேர்களும் மதினநகர் நீங்கி
காற்றைப் போலப் பறந்தது குதிரைகள் காடுமலைக ளெல்லாம்
அப்படிக் குதிரைகள் பறந்து போகிற அந்நேர வேளையிலே
செந்தூள் பறந்து தூசிஎழுப்பிடச் சூரர்கள் கண்டார்கள்
கருந்தூள் பறந்து தூசிஎழும்பிடக் கண்டார் அந்நேரம்

அதிசய மாகவே பார்த்து நிற்கிறார் அஞ்சு ராஜர்களும்
அந்த வேளையில் என்ன காண்கிறார் அஞ்சு ராஜர்களும்
குதிரை நாற்பத் தொன்றைக் கண்டார் அஞ்சு ராஜர்களும்
அப்போது கண்டாள் சைத்தூன் அஞ்சுபேரைக் காட்டில்
மின்னல் மின்னினாற் போலக் குதிரைகளை விட்டாள்
சைத்தூனும்

காற்றைப் போலவே பறந்தினி வந்தாள் காட்டில் சைத்தூனும்
அஞ்சு பேரையும் வளைத்துக் கொண்டாள் ஆங்காரத் தோடு
காகம் பருந்துகள் பறந்திட முடியாக் காட்டில் பெரியகாடு
சிங்கம் புலிகளும் திரிகிறதில்லை சேர்ந்த பெரிய காடு
எனக்குச் சகலமும் பயந்து ஒளித்திடும் எந்தன் சொந்தக்
காடு

அந்தக் காட்டினில் தைரியமாக அலைந்து திரிகிறீர்கள்
கொஞ்சமும் எந்தன் பயமில்லாமல் கூடித் திரிகிறீர்கள்
உங்களுயிரு வேண்டுமா யிருந்தால் வரமாட்டீர் இங்கே
முடிவுநாள் உங்களுக் காச்சுது என்று மொழிந்தாள்
சைத்தூனும்
அந்த வார்த்தையைக் காதிலே கேட்டு அரசர் முகம்
மதனிப்பு

பசுக்கள் புலியை மிரட்டுவாறாய் பேசுறாய் என்முன்னே
கோழிகள் நரியை மிரட்டுவாறாய் கொதிக்கிறாய் என்முன்னே
எலிகள் பூனையை மிரட்டுவாறாய் எதிர்த்தாய் என்முன்னே
நீ பெண்ணாய்ப் பிறந்தவள் என்முன் அதிகமாய் பேசுறாய்
வீணாய்
ஆணுருக் கொண்டவள் என்னைநீ மிரட்ட ஆகுமா உன்னாலே?

என்ற வார்த்தையைக் காதிலே கேட்டு இருகண் நெருப்பாகி
அந்த வேளையில் சைத்தூனுக்கு அதிக கோபமாச்சு
என்னைப் பெண்ணென் றெப்படி அறிந்தாய் என்றாள் சைத்தூனும்
அந்தச் சொல்லைக் காதிலே கேட்டு இருகண் நெருப்பாகி
நல்லது நல்லது சொல்கிறேன் கேளு நானறிந்த வயணம்...

குதிரை ஏறிநீ வந்திடும்போது கொங்கை அசையக் கண்டேன்
அங்கு படியினில் பாதங்கள் ரண்டும் அதிர்ந்து ஆடக் கண்டேன்;
அந்த வார்த்தைகள் முழுதும்கேட்டு அப்போது சைத்தூனு
ஆனால் ஆகட்டும் பெண்ணா நானிருந்தால் அதினால் குறைவில்லை
நெஞ்சஞ் சாமல் பேசிடும் வீரா என்சொல்லைக் கேளு

வாரி அடித்தேன் கணக்கில்லாமல் வலிய வீரர்களை
சூறை கொடுத்தேன் கணக்கில்லாமல் சூர தீரர்களை
மல்லை ஜட்டிகள் பல்லை இளிக்க மாறிமாறி அடித்தேன்
கணக்கில்லாமல் ராஜாக்கள் தலையைக் கத்தியா லறுத்தேன்
என்னோ டெதிர்க்க இந்த உலகினில் எதிர் ஒருவருண்டோ!

இப்படிப் பட்டவள் என்பே ருனக்கு என்னா தெரியாதா?
சிங்கங்கள் கதறிட வெட்டிக் கெலித்திடும் சைத்தூன் என்பேரு
யானைகள் கிழித்திட வெட்டிக் கெலித்திடும் சைத்தூன் என்பேரு
ஜட்டிகள் தலையை வெட்டி எறிந்திடும் சைத்தூன் என்பேரு
எந்தன் பேரைக் கேட்டால் ஒன்றும் தண்ணீர் குடிக்காது

என்னுடை தகப்பன் இறமெனும் பட்டணம் இருக்கிறான் ராஜாவாய்
அப்படிப் பட்ட வயிற்றில் பிறந்த ஆண்சிங்கம் நானே
பதினேழு லட்சம் படைக்கு அதிபதியார் எந்தகப்பன்.
என்ற சொல்லைக் காதிலே கேட்டு இறைபுலி அலிமகனார்
என்பெய ருனக்குத் தெரியுமா பெண்ணே என்றா ரப்போது

பூமியில் உள்ளவை எல்லாம் நடுங்கும் புலிஅலி மகனான்
அல்லா புலியெனப் பெயர்மிகப் பெற்ற அலியார் பெருமகனான்
ஆதி தூதரின் பேரப் பிள்ளை நான் ஆண்மையுள்ளவன் நான்
உயர்ந்த குலத்தில் பிறந்தேன் நானும் என்பேர் முகம்மதனிபு
வலியில் சண்டையில் தந்திர புத்தியில் வல்லமை உள்ளவன் நான்

என்ற வார்த்தையைக் காதிலே கேட்டு எதிர்த்து சைத்தானு
நல்லது உன்னுடை வல்லமை எல்லாம் நானறிவேன் பாரு
இப்போது என்னுடன் சண்டைநீ செய்திடு அலியின் மகனாரே
வல்லமை எல்லாம் என்முன் காட்டிடு அலியின் மகனாரே
என்ற வார்த்தையைக் காதிலே கேட்டு ஏகன்அலி மகனார்

சொன்னார் அப்போ சைத்தானுக்குச் சேதி ஒன்று கேளு
அடிக்கிற தில்லை உன்னை நாங்கள் ஆங்காரங் கொண்டு
எதிரி அடித்தபின் நாங்கள் அடிப்பது எங்கள் வழக்கமென்றார்
அந்தச் சொல்லைக் காதிலே கேட்டு அப்போ சைத்தானு
ஈட்டியை எடுத்து தலைமேல் சுழட்டி எறிந்தாள் அந்நேரம்

கோடை இடியைப்போல் சத்தமிட்டுக் குத்தினா எப்போது
முகம்மதனிபின் இடையிலே பட்டது முகம்ம தனிபாவும்
அந்தக் குத்தினால் சுழண்டு விழுந்தார் முகம்ம தனிபாவும்
மூர்ச்சையாய்ப் போனார் அந்த அடியினால் முகம்ம தனிபாவும்
ஆதியின் கட்டளை இப்படி இருந்தது முகம்ம தனிபாவுக்கு

அந்த சைத்தான் பெண்டாட்டியாக ஆதி நாட்டமுண்டு.
அதனால் பதகு பெற்றாள் சைத்தான் அந்த வேளையிலே
புலியைப் பசுவும் வெல்வதும் உண்டு இந்தப் பூமியிலே
பூனையை எலிகள் வெல்வதும் உண்டு இந்தப் பூமியிலே
நரியைக் கோழிகள் வெல்வதும் உண்டு இந்தப் பூமியிலே

நாயகன் நாட்டப்படி நடந்து முடிந்தது நாமென்ன செய்வோம்?
முகம்ம தனிபை வெல்ல முடியுமா வெட்டால் குத்தாலே
எத்தனை வீரரோ மாண்டார் இவர்கை வாளின் குத்தாலே!
எத்தனை வீரரோ மாண்டார் இவர்கை ஈட்டியின் குத்தாலே!
அப்படி இருக்கப் பெண்ணால் ஆமா அவரைக் கெலித்துக் கொள்ள?

அந்த வேளையில் அப்படி இருந்தது முகம்ம தனிபாவும்
மூர்ச்சையாய் விழுந்து கிடந்தார் பூமியிலே முகம்ம தனிபாவும்
அந்த வேளையில் சைத்தான் கிட்டே அடுத்து நின்றாளாம்
கொஞ்ச நேரம் பார்த்து சைத்தான் குதிரை தனைவிட்டு
கீழே இறங்கிக் கிட்டப் போனாள் கழுத்தை அறுப்பதற்கு

கத்தியை வாங்கிக் கையிற் பிடித்துக் கழுத்தை அறுக்கப்
போனாள்
அந்த வேளையில் என்னமாய் கிடந்தார் முகம்ம தனிபாவும்
செத்த பிணம்போல் இருந்தா ரப்போது ஒன்றும் தெரியாமல்
பேச்சு மூச்சும் இல்லாமற் போச்சுது முகம்ம தனிபாவுக்கு
அப்படி இருக்கக் கண்டு சைத்தூன் அந்நேர வேளையிலே

கத்தியை உறையில் போட்டாள் அப்போ காரிய மில்லையென
செத்த பிணத்தை அறுப்பது நமக்கு சாமர்த் தியமல்ல
அறுத்தால் வீணே கெட்டுப்போம் கத்தி ஆகா தென எண்ணி
நாலுபேர் தன்னைப் பிடித்துக் கொண்டாள் நாலு குதிரையோடு
திரும்பினாள் சைத்தூன் தன்னுடைய சீமைக்கு சீக்கிரமா
அபபோது

விளக்கக் குறிப்புகள்

1.1 மருத்துவிச்சி வாழ்த்து

மேலைநாட்டு முறையில் அமைந்த மருத்துவ சாலைகள் நமது நாட்டிலே தோன்றி நிலைபெறுவதற்குமுன், ஊரிலே கருவுற்ற பெண்கள் தத்தம் வீடுகளிலே கருவுயிர்த்தனர். மகப் பேற்றுக் காலத்தில தாய்மாருக்கு அருகிலிருந்து வேண்டிய மருத்துவச் சிகிச்சை செய்பவளே மருத்துவிச்சியாவள். இவள் பிள்ளைகளைப் பெற்றும் பெறுவித்தும் அநுபவம் வாய்ந்தவள். அறையில் குழந்தை பிறந்தவுடன மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுவாள். இவ்வாழ்த்து ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் வேறு வேருக அமையும். மருத்துவிச்சி பாடும் வாழ்த்துப் பாடலைக் கேட்டதும் வெளியே காத்துநிற்கும் தந்தை, தாய்மாமன் முதலியோர் பிறந்தது என்ன குழந்தை என்பதை அறிந்து கொள்வர். இங்கே கொடுக்கப்பட்டுள்ளது யாழ்ப்பாணத்தில் ஆண்குழந்தைக்குரிய வாழ்த்தாக வழங்கி வந்த தொவரும்.

ஆதாரம்! (1) தமிழண்ணல், தாலாட்டு; (2) இராமலிங்கம், ஈழத்து நாடடுப் பாடல்கள்; (3) நடராசா, ஈழத்து நாடோடிப் பாடல்கள்; (4) கணபதிப்பிள்ளை, ஈழத்து வாழ்வும் வளமும்.

(அச்சிட்ட நூல்களிற் பாடவேறுபாடுகள் பல இருப்பதால் அவற்றை ஒப்பிட்டுப் பொருத்தமான ஒரு பாடம் கொள்ளப்பட்டது)

1. அயலும் புடையும் வாழவேண்டும்—அயல், புடை இரண்டும் ஒரு பொருட் சொற்கள். இவற்றுள் அயல் என்பது அகன்றுள்ள சூழலையும், புடை என்பது அணுக்கமாயுள்ள சூழலையும் குறிக்கும். இவை ஆகுபெயராக அயலிலும் புடையிலும் வாழ்வோரைக் குறிக்கின்றன.

அன்னமும் சுற்றமும்—இது 'அண்டையும் சுற்றமும்' என்றிருப்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது. அயல், புடை, அண்டை, சுற்றம் என்று வரும் முறையும் அர்த்தமுடையதாகும். அண்டை என்பது புடையிலும் நெருங்கிய பக்கத்தைக் குறிக்கும். அவ்வாறன்றி, அச்சிட்ட நூல்களில் உள்ள

வாறே 'அன்னம்' எனப் பாடங் கொண்டால், அதற்கு 'உணவு' அல்லது 'சோறு, என்று பொருள்கொள்ள வேண்டும். குழந்தையின் பெற்ருரையும் உறருரையும் வாழ்த்து வதற்குமுன, ஊராரை வாழ்த்தும் வழக்கம் நாட்டு மக்களின் சமூகக் கூட்டுறவைக் காட்டுகின்றது.

2. அரிசி மலேநாடு, நெல்லு மலேநாடு, மஞ்சள் மலேநாடு, மிளகு மலேநாடு, உள்ளி மலேநாடு, இஞ்சி மலேநாடு, உப்பு மலேநாடு, காசு மலேநாடு என்ற தொடர்களில் வரும் 'மலேநாடு' மலேயாள நாட்டைக் குறிப்பதாகலாம். மஞசள, மிளகு, உள்ளி, இஞ்சி என்பவை மலேபடு பொருள்கள்; உப்புக் கடல்படு பொருள். மலேவளமும் கடல் வளமும் ஒருஙகே உடையது மலேயாள நாடு. மொழி வழககிலும், பழக்க வழககங்களிலும் மலேயாள நாட்டவர்கும ஈழத் தமிழர்க்கும் (குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்க்கும) நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுவதால், இவ்விரு சாராரும் ஆதியில் ஓரின மக்களாக இருந்தவர் என்று கருதலாம்.

நெல்லு, அரிசி முதலியன மனேவாழ்க்கைக்கு வேண்டிய செலவங்களாக மதிககப்படுவன. இவற்றை யெலலாம் குழந்தை மலேபோலப் பெற்றுச் செழிப்புடன் வாழவேண்டும் என்ற குறிபபு இங்கே உளது. மேலும, குழந்தை பிறந்த பின்பு குழநதையைப் பெற்ற தாய்க்குக் "காயம்" அரைத்துச் சோறு கொடுக்கும் வழக்கமும் உண்டு. சோறறுக்கு நெல்லரிசியும், காயம் அரைபபதற்கு உள்ளி, மிளகு மஞ்சள், இஞ்சி, உப்பு முதலிய சரக்குகளும் வீட்டிலே ஆயத்தமாக இருக்கும். குழந்தை இப் பொருள்களே யெல்லாம் மலேநாட்டிலிருந்து பொதியாகக் கொணடு வந்ததாக மருத்துவிசசி பாடுகருள். இந்த வாழ்த்துத் தலேமுறை தலேமுறையாக வழங்கி வருவதால், யாழ்ப்பாணத தமிழர் மலேயாள நாட்டிலிருந்து முனனெரு காலத்தில் வந்து குடியேறிய பழைய நினேவு இதன்கண் இழையோடி யிருப்பதாகவும் கருத இடமுள்து.

10. கோச்சி— உங்கள் + ஆச்சி' என்ற சொற்கள் பேச்சு வழக்கில் மருவிக் கோசசி என்ருயின. இவ்வாறே கொப்பர் (உங்கள் + அப்பர்), கொம்மான் (உங்கள் + அம்மான்) என்பனபோன்ற ஏனேய சொற்களும் உண்டாயின. உயிரெழுத்திலே தொடங்கும் முறைப பெயர்களில் முதலுயிர் கெட்டு, உயிர் குறிலாயின் அதற்குப் பதிலாகக் ககர ஒகரமும் நெடிலாயின் ககர ஓகாரமும் நின்று இவ்வடிவச் சொற்கள் அமைந்துள்ளன; இவை குறிப்பாக யாழ்பபாண வழக்கிற் பயிலுகின்றன;

பேத்தி—பேர்த்தி, தந்தையின் தாய்; பாட்டி என்பதும் அது. இதன் ஆண்பால் பேரன் (பாட்டன்); அது தந்தையின் தந்தையைக் குறிக்கும். குழந்தைக்குத் தந்தையின் தந்தையுடைய பெயரே வைப்பது வழக்கமாதலின், குழந்தையை நோக்கப் பாட்டனும், பாட்டனை நோக்கக் குழந்தையும் 'பெயரன்' (பேரன்) என்று அழைக்கப்படுவர்.

பூட்டி—பாட்டனின் தாய் (இது பீட்டி என்றும் வழங்கும்); இதன் ஆண்பால் பூட்டன் (பீட்டன்). அது பாட்டனின் தந்தையைக் குறிக்கும்.

குருவுக்கும் சிவனுக்கும்: குருவையும் சிவனையும் ஒருங்கே கூறியது, சமூகம் ஆசிரியருக்கு அளித்த உயர் மதிப்பைக் காட்டுகிறது. 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்ற ஔவையின் நீதிவாக்கியம் இந்தக் கருத்தின் அடிப்படையிலே தோன்றியது.

நல்ல பிள்ளையாக இருந்து வாழ்க: குழந்தை சமூகத்துக்குப் பொருத்தமான ஒரு பிள்ளையாக வளர வேண்டும், அது வாழ்வதாற் பெற்றோரும் சுற்றமும் மட்டுமன்றி, முழுச் சமூகமுமே வாழவேண்டும என்ற கருத்து இவ்வாழ்த்திற் பொருந்தியிருக்கின்றது.

2. தாலாட்டுப் பாடல்

குழந்தையைத் தொட்டிலில் இட்டு உறங்கச் செய்வதற்குத் தாய் பாடும் பாட்டே தாலாட்டு எனப்படும். பெற்ற தாயே அன்றிப் பெரிய தாயும சிறிய தாயும் தாலாட்டுப் பாடுவதும் உண்டு. 'தால்' என்பது நாவைக் குறிக்கும்; நாவை ஆட்டி, இன்னோசை எழுப்பிக் குழந்தையை உறங்க வைத்தலே தாலாட்டுதல் ஆகும். இன்னோசை எழுப்புவதற்காக 'ஆராரோ ஆரிரரோ' என்று சந்தம் அமைப்பது வழக்கம். இதனால், இது ஆராட்டுதல் என்றும் சொல்லப்படும். சில தாய்மார்கள் "ஓராரோ ஓரிரரோ" என்றும் சந்தம் அமைத்துப் பாடுவர். இதனால் ஓராட்டுதல் என்ற வழக்கும் உள்ளது. தாலாட்டைத் தாராட்டு என்றும், ஓராட்டை ஓலாட்டு என்றும் சொல்லும் வழக்குகளும் உண்டு.

2.1 அணில் கோதா மாம்பழமே

ஆதாரம்: தமிழண்ணல், தாலாட்டு:

இது யாழ்ப்பாணப் பகுதியில் வழங்குவதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், இதுபோன்ற பாடல்கள் மட்டக்களப்புப் போன்ற பிற இடங்களிலும் வழங்கிவரக் காணலாம். தாய்மாரின் நாவிலே பயின்றுவரும் இத் தாலாட்டுப் பாடல்களிற்

கருத்தொற்றுமையும் வரியொற்றுமையும் காணப்படுவது இயல்பே: ஆயினும், சிற்சில தனிச் சிறப்புகளும் காணப்படும். 'ஆண்பனையில் நுங்கே', 'அணில் கோதா மாம்பழமே' என்பன இப்பாடலுக்குத் தனிச் சிறப்புத்தரும் அழகிய தொடர்களாகும்.

1. அடிச்சோ—அடித்தோ, அழுறாய்—அழுகிறாய்.

4. கண்வளராய்—கண்வளர்வாய்; 'நித்திரைசெய்' என்பது உடன்பாட்டுப் பொருளைத் தரும் முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று. இது இலக்கிய வழக்கேயாயினும் தாலாட்டுப் பாடல்களிற் பயின்று வருகிறது.

2·2 முதிர விளைஞ்ச முத்து

ஆதாரம்: அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள்.

1. மரிக்கொழுந்து—மருக்கொழுந்து.
2. கலகலங்க-ஒலிக்குறிப்புச் சொல்; கலகல + எனக்—கல கல என்று இரைச்சலிட என்பது பொருள்.
3. தேவாதி—தேவர்கள்; பாண்டி—பாண்டிய நாடு; பஞ்சவர்கள்—பாண்டியர். பஞ்ச பாண்டவர் எனலுமாம்.

2.3 முத்தாக நீ யொருத்தன்

ஆதாரம்: அய்யாசாமி, நாடோடிப் பாடல்கள்.

குழந்தையின் தாய் குலப் பெருமை பேசுவதாகவும், குறிப்பாக மாமன் புகழ் பாடுவதாகவும் இத்தாலாட்டு அமைந்துள்ளது. பாட்டனாரின் நாட்டெல்லையில் விற்கும் பட்டையும் முப்பாட்டனரின் நாட்டெல்லையில் விற்கும் முத்தையும் தகப்பன் தெரிந்தெடுக்க, தாய் மாமன் அவற்றுக்கு விலை கொடுத்து வாங்கிக் குழந்தைக்குக் கொடுப்பான் என்பது இப்பாடலின் கருத்து.

1. பட்டெடுப்பார் உங்கள் ஐயன்—ஐயன்என்பது குழந்தையின் தந்தையை; மனைவி தன் கணவனைக் குறித்துப் பேசும்போது 'பட்டெடுப்பார்' என்று மரியாதைப் பன்மை வாய்பாட்டால் வினைமுடிபு கூறுவதைக் காண்க. 'ஐயன்' என்பது ஒருமை வடிவமே யானாலும் பொருளளவில் உயர்வை உணர்த்துகிறது, 'ஐயர்' என்று அதனைப் பன்மை வடிவாக்கினல், அது தகப்பனைக் குறியாமையும் காண்க.

2. முடிச்சவிழ்ப்பான் – பணமுடிச்சை அவிழ்த்துப் பணங் கொடுப்பான் என்பது பொருள்;

2.4 தம்பி குதிபாய்வான் தன் தாயார் மடிமேலே

ஆதாரம்: இராமலிங்கம், வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்.

1. மாயவனூர்—திருமால், 2. இருளி—வளர்ந்தபின்பும் பூப்படையாத பெண்.

9. கோதுபடா மாங்கனி—அணில், காகம் முதலியவற்றுற் கொத்தப்படாத மாங்கனி.

2.5. கோவலரே நித்திரைபோ

ஆதாரம்: இலங்கை மலையக மக்களிடை வழங்கும் பாடல்; கேட்டு எழுதியது. உதவியவர்: மாத்தளை கார்த்திகேசு.

2. வம்முசங்க — வமிசங்கள், 3. தொட்டி—தொட்டில். துணையிருப்பா - துணையிருப்பாள், 4. முத்திடிச்சு - முத்திடித்து, கொளிச்சு—கொழித்து, முத்தம்—மூற்றம், கோவலரே—தாய் தன் ஆண் குழந்தையைக் கோவலன் என்று அழைக்கிறாள். 'கோவலன் கதை' என வழங்கும் நாட்டார் கதைப் பாடலிலே கோவலன் ஆண்மையும் அழகும் செல்வமும் உடைய ஒரு தலைவனாக வருணிக்கப்பட்டிருப்பதால், இப் பாடலைப் பாடிய தாய் தன் குழந்தையைக் 'கோவலர்' என்று காதலால் அழைத்தாளாகலாம்.

2.6 சீதேவி நித்திரைசெய்

ஆதாரம்: தென்னிலங்கை முஸ்லிம் மக்களிடையே வழங்கிவரும் பாடல்; கேட்டு எழுதியது. உதவியவர்: ஏ. ஆர். எம். அப்துல் காதிர்.

1. சொஹந்த—சிவந்த (வட்டார வழக்கு). கக்கு-இனிப்பு.
2. சருவுமான்—சருகுமான்; சருகுகளை உண்ணும் ஒருவகைச் சிறு மான். முசல்—முயல்.
6. தேமி அழுகாமல்—தேம்பி அழாமல்.
7. சாச்சா—சிறிய தந்தை (முஸ்லிம் வழக்கு), பெரம்பாலே—பிரம்பாலே.
8. கண்படுகாள் — தூங்கமாட்டாள்.
9. சுறுதியாய்—விரைவாக.
10. ஞாவுசெல்ல—'மியாவ்' என்று சொல்ல.
11. பக்கன்—பூச்சாண்டி. பாம்பூச்சி—பாம்பு+பூச்சி; இது பொதுவாக விஷப் பிராணியைக் குறிக்கும்.
ஓமல்—உமல். சொண்டருவாள்—கொண்டு வருவாள்.

12 கொண்டாறன் – கொண்டு வருகிறேன்
13 பப்பளிக்கா — பப்பாளிக்காய் (பப்பாளிப் பழம்)!
அபபிளீஸ்— அப்பிள் பழம், பிச்சி— பிய்த்து, பிடுங்கி.
14 பெபாட்டி—பெட்டி, முட்டாய்—மிட்டாய்.
15. காமரங்க —காமரங்காய்; பீர்க்கங்காய் போன்ற வடிவ முடைய ஒரு காய். போளவீதுாக்காய — கண்ணாடிக் கோளம்.
16. பட்டைப்பாணி—கமுக மடற் கலத்தில் வைத்த பாணி, பால் பிலக்கு—பாற் பேணி milk tin, தோல முலே—சூப்பி (teat)
17. புயோர்— முகப்பூச்சு (powder)
18. தோள்க்கை—'டோலக்கு என்னும சிறு தோல் வாத்தியக் கருவி.
19. கேட்டி சொன்ன—விளேய ட்ட கச்சொன்ன கோமான்— அல்லாஹ், பொறுக்காமீன—பொறுக்க + ஆமீன் ஆமீன்— அவ்வாறேயாக (அரபு).

2.7 உபதேசப்பிள்ளை தாலாட்டுச் சிந்து

ஆதாரம்; தென்னிலங்கை முஸ்லிம் மக்களிடை வழங்கும் பாடல்: கேட்டு எழுதியது உதவியவர்: ஏ. ஆர்.எம் அப்துல் காதிர்.

2. கல்பில்—மனத்தில், கலப்பு—மனம்
3. தீன்—வேதம், மார்க்கம்.
4 ஸலவாத்து—நபி(ஸல்) மீது அருள் பாலிக்குமாறு இறைவனிடம் பிரார்த்தித்தல், முட—முடை, துன்பம் வறுமை, முட்டு. ஒளிவாலே — ஒளியாலே.
5. றஹ்மான்—அல்லாஹ்வின் ஒரு பெயர்?
6. ஈமான்—விசுவாசம், கலிம – முஸ்லிம்களின் மூல மந்திரம், ஹஜ்ஜு—ஹஜ்ஜு யாத்திரை.
7. தௌபா—பாவமன்னிப்புக் கேட்பல், பதலாக்குவான்—பதிலாக்குவான், பதல் — பதில் (உருது)
8. ஹஸது-பொறாமை, கய்யூம்—நிலைத்தவன் (அல்லாஹ்).
9. துன்யா—உலகம்
10 அமல்—செயல் (அரபு)
12 பவ்ஸார்—செல்வமாய் பவ்ஸு—பவிசு தெலுங்கு).
13. தவ்ஹீது—ஏகத்துவம் மஃரிபா-இறைஞானம். குடிப்பு—பானம். அல்லாஹ்வை அறியும் அறிவாகிய பானத்தைப் பெரியோன் புகட்டுவான் என்க.
சய்துல் அஃமும் முஹிதீன் ஆண்டவர்கள் (தவசிரேஷ்டர் ஒருவர்).

3.1 சாய்ந்தாடு பாவா

ஆதாரம்: தென்னிலங்கை முஸ்லிம் மக்களிடை வழங்கும் பாடல்: கேட்டு எழுதியது உதவியவர்: ஏ. ஆர். எம் அப்துல காதிர்.

இது பிள்ளைகளின் விளையாட்டுப் பாடல். பாவா என்பது தந்தையைக் குறிக்கும் சொல்லாயினும், அன்பு காரணமாக ஆண் குழந்தையைக் குறிக்க இங்கே வழங்கப்பட்டுள்ளது இது போலவே, தமிழ்ப்பிள்ளைகள்பாடும் 'சாய்ந்தாடம்மா'' என்னும் விளையாட்டுப் பாடலிலும் ''அம்மா'' என்பது தாய்க்குரிய பெயராயினும், அன்பு காரணமாக அது பெண் குழந்தைக்கு வழங்கப்படுவதைக் காண்க.

3.2 கிட்டியடித்தல்

ஆதாரம்: நடராசா, ஈழத்து நாடோடிப் பாடல்கள்.

இது சிறுவர் விளையாட்டு வகைகளில் ஒன்று: சிறுவர் கிட்டிக் கோலாற் கிட்டிப்புள்ளை அடித்துவிட்டு பின்வரும் பாடல்களைப் பாடி, மூச்சுப் பிடித்து ஓடுவர். ஒவ்வொரு பாட்டிலும் கடைசிச் சொல்லை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே ஓட வேண்டும். ஓடுபவன் மூச்சுவிடுகின்றானோ என்று கவனிக்க அவனுக்குப் பக்கத்தில் மற்றொருவனும் ஓடுவான்.

3.3 கும்மி 1

ஆதாரம்: இலங்கை மலையக மக்களிடையே வழங்கிவரும் பாடல்.
கேட்டு எழுதியது. உதவியவர்: மாத்தளை கார்த்திகேசு.

கும்மியடித்தல் பெண்களுக்கே உரிய விளையாட்டு. ''வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக் கொட்டியிசைத்திடுவோர் கூட்டமுதப் பாட்டு'' (குயிற்பாட்டு) என்று பாரதியார் கும்மிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். பண்டிகை நாள்களிலும் திருவிழாக் காலங்களிலும் கிராமச் சூழலிற் பெண்கள் கும்மியடித்துப் பாடுவது வழக்கம். குத்துவிளக்கு, கண்ணன் சிலை, பூக்கூடை போன்ற ஏதாவதொன்றை நடுவில் வைத்து, அதைச் சுற்றி இளம் பெண்கள் வட்டமாகக் குனிந்தும் நிமிர்ந்தும் கையால் தாளங்கொட்டிப் பாடி ஆடுவர். ஒரு பெண் முதலில் பாட, மற்றவர்கள் பின் பற்றிக் கூட்டாகப் பாடல் இசைப்பர் ஆடலும் பாடலும் எளிமை வாய்ந்தனவாயிருப்பினும், அழகாக இருக்கும்

1. ஓங்க—உங்கள்; தாரேன்—தருகிறேன்; திங்க—தின்ன.
2. கடகடன்னு—கடகட வென்று; பாடுங்கடி—பாடுங்கள் + அடி.
3. குதிர வாரத—குதிரை வருகிறதை.
4. வாராரு — வருகிறார்; தருவாரு—தருவார்.

3.4 கும்மி 2

ஆதாரம்: மஜ்மூமு நாமா (அரபுத் தமிழ்ப் புத்தகம்).
ஸாஹுல் ஹமீதியா பிரஸ், (அச்சிடப்பட்ட ஆண்டு குறிப்பிடப்படவில்லை)

உதவியவர்: ஏ ஆர். எம். அப்துல் காதிர்.

முன்னோர்களாற் பாடப்பட்ட பாடல்கள் யாவருக்கும் பயன் படுமாறு அச்சிடப்பட்டவை என்னும் குறிப்பு இந்நூலிற் காணப்படுவதால், இப்பாடல்கள் அரபுத் தமிழில் அச்சிடப்படு வதற்கு முன் வாய்மொழி இலக்கியமாக வழங்கிவந்தவை என்பது அறியக்கிடக்கின்றது.

1. குபிர்—இறை நம்பிக்கையின்மை,
2. ஆலம் — அனைத்துலகம்; படையுண்ண — படைக்கப்பட. ஸலவாத்து-நபி(ஸல்) அவர்கள் மீது அருள் பாலிக்குமாறு இறைவனிடம் வேண்டும பிரார்த்தனைப் பாடல்

3.5 கோலாட்டம்

ஆதாரம்: இலங்கை மலையக மக்களிடையே வழங்கிவரும் பாடல்; கேட்டு எழுதியது. உதவியவர்: மாத்தளை கார்த்திகேக.

கோலாட்டமும் கும்மி போன்றே பெரும்பாலும் பெண்க ளுக்குரிய ஒரு விளையாட்டு. இதிலே தாளத்தைக் கைகளாலே தட்டிக் காட்டுவதற்குப் பதிலாகச் சிறு வர்ணக் கோல்களாலே தட்டிக் காட்டி ஆடுவார்கள் கோலாட்டத்திற் சாதாரண வகைகளோடு. பின்னற் கோலாட்டம் என்ற மற்றொரு வகையும் உண்டு. பல்லக்கின் முன் கொம்பு முனையிற் பல வாண நாடாக்களைத தொங்கவிட்டு, அவற்றின் நுனிகளைக் கோலாட் டக் கோல்களிற் பொருத்தச் சுற்றி ஆடுவார்கள் அப்போது அந்த வாண நாடாக்கள முதலிற் பின்னலைப் போல் இணைவதும் பின்பு அவிழ்வதுமாயிருக்கும்,

கும்மி கோலாட்டங்களிற் பலர் சுற்றி ஆடும்போது அமையும் நடனச் சித்திரங்கள் பலவகைப்பட்டனவாயும் எழில் மிகுந்தனவாயும் இருக்கும் பரதநாட்டியத்தில் உள்ள அடவு வகைகளுக்கு ஒப்ப. இப் பாமர நடனங்களிலும் தட் டடவு, மெட்டடவு, நாட்டடவு, குதித்தலடவு முதலிய கால் வேலைப்பாடுகளும் பதாகம, அஞ்சலி, சிகாம் முதலிய வகை களும்' நெளிவுகளும் எளிய நடையில் இலாகவமாய் அமைந் திருக்கும்.

3.6 கொம்பு விளையாட்டு

ஆதாரம்: வித்தியானந்தன், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்.

இவ்விளையாட்டு மட்டக்களப்புப் பிரதேசத்தில்உள்ள ஊர்களில் இன்றும் விளையாடப்படுகின்றது. ஊர் முழுதும் வடசேரி தென் சேரி என்றோ, கீழைச் சேரி மேலைச் சேரி என்றோ இரு கட்சிக ளாகப் பிரிந்துகொள்ளும் இந்த இரு கட்சிகளுக்கும் போட்டி நடைபெறும். இப்போட்டியிலே கொளுவி இழுக்கக்கூடிய வலிய மரக்கொம்புகள் ஒவ்வொன்றை இரு கட்சியினரும் தெரிவு செய்துகொள்வர், குறிப்பிட்ட தினத்தில் இரு கட்சியினரும் தமது கொம்புகளை ஒன்றோடொன்று கொளுவி. எதிரெதிராக நின்று இழுப்பர். ஒரு கட்சியினரின் கொம்பு முறியும்வரையும் இந்த ஆட்டம் நடைபெறும். தோற்றவர் வென்றவர்களின் ஏவலாளர்போல் நடத்தப்படுவர்.

3. சிறுக்கனல்லோடி — சிறுக்கன் + அல்லவா + அடி; சிறுக்கன்— சிறுவன். வளர்ந்த ஆண்மகன் ஒருவனை ஏளனம்செய்வதற்கு இவ்வாறு வழங்குவது மரபு.

5 சிறும்பி—அட்டாலை, காவற்பரண்.

8 வண்ணுண்ட—வண்ணுடைய,

9. இல்லாண்டி—இல்லான் + அடி; அவிட்டு—அவிழ்த்து,

3.7 ஊஞ்சற் பாட்டு

ஆதாரம்; இராமலிங்கம், இலங்கை நாட்டுப் பாடல்கள்.

சிவராத்திரி விரதகாலத்தில் ஊஞ்சலகட்டி ஆடும் வழக்கம் இலங்கையிலே சைவ மக்கள் வாழும் கிராமங்களிலே தொன்று தொட்டு இருந்து வந்தது. இன்றும் இவ்வழக்கம் சிற்சில கிராமங்களில் இருந்து வருகிறது. இப்பாடல் யாழ்ப்பாணம் பூநகரியில் வழங்கிவருவது.

4.1 சந்தமாமா

ஆதாரம்: நடராசா, ஈழத்து நாடோடிப் பாடல்கள்.

4.2 ஏண்டி குட்டி

ஆதாரம்: நடராசா, ஈழத்து நாடோடிப் பாடல்கள்.

4.3 எலிப் பாட்டு

ஆதாரம்: தென்னிலங்கை முஸ்லிம் மக்களிடை வழங்கும் பாடல். கேட்டு எழுதியது. உதவியவர்: ஏ. ஆர். எம் அப்துல்காதிர்.

1. கோட்டி—சேட்டை, துன்பம். இளனி—இளநீர், இளந் தேங்காய் மேட்டில்—முகட்டில்.

5. அல்லும் எல்லும்—இரவும் பகலும். எல்—பகல்.

6. பிரளி—புரளி. குறும்பு.

8. வெள்ளை—வெள்ளென. காலையில்; வெள்ளாட்டி—வேலைக் காரி; கன்மம்—இங்கே பாவம் என்று பொருள்படும்.

4.4 சிங்கிலி நோனா

ஆதாரம்: இராமலிங்கம், இலங்கை நாட்டுப் பாடல்கள்.

யாழ்ப்பாணத்திற் பறங்கியர் எனப்படும் போர்த்துக்கேயர் ஆட்சி செய்த காலத்தில் தோன்றிய நாட்டுப் பாடல். பறங்கியர் வீடுதோறும் சென்று வியாபாரஞ் செய்தமை இப்பாடலிற் குறிப்பிடப்படுகிறது.

5.1 காதலன் கூற்று

ஆதாரம்: வித்தியானந்தன், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்.

1. கூப்பிடுகா—கூப்பிடு. 'கா' என்பது ஓர் அசைச்சொல்: தொல்காப்பியர் (சொல், இடையியல் 279) கூறும் இவ் வழக்கு இன்று மட்டக்களப்புப் பேச்சுவழக்கில் மட்டுமே காணப்படுகிறது.

3. மருதங்கிளி வங்கிசமே-மருதமரத்தில் வாழும் கிளியின் வமிசத்தில் வந்தவளே.

4. அடையாட்டி—அடையாவிட்டால். காட்டுப்புள்ளி—சுடலை; அதாவது உன்னை அடையாவிட்டால் உயிர் துறப்பேன் என்பது.

6. படிச்சி—படித்து. படித்து என்னும் இறந்தகால வினை யெச்சம். சில கிளை மொழிகளில் 'படிச்சு' எனவும் அமைந்துள்ளது. ஒப்பிடுக: அடித்து—அடிச்சு, அடிச்சி; கடித்து-கடிச்சு, கடிச்சி.

8. காசி - காசு. தரட்டோ--(தர + அட்டு + ஓ) அட்டு, அல்லது அட்டும் என்பது ஒருவகை வியங்கோள் விகுதி. தரட்டுமா என்று வினப்பொருள் தோன்ற வந்தது.

5.2 காதலி கூற்று

ஆதாரம்: வித்தியானந்தன். மட்டக்களபபு நாட்டுப் பாடல்கள்.

3. ஒழு - தொழுகைக்குமுன் உடலின குறிப்பிட்ட பகுதிகளைத் தண்ணீரால் சுத்தம் செயவது. ஹறும்-விலக்கப் பட்டது.

5. தோணுறது — தோன்றுகிறது. கலிமா—முஸ்லிம்களின் மூல மந்திரம்; கலிம விரல் — இது வலதுகைச் சுட்டுவிரலைக் குறிக்கும்.

7. சீறுவே — சீறாப்புராணம்; உமறுப்புலவர் இயற்றிய முஸ்லிம் காப்பியம். உச்சால சாய—உச்சியாற் பொழுது சாய; அதாவது பிற்பகல் வேளையில்.

5.3 தோழி கூற்று

ஆதாரம்: வித்தியானந்தன், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்.

2: காக்கொத்தரிசாம் — காற்கொத்து அரிசியாம், கண்ணுழுந்த—கண்விழுந்த.

5.4 காதலன் பிரிவுணர்த்தல்

ஆதாரம்: இலங்கை மலையக மக்களிடையே வழங்கும் பாடல்: கேட்டு எழுதியது. உதவியவர்: மாத்தளை கார்த்திகேசு.

1. ஒன்னே — உன்னை: போறமனு - போகிறோம்+என்று.

5. தெம்பரப்பாபோனேன் - அந்தரித்துப் போனேன்.

5.5 காதலர் சல்லாபம்

ஆதாரம் நடராசா, ஈழத்து நாடோடிப் பாடல்கள்.

இப்பாடல் இன்று திரை இசைப் பாடலாகவும் விளங்குகின்றது.

6.1 ஏற்றப் பாடல்

ஆதாரம்: அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள்.

பேய— பெய்ய; தெக்கே-தெற்கே; வெளிச்சி, அயிரை, கொரவை மூன்றும் மீன்வகைகள்,

ஒருபதியாலொண்ணு—நீர் இறைப்போர் இறைக்கும் பட்டைக் கணக்கை எண்ணுவதற்கு இவ்வாறு ஒரு வாய்பாடாகப் பாடுவர். ஒரு பதியால் என்பதில் பதியம் என்ற சொல் மருவி நிற்கின்றது. பத்துத் தனிப் பாட்டுகளைக் கொண்டது பதியம் அல்லது பதிகம் எனப்படும். ஒரு பதியம் பாடும் நேரத்திற் பத்துப் பட்டை நீர் இறைக்கப்படும்.

6.2 ஏர் பூட்டும்போது பாடும் பாடல்

ஆதாரம்: இராமலிங்கம், வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்.

கலப்பையை நல்ல நாளிலே வெளியே எடுத்து வயலுக்குச் சென்று முதல் உழவு செய்யும்போது பூசை செய்து பாடும் இப் பாடல் ஏர்மங்கலம் எனறும் பொன் ஏர் பூட்டுதல் என்றும் சொல் லப்படும். மேழி - கலப்பை.

6.3 ஏர்ப்பாட்டு

ஆதாரம்: வித்தியானந்தன், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்.

1. செல்லன் என்ற சொல் இங்கு உழவு எருதுகளையும், உழவு எருமைக் கடாக்களையும் குறிக்கிறது.
2. தோணுதடா — தோன்றுது அடா
3. தலைகாணி — தலையணை.
7. மதியாணி — நுகத்தின் நடுவாணி, சுள்ளாணி — சிறிய ஆணி.
9. வைத்தாண்டா — வைத்தான் + அடா.
19. காலுழுந்து போகுதடா — கால் + விழுந்து + போகிறது + அடா கால — நீர்க்கால்.

6.4 அரிவிவெட்டுப் பாடல்

ஆதாரம்: நடராசா, ஈழத்து நாடோடிப் பாடல்கள்.

6.5 அறுவடைப் பாடல்

ஆதாரம்: அய்யாசாமி, நாடோடிப் பாடல்கள்.

1. ஆம்பிளேங்க — ஆண் பிள்ளைகள்; பொம்பிளேங்க — பெண் பிள்ளைகள்.
2. அசடுபட்ட — அழுக்குப்பட்ட.
3. தீவச்சோறு — தீய்ந்த சோறு, அடிப்பிடித்த சோறு.
6. சம்பங்கி — சம்பகப்பூ.
7. கருவப்பொட்டு — கறுப்புப் பொட்டு.

6.6 மீன்பிடிகாரர் பாடல்

ஆதாரம்: நடராசா, ஈழத்து நாடோடிப் பாடல்கள்.

6.7 தோணிக்காரன் பாடல்

ஆதாரம்: தென்னிலங்கை முஸ்லிம் மக்களிடை வழங்கும் பாடல்; கேட்டு எழுதியது. உதவியவா; ஏ. ஆர். எம். அப்துல்காதிர்.

1. நாகூர் மீரா — நாகூரில் சமாதியடைந்துள்ள ஒரு தவசிரேட்டர். அப்பியல் மாதம் — ஏபபிரல மாதம்.

6.ு தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பாடல்

ஆதாரம்: இலங்கை மலையக மக்களிடை வழங்கும் பாடல் கேட்டு எழுதியது. உதவியவர்: மாத்தளை கார்த்திகேசு.

1. சென்னக்—தென்றல் (காற்று); சேந்து வந்த—சேர்ந்து வந்த
2. இடுப்பொடிஞ்சு நிக்கயிலே—இடுப்பு ஒடிந்து நிற்கையிலே. எங்கிருரே— என்கிருரே.
3. கொந்தரப்பு — கொந்தராத்து வேலை; ஒப்பந்த வேலை. கொறஞ்சுதய்யா—குறைந்தது ஐயா.
4. ஒத்தப்பனை—ஒற்றைப் பனை.

6.9 சாலை அமைப்போர் பாடல்

அதாரம் அய்யாசாமி, நாடோடிப் பாடல்கள்.

7. ஒப்பாரிப்பாடல்கள்

ஒருவர் இறந்தபோது தாய், சகோதரி, மனைவி போன்ற உறவு முறை பூண்ட பெண்கள் இறந்தவருடைய தோற்றம் நற்குணம், நற்செயல் முதலியவற்றைக் கூறி இரங்கி அழும் பாடல் ஒப்பாரி என்றும் ஒப்பு என்றும் வழங்குகின்றது.

7.1 தாயாரின் ஒப்பாரி

ஆதாரம்: இராமலிங்கம், வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்.

3. ஏலாதி—ஏலம் முதலிய மருந்துச் சரக்குகளைக் கொண்டு தயாரித்த ஒருவகை மாத்திரை.
6. அழிவாச்சே — அழிவாயிற்றே; கனத்த உயிர் — பெறுமதி வாய்ந்த உயிர்.

7.2 மனைவியின் ஒப்பாரி

ஆதாரம் இராமலிங்கம்: கிராமக் கவிக்குயில்களின் ஒப்பாரிகள்.

1. முதலிமார்— முதலி என்பது ஆங்கிலர் ஆட்சியில் இலங்கை அரச சேவையிற் பணிபுரிந்த சிலருக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர். முதலி என்பது முதலியார் என்றும் வழங்குகின்றது. முதலிமார் என்பது பன்மைவடிவம்.

தரணிமார் - தாணி என்பது Attorney என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம்; வழக்குரைநர். தரணிமார்—பன்மை வடிவம்.

5. ஐந்நூறு வேதியர்—திருமணக் காலத்தில் வேதப்பிராமணர் சாட்சியாக மாப்பிள்ளை பெண்ணுக்குத் தாலிகட்டும் வழக்கம் இங்கே குறிப்பிடப்படுகிறது. ஐந்நூறு வேதியர் என்பது பல வேதியர் என்னும் பொருளைத் தருவது. ஐவர்சபை—முன்பு திருமணக் காலத்தின் சிறப்புத் தோன்ற "ஐந்நூறு வேதியர் முன்" தாலி கட்டியதைக் குறிப்பிட்டவள், இப்போது தன் கைம்மை நிலையின் இழிவு தோன்ற "ஐவர் சபையில் தாலி அறுத்ததைக்" குறிப்பிடுகிறாள் என்க.

7.3 சீரழிவை யார் மதிப்பார்

ஆதாரம்: இலங்கை மலையக மக்களிடை வழங்கும் பாடல்; கேட்டு எழுதியது. உதவியவர்: மாத்தளை கார்த்திகேசு.

1. மருகலயம்—வாசனைப் பொடி இட்டுவைக்கும் சிறுபானை. வேடு கட்டுதல்—பாத்திரத்தின் வாயை ஆடையால் மூடிக் கட்டுதல். மருதையிலே—மதுரையிலே. மதுரை என்பது பேச்சுவழக்கில் மருதை என மருவியுள்ளது. வாக்கப்பட்ட—வாழ்க்கைப்பட்ட.

4 பாதரவு – பரிதவிப்பு.

7.4 மையத்துப் புலம்பல்

உதவியவர்: ஏ. ஆர், எம். அப்துல் காதிர்.

1. மவ்த்துமலக்கு
2. மலக்குல் மவ்த்து } இவை இங்கே இயமனைக் குறிப்பன;

8 ஸஜ்தா — நமஸ்காரம்.

9. றுக்கூஉ — தொழுகையில் ஒரு நிலை,

10. தாஊன் — பூகம்.

11. ஆகிறம் — மறுமை.

8. வசந்தன் பாடல்

வசந்தன் பாடல்கள் சிறப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்கிவரும் ஒருவகை நாட்டுப் பாடல்களாகும். இவை பாடி ஆடுவதற்கு அமைந்தவை. அறுவரேனும், எண்மரேனும், பன்னிருவரேனும் சேர்ந்து ஆடுவர். ஆடும்போது ஒவ்வொருவரும் கைகளில் இரு சிறு கோல்களைப் பிடித்து, அவற்றை ஒன்றோடொன்று தட்டி ஆடுவர் இதனால், இவ்வசந்தன் ஆட்டம் ஒருவகையிற் கோலாட்டத்தை ஒத்திருக்கும். இப் பாடல்கள் வசந்தன் என்றும், வசந்தன் பள்ளு என்றும், பள்ளு என்றும், சிந்து என்றும் பலவாறு வழங்குகின்றன. வசந்த காலத்தில் மக்கள் எடுக்கும் விழாக்களிற் பாடப்படுவதால் இவை வசந்தன்

பாடல்கள் எனப் பெயர் பெற்றன. வசந்த காலத்தில் மட்டக் களப்புமக்கள் கண்ணகி அம்மனுக்கும் கணபதி, முருகன் போன்ற பிற தெய்வங்களுக்கும் விழா வெடுத்து, ஆடிப பாடித் தமது உள்ளக் கிளர்ச்சியை வெளிப்படுத்துவர். மட்டக்களப்பிலே கண்ணகி வழிபாடு முக்கியம் பெற்று விளங்குகிறது.

ஒவ்வொரு வசந்தனுக்கும் அது பாடப்பட வேண்டிய சந்தத்தைக் காட்டும் தரு என்பது முதலில் இருக்கும். அந்தத் தருவின் ஓசை யமைதியை ஒட்டியே பின்வரும் கண்ணிகள் பாடப்படும். இப்பாடல்கள் தாளம், ஓசைநயம், எதுகை மோனைத் தொடைநயம் முதலியன உடையனவாய்ப் பத்தி, உவகை, நகை, வீரம் முதலிய பலவகைச் சுவை பொருந்தி வரும். பாடுபவர் பாட்டுகளைத் தொடர்ச்சியாகப் படிப்பதற்கு வசதியாக அவை பெரும்பாலும் அந்தாதித் தொடையாக அமைந்திருப்பதைக் காணலாம். இவற்றை நோக்க. இவை கல்வியறிவு படைத்த சிலராலே காலத்துக்குக் காலம் பாடப் பட்டு ஆங்காங்கே வாய்மொழி மரபில் வழங்கிவந்துள்ளன என்று கருத இடமுளது.

8.1 முயிற்று வசந்தன்

ஆதாரம்: சதாசிவ ஐயர், மட்டக்களப்பு வசந்தன் கவித் திரட்டு.

1. கனந்தருங் குழலாரே—மேகத்தை ஒத்த கூந்தலையுடைய தோழியே, கனம்—மேகம்.
4. அத்திரம்—கையினால் விடுவிக்கப்படும் படை: அத்திரமாகிய வேல் என்க.
6. வம்பு—வாசனை, சம்பு—நாவல்மரம், கம்பிபோல்—நிரை நிரையாக.
7. முடுகிய—பக்கத்தில் (சமீபத்தில்) உள்ள; முடுகு, முடுகடி என்பன சமீபம் எனனும் பொருளில மட்டக்களப்பில் வழங்கும் சொற்கள். எகினம்—எகின்; எகின் என்பது புளியமரம், கடுகி—விரைந்து.
8. தண்டலை—சோலை.
9. பழு—விலா, உடலின் பக்கம்;
10. அரம்பை—வாழை;
11. பாகல்—பலாமரம்.
12. கந்தி—கமுகு.

8,2 கிறுகு வசந்தன்

ஆதாரம், சதாசிவ ஐயர், மட்டக்களப்பு வசந்தன் கவித் திரட்டு.

கிறுகு வசந்தன் என்பது இந்த ஆட்டத்தை ஆடுபவர்கள் சுற்றித் திரும்பித் திரும்பி ஆடுவதனால வந்த பெயர். கிறுகுதல் என்பது திரும்புதல் எனனும பொருளில் மட்டக்களப்பில் வழங்கும் சொல.

1. சிந்தர வதனம்—யானைமுகம்; பந்தனை—கட்டு, ஆணவம் முதலிய குற்றங்கள்.

2. மலைமாது—பார்வதி; பருவதராசன் மகளாக வந்தமையால் உமாதேவியார் பார்வதி என்றும், மலைமகள் என்றும் சொல்லப்படுவார்.

தும்பிமுகன்—யானைமுகக் கடவுளாகிய பிள்ளையார்.

3. ஆகு—பெருச்சாளி; பிள்ளையார் கயமுகாசுரனைக் கொன்ற கதை இங்கே குறிப்பிடப்படுகிறது.

4. வடவரை—மகாமேருமலை; வியாசர் மகாபாரதக் கதையைக் கூற, விநாயகர் அதனை மகாமேருமலையிலே தமது கொம்பினால் எழுதினார் என்பது புராணக் கதை.

5. வலவை—விநாயகரின் சத்தி.

8.3 களரி வசந்தன்

ஆதாரம்: சதாசிவ ஐயர், மட்டக்களப்பு வசந்தன் கவித் திரட்டு.

களரி - கூத்துப் பயிலும் இடம். களரி அமைத்த அதனிடத்தில் ஆடப்படுவதால் இது இப்பெயர் பெற்றதுபோலும்.

1. காஞ்சி-காஞ்சிபுரம் தில்லை-சிதம்பரம், மாறன்-பாண்டியன்.

2 தந்திமுகத்தவன்—யானை முகமுடைய விநாயகன், சரசோதி—சரஸ்வதி.

5 கண்ணகியின் பிறப்பு இப்பாடலிற் கூறப்படுகிறது. கண்ணகி மாநாய்கனுக்கு மகளாகத் தோன்றினாள் என்று மட்டுமே சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆனால் அவள் தாயொருத்தி இல்லாமலே மாங்கனியினின்றும் உற்பத்தியானாள் என்று மட்டக்களப்புத் தமிழர் கொள்வர். சிங்கள மக்களும் பத்தினித்தேவி மாங்கனியிலிருந்து பிறந்தவள் எனக் கொள்கின்றனர்.

வாரிதி—கடல்

6. மாசாத்தனார் சிறுவன்—கோவலன்; மாறன்—பாண்டியன்.

7. கைதவன்—பாண்டியன்.

8. வன்கண்—கொடுமை, கோபம்.

9. கடாட்சம்-கடைக்கண் பார்வை, அருட்பார்வை.

இவ் வசந்தனிற் கண்ணகையின் தோற்றம், வளர்ப்பு, விவாகம், கணவனது பிரிவு, அதனால் எழுந்த கோபம், குளிர்த்தியினால் கோபம் மாறி அருள்செய்தது ஆகிய வரலாறு கூறப்பட்டுள்ளமை காண்க.

9.1 அனுவுருத்திர நாடகம்

ஆதாரம்: கந்தையா, வி. சி. (பதிப்பாசிரியர்), அனுவுருத்திர நாடகம். மட்டக்களப்புப் பிரதேச கலாமன்ற வெளியீடு, 1969.

இது மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் தென்மோடி நாடகங்களுள் ஒன்று. இத்தகைய நாடகங்களில் நாடகமாந்தரின் உரையாடல்கள் பெரும்பாலும் இசை தழுவிய பாடல்களாயும் இடையிடையே வசனங்களாயும் அமைந்திருக்கும். இப்பாடல்கள் தருக்கள் என்று சொல்லப்படும். இவற்றிற் சந்த வளமும் எதுகை மோனை நயங்களும், செந்தமிழ்ச் சொல்லாட்சியும் மிகுந்து காணப்படுவதால், இவற்றை ஓரளவு ஏட்டுக்கல்வியுடைய நாட்டுக் கவிகளே பாடியிருத்தல் வேண்டும் என்று எண்ண இடமுளது.

அநிருத்தன் என்னும் பெயரே இங்கு அனுவுருத்திரன் என்று மாற்றமடைந்துள்ளது. அநிருத்தன் என்பவன் திருமாலின் பேரன்; காமனின் மகன்; அழகிற் சிறந்தவன். இவன் வாணாசுரன் மகளாகிய உஷா (உழை) என்பவளைக் களவிற் கூடியமையால் அவள் கருவுற்றனள். அதனை அறிந்த அவள் தந்தையாகிய வாணாசுரன் கோபமுற்று அநிருத்தனைச் சிறையிட்டான். அவனைச் சிறைமீட்டற் பொருட்டே திருமால் வாணன் நாட்டிற் படையெடுத்துச் சென்று போரிட்டு, வாணனைக் கொன்று அவன் நகரையும் அழித்தார் என்பது புராணக் கதை. இக்கதையே இந் நாடகத்துக்குக் கருவாக அமைந்துள்ளது.

இந்நாடகம் இருநூறு வருடப் பழமை வாய்ந்ததாயிருக்கும் என்று இதன் பதிப்பாசிரியர் வித்துவான் வி. சி கந்தையா அவர்கள் பதிப்புரையிற் கூறியுள்ளார்.

9,2 அப்பாஸ் நாடகம்

ஆதாரம்: ஷாஹுல் ஹமீது, அப்பாஸ நாடகம். சென்னை, திருவல்லிக்கேணி, ஷாஹுல் ஹமீதியா பிரஸ், 1953.

தமிழ் மக்களிடையே வழங்கிவரும் நாட்டுக் கூத்துகளை ஒத்த கிராமிய நாடகங்கள் முஸ்லிம்களிடையே மிகுதியாக இல்லை எனலாம். எனினும் அலிபாதுசா நாடகம், அப்பாஸ் நாடகம் போன்ற சில நாடகங்களேனும் முஸ்லிம்களிடையே வழங்கிவருகின்றன. சில இடங்களில் இந் நாடகங்கள் ஆடப்பட்டதாகவும் அறிகிறோம். கிழக்கிலங்கையிற் சுன்னத்துக் கலியாண வீடுகளில் இரா முழுவதும் விழித்திருப்பதற்காக 'பக்கீர்சாயிபுகள்' இந் நாடகப் பாடல்களை 'றப்பானி'ற் கொட்டிப் படிக்கும் வழக்கம் இன்னும் உள்ளது. 'பொல்லடித்தல்' என்னும் கோலாட்டத்தின்போதும் இந்நாடகப் பாடல்கள் சில பாடப்படுகின்றன.

அப்பாஸ் நாடகம் முற்றும் நாட்டுக்கூத்து மரபில் அமைந்து காணப்படுகிறது. 'நாகூர், நாகபட்டினம், பினங்கு, சிங்கப்பூர்' ஆகிய ஊர்களில் வழங்கிய இந்நாடகப் பாடல்கள், பாஞ்சூர்ப் பசீர் அவர்கள் சேகரஞ் செய்ததற்கிணங்க, திருநெல்வேலிப் பேட்டை காசி முகியத்தீன் ராவுத்தராற் சரிபார்த்து அச்சிடப் பட்டுள்ளன. அவை அச்சிடப்பட்ட ஆண்டு தெரியவில்லை. அதே பிரதிக்கிணங்க இந்நூல் திரும்பவும் ஷாஹுல் ஹமீதியா பிரசில் 1952ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. இந் நாடக நூலிலிருந்து அகமதுஷா வயிற்றுவலிக்காக மதுவருந்தி, நாடிழக்கும் பகுதி இங்கே தரப்பட்டுள்ளது.

1. பாத்துஷா — அரசன்.
2. ஏவல் — இறைவனால் விதிக்கப்பட்டவை.
4. அதபு — ஒழுக்கம்.
18. ஆதி — ஆதியாகிய இறைவன்.

10.1 கட்டபொம்மு கதை

ஆதாரம்: பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு கதை. ஸ்ரீமகள் அச்சகம், சென்னை. (அச்சிடப்பட்ட ஆண்டு தெரியவில்லை)

பாண்டி நாட்டிலுள்ள பாஞ்சாலங் குறிச்சியை ஆண்ட அரசனே வீரபாண்டிய கட்டபொம்மு (கி. பி. 1765 – 1799). அவன் சிற்றரசனாயினும் சிறந்த போர் வீரன்; வீரமும் நேர்மையும நாட்டுப்பற்றும் மிகுந்தவன். இந்திய நாட்டுக்கு வாணிகஞ் செய்யவந்து, படிப்படியாக நாட்டையே கைப்பற்றி ஆட்சி செய்ய முயன்ற பிரித்தானியருக்கு எதிராகப் போரிட்டு வீர மரணம் எய்தியவன்.

கட்டபொம்முவின் முன்னோர் ஆந்திரநாட்டிலுள்ள பல்லாரி மாவட்டத்திலிருந்து பாண்டி நாட்டில் வந்து குடியேறியவர்கள். இக்குலத்தவர் கம்பளத்தார் எனப்படுவர். கட்டபொம்முவின் மூதாதையொருவன் அக்காலத்திற் பாண்டி நாட்டை ஆண்ட ஜகவீரபாண்டியன் என்பவனுக்குப் படைத் தலைவனாயிருந்து அம்மன்னன் வாரிசு இல்லாமல் இறக்க, அவனுக்குப்பின் அரசுரிமை எய்தினன். இந்த வமிசத்தில் வந்த வழித்தோன்றலே வீரபாண்டிய கட்டபொம்மு.

அக்காலத்திலே தென்னாடு ஆர்க்காட்டு நவாபினுடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருந்தது. நவாப் ஆங்கிலேயருக்கு அடங்கி நடந்தான். சிற்றரசர்களாயிருந்த பாளையக்காரர் பலர் ஆங்கில ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால், கட்டபொம்மு உரிமையரசாக நாட்டை ஆளவேண்டும் என்று விரும்பினன். ஆகையால், அவன் ஆங்கிலேயருக்கு வரி கொடாமல் எதிர்த்து நின்றான். ஆங்கிலேயர் பொம்முவை எவ்வாறாயினும் அடக்கி ஒழிக்க வேண்டுமென்று எண்ணினர், கி. பி. 1792முதல்

1798 வரை, ஆறாண்டுக் காலமாகச் சண்டைகள் நிகழ்ந்தன. கட்டபொம்முவை எளிதில் வெல்லமுடியாதெனக் கண்ட ஆங்கிலேயர், பக்கத்திலுள்ள பாளையக்காரர்களைத் தூண்டி விட்டு உட்பகையைப் பெருக்கினர். இறுதியில், எட்டயபுரத்துப் பாளையக்காரன் கட்டபொம்முவுக்குத் துரோகஞ் செயது, அவனை ஆங்கிலேயர் பிடிப்பதற்குத் துணைசெய்தான். ஆங்கிலேயர் கட்டபொம்முவுக்குத் தூக்குததண்டனை விதித்தனர்; வீரன் கட்டபொம்மு தூக்குக்கயிற்றைத் தானகவே கழுத்தில் மாட்டிக்கொண்டு உயிர் துறநதான்.

கட்டபொம்முவின் வரலாற்றிலே அவனுக்குத் துணையாக நின்று போர்புரிந்த வீரத்தளபதி வெள்ளையத தேவன். இவன் கட்டபொம்முவின் தங்கையான வெள்ளையம்மாளை மணமுடித்தவன். வெளளையத்தேவனது வீரத்தைப் பாராட்டி, அவனுக்குப் 'பகதூர்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புச் செய்தான் கட்டபொம்மு, பகதூர் வெளளையத் தேவன் என்ற பெயர் மக்கள் நாவிலே 'பாதர் வெள்ளை' என்று வழங்கலாயிற்று.

கட்டபொம்முவின் வீரவரலாற்றை மக்கள் நாட்டுப்பாடல்களாகப பாடி மகிழ்ந்தனர். தமிழிலே ஒன்றுக்கு மேற்பட்ட கதைப்பாடல்கள் கட்டபொமமுவின் கதையொடு தொடர்புடைய 'பாதர் வெள்ளை', ஆங்கிலேயருடன் போரிட்டு வீர மரணம் எய்தியதையும், அவனது மனைவியாகிய வெளளையம்மாள் அழுது புலம்பி உடன் கட்டை ஏறியதையும் கூறும் பகுதி இங்கே தரப்பட்டுள்ளது.

வரி 1. ஊமத்துரை–ஊமைத்துரை; கட்டபொம்முவின் தம்பி; அண்ணனைப்போலவே வீரத்திலும் நாட்டுப்பற்றிலும் சிறந்தவன.

2 குச்சு உருமால்– மடித்த மேல்வேட்டி. குச்சு என்பது சீலைமடிப்பைக் குறக்கும்; உருமால் என்பது அங்வகஸ்திரத்தையும் தலைப்பாகையையும் குறிக்கும். உருது மொழிச் சொல்.

சுங்கு–கொய்சகம், சீலைமடிப்பு (தெலுங்கு).

7. சமுதாடு–ஒருவகைக் கத்தி, சமுதாளி (தெலுங்கு) வங்குசம்–இச் சொல் அங்குசம் என்று இருத்தல் வேண்டும்போலும்.

8. பட்டாக்கத்தி– வாள் (கன்னடம்).

11. வையாளி–குதிரையின் நாலுகாற் பாய்ச்சல்.

16. பாஞ்சை–பாஞ்சாலங்குறிச்சி.

19. திண்டு—சார்மெத்தை, அணை;
21. இடுக்கம்—துன்பம், ஒடுக்கம்.
22. ராணுவம்—படை, படைச் செருக்கு (இந்துஸ்தானி)
ராணியம்மாளுள்ள நாளினில் — கட்டபொம்முவின் காலத்தில் (கி பி. 1765—1799) ஆங்கில நாட்டில் இராணி ஆட்சி நடைபெறவில்லை. மூன்றும் ஜார்ஜ் மன்னரின் ஆட்சியே அக்காலத்தில் நடைபெற்றது. ஆயினும், பின்னர் விக்டோரியா மகாராணி கி. பி. 1876 இல் இந்தியச் சக்கரவர்த்தினியாகப் பிரகடனஞ் செய்யப்பட்டுப் பெரும் புகழுடன் ஆட்சிசெய்த காலத்திலோ, அதன் பின்னரோ இப்பாடல் தோன்றியிருத்தல் கூடும். அவ்வாறுயின் தனது காலத்தில் அல்லது அதற்குமுன் பேரரசு புரிந்த மகாராணியின் ஆட்சியிலேயே கட்டபொம்மு 'ராணுவம் பேசினன்' என்று கால வரன்முறையைக் கருதாமலே, நாட்டுக்கவிஞன் பாடியுள்ளான என்று இதற்கு அமைதி கூறலாம்.
23. காலன் துரை—தளபதி கொலின்ஸ் (Captain Collins).
26. தோட்டா—வெடிமருந்துச் சுருள் (உருது);
27. துருப்பு—சேனை (ஆங்கிலம்—Troop).
சோல்ஜர்—படைவீரன் (ஆங்கிலம—Soldier)
30. கூடாரமேரா—முகாம் (இந்துஸ்தானி)
32. பட்டாளம்—படைப்பிரிவு (ஆங்கிலம்—Battalion)
44. தமாசு—தமாஷ், பகட்டு, வேடிக்கை (இந்துஸ்தானி);
45. மேல மலையாளம்—மேலை மலையாளம்;
48 கொளத்தூர்—குளத்தூர்
49. கைகாரர் — சமர்த்தர்;
52. கம்பளம் — கம்பளத்தார்;
64. தீயைவைடா—தீயை வை அடா;
65 பாவலா—சுற்றித்திரிகை (உருது);
67 கண்டுயிருந்துமே—கண்டு + இருந்துமே; இப்புணர்ச்சி செந்தமிழ் வழக்கில் கண்டிருந்துமே என்றாகும். தமிழ்நாட்டுக் கிளைமொழியில் யகர உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்துள்ளது.
68. கவர்மெண்டார்—ஆட்சியாளர் (ஆங்கிலம்—Government);
69 சக்கம்மாள்—தெலுங்க நாட்டவர் வழிபடும் ஒரு பெண் தேவதை; (இசைக்கி + அம்மாள்);

10.2 சைத்தூன் கிஸ்ஸா

ஆதாரம்: அப்துல்காதர் சாகிபு, சைத்தூன் கிஸ்ஸா. சென்னை—இடா பார்த்தசாரதி நாயுடு சன்ஸ் சக்கரவர்த்தி பிரஸ், 109, தங்கசாலைத் தெரு. மதராஸ், 1947.

முஸ்லிம்களுக்கே உரிய இலக்கிய வகைகளுள் கிஸ்ஸா என்பதும் ஒன்று. இது அரபு மொழிசார்ந்த ஓர் இலக்கிய வகையாகும். கிஸ்ஸா என்ற அரபுச் சொல்லுக்குக் கதைசொல்லுதல என்பது பொருள். சைத்தூன் கிஸ்ஸா என்பது, சைத்தூன் என்னும் வீர மங்கையின் கதையைக் கூறும் ஒரு வீரசாகசக் கதைப்பாடலாகும். போரும் சண்டைகளும் நிறைந்தது, புராணப் பாங்கான கற்பனைப்புனைவுகள் மிகுந்த ஒரு கதை இது.

சைத்தூன் என்பவள் இறம் என்னும் நாட்டை ஆண்ட மன்னனின் மகள். யாராலும் வெல்லப்படமுடியாத வீரம் மிக்கவள். இறுதியில், கலீபா அலி (றலி) அவர்களின் மகன் முகம்மது அனீபா அவளை வெற்றிகொள்கிறார். தன்னை வெல்பவனையே மணம் முடிப்பது என்ற தனது சபதத்தின்படி, தன்னை மணந்து கொள்ளுமாறு சைத்தூன், முகம்மது அனீபாவை வேண்டுகிறாள். அவர் அவளை முஸலிமாக மதம்மாற்றி மணந்து கொள்வதாகக் கூறுகிறார். பின்னர் இருவரும் பல்வேறு இடங்களைத் தாண்டி இறுதியில் ஒன்று சேருகின்றனர்.

"இந்தி, பார்சி முதலிய மொழிகளில் வழங்கிய இக்கதையை அம்மொழியை வாசிக்கத் தெரியாதவர்கள் எளிதில் அறிந்து மகிழ்வு கொள்ளும்படி" பேட்டை ஆமூர் வாலைபாவா சாகிபு அவர்களின் குமாரர் அப்துல்காதர் சாகிபு அவர்கள் தமிழில், பாட்டும் உரையும் கலந்தநடையில் இயற்றியுள்ளார்கள். தமிழ்க்கதைப்பாடல் மரபையொட்டி அதே சநத அமைப்பில் இயற்றபபட்டுள்ளன. இந்நூல் நாட்டார் இலக்கிய வகையைச் சேர்ந்த ஒன்றேயாகும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புவரையும் நமது கிராமப்புறத்து முஸ்லிம் மாதர் கூடியிருந்து இக்கதைப்பாடலைப் பாடிச சுவைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இன்றைய இளம் தலைமுறையினருள் இது பற்றிக் கேள்விப்பட்டவர்கள் மிகச் சிலரே எனலாம். இங்கு கொடுக்கப்பட்டுள்ள பகுதி சைத்தூன் கிஸ்ஸாவின் ஆரம்பப் பகுதிகளில் ஒன்றாகும்.

10.	அபூபக்கர் சித்தீக்கு	—இஸ்லாத்தின் முதலாவது கலீபா, முகம்மது நபி (ஸல்) அவர்களின் உற்ற தோழர்.
11.	உமருகத்தாப்	—இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா. முகம்மது நபி (ஸல்) அவர்களின் உற்ற தோழர்.
53.	ஜட்டி	—மல்வன் (தெலுங்கு)
64.	இறைபுலிஅலி	—இறைவனின் புலியாகிய அலி என்பது பொருள். அலி (றலி) இஸ்லாத்தின் நான்காவது கலீபா; முகம்மது நபி (ஸல்) அவர்களின் மருகர்; அல்லாஹ்ாவின் புலி என இவர் அழைக்கப்பட்டார்.
68.	ஆதிதூதர்	—இறைவனின் தூதர், முகம்மது நபி (ஸல்) அவர்கள்.
87.	பதகு	வெற்றி – (அரபு).